

PORCELAIN TOWER OF NANKIN

நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம்.

ஓம் பரப்பிரம்மணே நம.

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

கமலம் - 1. Vol. 1 | சென்னை : அக்ஷயஸ்ரீ அற்பிசிமீ 1௳ 1926-ம்ஸ்ரீ அக்டோபர்மீ 17௳ | இதழ் - 7. No. 7

## ஆநந்த தரிசனம்

" ஹிருதயமாகிய ஆகாசத்தில் " அமிருத ஸ்வபாவத்தையும், பொன் போன்ற ஞான தேஜசையுமுடைய மனோமயமான புருஷன் வீற்றிருக்கின்றான். அந்தப் பிரம்மம் ஆகாசத்தைச் சரீரமாகவும், சத்தியத்தை ஆத்மாவாகவும், லீலையைப் பிராணனாகவும், ஆநந்தத்தை மனதாகவும் உடையவன். (இது தைத்தரீய உபநிஷத்து வாக்கியம்.)

***

" ஒலியின்றி, பரிசமின்றி " உருவின்றி, அழிவின்றி, சுவையின்றி, வாசனையின்றி நிலையா யுள்ளதெதுவோ, அதுவே பெரிதிலும் சிறந்தது, மாறாதது, தலைமையானது. இதை யறிந்தவர் மிருத்தியுவின் வாயினின்றும் தப்புகிறார். (இது கடோபநிஷத்து வாக்கியம்.)

***

" அவனை " நமது பார்வையால் காண்பதற்கு அவனுக்கு எவ்வித ரூபமுமில்லை. " அவனை " ஒருவனும் கண்ணால் காண்கிறதில்லை. புத்தியோடு பொருந்திய ஹிருதயத்தாலும், மனதாலும் அறியத் தக்கவனென்று உணர்ந்து கொண்டவர்கள் அமிருதராகின்றனர். (இது கடோபநிஷத்து வாக்கியம்.)

***

"விருப்பம் நினைப்பிற்குக் காரணம்." இவ்வுலகத்தில் ஓரிடத்திலும் எப்படிப்பட்ட செய்கையும் விருப்பமில்லாததாய்க் காணப்படவில்லை. எந்தெந்தக் காரியத்தை ஒருவன் செய்கிறானோ அதது விருப்பத்தின் தொழிலாகவே இருக்கிறது. பயன்களில் விருப்பம் வையாமல் அந்தக் கடமைகளைச் செம்மையாய்ச் செய்பவர் சாவில்லாத பதத்தை அடைவர். இவ்வுலகத்திலும் தாம் கருதியபடி விரும்பினதை யெல்லாம் அனுபவிப்பர்.

***

"கீதையின் வாக்கியம்":—(1) ஆதியற்றவனும், பிறப்பற்றவனும், ஜகதீசுவரனும் ஆக என்னை எவன் அறிகின்றானோ அவன் ஜனங்களுக்குள் மவுட்டிய மற்றவனாக, ஸர்வ பாபங்களினின்றும் விடப்படுகிறான். (2) நான் ஸமஸ்தமான ஜகத்துக்கும் கர்த்தன்; என்னால் ஸமஸ்தமும் பிரவர்த்திக்கின்றது—என்று நினைத்துச் சமபாவத்தையுடைய பண்டிதர்கள் மேற்சொன்ன கருத்தோடு என்னைப் பூஜிக்கிறார்கள். (3) நித்தியமாய்ப் பிரியாத பிரீதி பூர்வகமாக யார் பஜிக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த ஞான யோகத்தைக் கொடுக்கிறேன். அந்த யோகத்தினாலேயே அவர்கள் என்னை யடைகிறார்கள். (4) அவர்களுக்கே தயை செய்யும் பொருட்டு அபிப்பிராயப்படும் நான் பிரகாசிக்கா நின்ற ஞான விளக்கினால் அவிவேகத்தால் பிறந்த அஞ்ஞானத்தை நசிக்கச் செய்கிறேன்.

***

"துஷ்டனைக் கண்டால் தூரவிலகு" என்பதுபோல் பேய்களும் பிசாசுகளும் வஸிக்கும் இடத்தில் பெண்கள் போகலாகாது. இம்மாதிரியே துஷ்டர்களின் ஸகவாஸத்தை நல்லவர்கள் நாடலாகாது. ஒரு சமயம் துஷ்டன் தானாகவே சாதுக்களின் கூட்டத்தில் கலப்பானாகில் அவனை விரட்டிவிடுவது நன்மை. இன்றேல், அந்தத் துஷ்டனுக்கு வேண்டிய ஹிதோபதேசம் செய்து, வெளியே போகச் செய்வது நலம். சில பூதங்களுக்கும் பேய்களுக்கும் ஆடுகளையும் மற்றவைகளையும் பலி கொடுத்து வீட்டைவிட்டு அகன்று போகும்படி செய்வதுபோல் ஸாப்தீக குணமில்லாத மூர்க்கர்களை நல்ல வார்த்தைகளால் வெளியே அனுப்பி விடுவது விவேகம். ஹே சாக்கடையே, ஏன் துர் நாற்றத்தை வீசுகிறாய் என்று பாட்டைசாரி கோபங்கொண்டு அதன்மேல் கல்லை விட்டெறிந்தால் அது அவனுடைய துணியிலும் சரீரத்திலும் தாக்கி அஸங்கியப்படுத்தும். அதுபோல் பொல்லாதவர்கள்செய்யும் அகிருத்தியங்களைக் கண்டு கோபித்துக் கொள்வதால் நமக்கே தீங்குண்டாகும். ஆதலின் இவ்விஷயத்தில் நாம் நிதானத்துடன் பொறுமையை ஏற்பது உத்தமம். சிறிது பொறுமை பாராட்டாமல் சினம் கொள்வது பெரிதான கேட்டுக்கிடம். பகவானைச் சேவிக்கக் கோயிலுக்குச் சென்றவர்கள் வந்த

காரியத்தை மறந்து பரஸ்பரம் சண்டையிட்டுக்கொள்வது மௌடீக மன்றோ?

***

"தெய்வத் தியானம்" செய்வதில் மட்டும் ஸகல மதஸ்தர்களும் ஓரேவித அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்கள். ஈசுவரனைப் பஜியாதவர்கட்கு ஒரு போதும் மனோதிர்ப்தி யுண்டாகாது. எத்தனை ஐச்வரியங்கள் குவிந்து கிடந்தாலும் தெய்வபக்தி யில்லாதவன் பரம ஏழையேயாவன். அவனுடைய ஹிருதயம் மிருதுமயம் அற்றுப்போய் பாழும் கல்லாகி, அத்துடன் எல்லாவற்றிலும் வறுமையுற்று வாதனையடையும். தியானம் செய்வதென்ற கடமையை ஒவ்வொருவரும் முக்கியமாய் வைத்துக்கொண்டு முறை தவறாமற் செய்துவரின் அதைவிட வேறு ஆநந்தமிராது. வனத்திலும் மலைக்குகையிலும் தபஸ்விகள் மனோத்ஸாகமடைவது மண்-பெண்-பொன்னாலல்ல, மனிதசங்கத்தாலுமல்ல; தெய்வத் தியானத்தாலேதான். நம்முடைய மூதாதைகளெல்லாம் நித்ய கர்மங்களை வழுவில்லாமற் செய்து வெகு காலம் வாழ்ந்திருந்தனர். அன்னோர் அற்ப சுகங்களில் அதிகமாக மனதை நாட்டவில்லை. தெய்வ பக்தியானது ஆயுள் விர்த்தியையும் சரீர ஆரோக்கியத்தையும் மனஸ்ஸந்துஷ்டியையும் விளைக்கும்.

***

"மிதமே ஹிதம்" என்பர். ஆற்றில் ஜலம் குறைந்தால் ஜனங்கள் தாகத்தால் வருந்துகின்றனர். ஜலம் அதிகமானால் வெள்ளத்தைக் கண்டு பீதியுறுகின்றனர். எப்போதும் நடுத்தரமாய் ஓடிக்கொண்டிருந்தால் ஆற்றைக்கண்டு யாவரும் ஆநந்தப்படுவார்கள். இம்மாதிரியே தானம் கொடாமலே காலம் கழிக்கும் தனிகர்களைக் கண்டால் யாசகர்கள் தூறுவர். அபரிமிதமாய்த் தானம் கொடுப்போனைப் பரிகாஸம் செய்து அவனுடைய எண்ணம் வேறு என்பர். நடுத்தரமாயிருந்து யாசகரின் தராதரம் நிலைமை தன்மை முதலியன அறிந்து தானம் செய்வோர் எப்போதும் இகழ்ச்சியடையார். நடுவு நிலைமையானது என்றைக்கும் ஸர்வ சிலாக்கியம். ஸ்நானம், போஜனம் முதலிய எல்லாக் காரியங்களிலும் மிதமாயிருப்பவர்க்கு எந்நாளும் குறைவில்லை.

***

"மனம் அடங்கினால் மாண்புண்டாகும்." ஸர்வ சக்தியும் மனத்தினிடமே இருக்கிறது. மனதினால் மாத்திரமே தான் பகவானையெட்டக்கூடும். அவரை யறிவதற்குப் பல வழிகளில்லை. பல வழிகள் இருப்பதாய் மலைப்பவர் இருளையே பின்பற்றிச் செல்லுவோராவர். பிரம்ம ஸ்வரூபத்தை நன்றாயறிவேனென்பவன் முற்றும் அறியான். ஏதும் அறியேன் என்கிற ஸாந்தப் பிரகிருதியுள்ளவனே இனி அறியத் தகுந்தவனாவான். பிரம்மம் தெரியுமென்ப

வர்களுக்குத் தெரியாது. தெரியாதென்பவர்களுக்குத் தெரியும். மனதினால் தன்னில் தானாகவே அறியத்தக்கதென்று அறிபவன் அமிருதனாவான்.

***

" அறிந்தார் அறிவார் அவர் பெருமை " என்பது போல அறிவில் தெளிந்த பக்குவிகளே பகவானைக் கண்டடையத்தக்கவர். தியானமற்றவர்களுக்குப் பகவான் வெகு தூரத்திலிருக்கினும், தியானிப்பவர்களுக்கோ தூரமற்று வெகு சமீபத்திலேயே இருக்கின்றார். தியான மார்க்கத்தில் காண்போருக்கு இவ்விடத்திலேயே ஹிருதய குகையிலே விளங்குகின்றார். அவரை முழுமையும் அறியவோ ஒருவருமில்லை. அவருக்கு வேறு விதமாய் லக்ஷணங்கூறி முடியாமையினால் அவரை ஆதிமகா புருஷனென்றும், ஆதிமூலமென்றும் துதிக்கின்றார்கள்.

***

" ஞானயோகம் " :—பகவத் ஸ்வரூபமின்னதென்றும், மற்ற ஜீவஜடங்களுடைய ஸ்வரூபம் இன்னதென்றும் அறிந்துகொள்வது மாத்திரமே ஞான யோகமென்று மலைக்கவேண்டாம். அந்த ஸ்வரூப ஞானத்தோடு, அவற்றால் நம்மீது பொருந்தும் கடமைகள் இன்னவையென்றும், அவற்றைச் செலுத்தும் மார்க்கங்கள் இன்னவையென்றும் அறிந்து கொண்டு, அவற்றைத் தானும் சோர்வின்றி அனுஷ்டிக்கவேண்டும். துஷ்ட மனதை நன்னிலைமைக்குக் கொண்டுவருவதற்கு பகவத் தியானமே பிரதானம். இதிலும் பகவானுடைய திருவிளையாட்டைப் பாடல்களாகப் பாடித் துதிப்பது பரம சிலாக்கியம். எப்போதும் ஈசுவரனுடைய நினைவே இருந்தால் சித்தம் நிர்மலமாகும். அப்போது சகல ஸித்திகளுமுண்டாகும். மோக்ஷலக்ஷ்மி நம்மைத் தேடி வருவாள். ஆதலின் நித்தியானந்தத்தை நாடி ஸதா நிர்மலனைப் பிரார்த்திக்கக்கடவோம்.

---

பின்கண்ட கடிதங்கள் வந்தனத்துடன் மறுக்கப்பட்டன :—(1) கலிபுருஷனின் மகாத்மியம். (2) அமங்கலியருக்கு ஆதாரமெது ? (3) நடுவெழுத்தலங்காரம், (4) 753-வது சந்தாதார்—தங்களின் நல்ல மனதிற்கு வந்தனம். பத்திரிகையில் இடமில்லை. (5) நீங்கள் வருண தர்மப்படி வாழவேண்டுமா ?—வியாசம் நன்கு அமையவில்லை. (6) தூத்துக்குடி ஷண்முகபுரம் " நாடார் " (7) ஸ்ரீமான் சாது அய்யா (8) குறிஞ்சி, (9) ஜனசாரச் சீர்திருத்தம், (10) முத்து, (11) பெருமக்கள் திருமொழிகள் முதலியன. வியாசங்களைத் திருப்பி யனுப்புவதற்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும் (ப—ர்.)

---

# ஆநந்த குண போதினி

அக்ஷயஹு அற்பிசிமீ 1உ


## நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம்

—மாதாவின் ஞாபகார்த்த ஊழியம்.—

முற்காலத்தில் சீனா தேசத்துப் பிரதான பட்டணமா யிருந்த நான்கின் என்னும் நகரத்தில் பீங்கான் கோபுர மொன்று யாவரும் புகழ்ந்து வியக்கும்படி மிக்க சிறந்ததா யிருந்தது. இப்போது மெத்தைகளும் மேடைகளும் மாளிகைகளும் அழிந்துபோய், அப்பெரிய நகரம் ஒரு சிறிய ஊராயிருக்கிறது. மேலும் அநேக வருஷங்களுக்கு முன்பு நேர்ந்த ஒரு யுத்தத்தினால் சீரழிந்து ஈனஸ்திதிக்கு வந்துவிட்டது. ஆகிலும், முன்னொரு காலத்தில் இது சிறந்த பட்டணமா யிருந்ததற்கு அடையாளங்கள் அங்குமிங்கும் சிதறியிருக்கிறதை இப்போதும் காணலாம்.

மேற்சொல்லிய பீங்கான் கோபுரம் 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசாண்டுவந்த ஒரு சக்கரவர்த்தி தன் தாயின் பெயரை என்றென்றைக்கும் இவ்வுலகத்தில் நிலை நாட்டும்பொருட்டுக் கட்டுவித்தார். அந்தத் தாயார் மற்றப் பெண்பிள்ளைகளைவிட நற்குண நற்செய்கைகளில் எவ்வளவு புகழ்ச்சி பெற்றிருந்தாரோ, அப்படியே இந்தக் கோபுரமும் எங்கும் ஈடில்லாததாய் இருக்க வேண்டுமென்று அதிகப் பிரயாசைப்பட்டுக் கட்டுவித்தார். கட்டி முடிக்க இருபது வருஷகாலம் சென்றது. அதனுடைய அழகையும் காம்பீரியத்தையும்பற்றி இத்துடன் உள்ள படத்தில் ஒருவாறு நிதானிக்கலாமே யல்லாமல், அதன் விசித்திர வேலைப்பாடு பூரணமாய் விளங்காது. இப்படத்தால் அதைக் கண்ணாரப் பார்க்கநேர்ந்தவர்கள் தவிர, மற்றபடி யாருக்கும் அதைத் தக்கபடி வர்ணிப்பது முடியாது. அநேக வஸ்துக்களைப் படங்களினால் நன்றாய் அறியலாமானாலும், சில வஸ்துக்களின் பெருமை கண்ணாற்கண்டாலன்றிப் படங்களினால் அவ்வளவு நன்றாய்ப் புலப்படாது. அப்படிப்பட்ட அபூர்வங்களில் இக்கோபுரத்தையும் ஒன்றாகச் சொல்லலாம்.

இக்கோபுரம் ஒன்பது அடுக்குகள் அல்லது நிலைகள் அமைந்து, அடிமுதல் நுனிவரைக்கும் பளபளப்பான வர்ணமிட்ட பீங்கானால் மூடப்பட்டு, 200-அடி உயரமாயிருந்தது.

ஒவ்வொரு நிலைக்கும் நுனியில் ஒரு பெரிய பித்தளைக் குண்டு வைத்து அதினின்று எட்டு மூலைகளும் எட்டு இரும்புச் சங்கிலிகள் மணிகள் கோத்துத் தொங்கவிட்டிருந்தன.

வெளிப்புறத்தில் விளக்குகள் மாட்ட இடங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

விளக்குகளை ஏற்றினால் வெளிச்சம் ஆகாயமெல்லாம் பரவி பார்ப்போருடைய கண்ணைப் பகட்டத்தக்க ஜோதிமயமாய் ஆகாய முழுதும் விளங்கும். மகா அற்புதகரமான காக்ஷியாய் அநேக மைல்களுக்கு அப்பாலும் தெரியுமாம்.

நாநாவித வர்ணமுள்ள முத்துக்கள், விலையுயர்ந்த கற்கள், பொன், வெள்ளி, பட்டு—முதலிய அத்தேசத்திலுள்ள உயர்ந்த பொருள்களிலெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வைத்து இரண்டு பித்தளைக் கலசங்களில் அடக்கம்பண்ணி கோபுரத்தின் சிகரத்தில் வைத்திருந்தன. அப்பொருள்களில் தேயிலையும் ஒன்று.

"தந்தை தாய்ப் பேண்" என்கிற வாக்கியத்துக்கு முக்கிய உதாரணமாகத் தாயினிடத்திலிருந்த அத்தியந்த விசுவாசத்தினால் அந்த அம்மையின் பேர் எந்நாளும் வழங்கிவர வேண்டுமென்று எண்ணி, அவ்வளவு மேன்மையாக ஒப்பற்றதாய்க் கட்டிவைத்த அககோபுரம் இப்போது என்னமாய்ப் போயிற்று பாருங்கள். மனிதனுடைய செய்கைகள் யாவும் இப்படியேதான். "தோன்றின—மறையும்" என்பது உண்மை.

1856-ம் வருஷத்தில் சீனா சக்கரவர்த்திக்கும் சில கலகக் காரருக்கும் சண்டை நடந்தபோது அக்கலகக்காரர் அந்தப் பீங்கான் கோபுரத்தை நாசமாக்கிவிட்டனர். அதன் உருவே தெரியாமல் மறைந்துபோயிற்று. உலகத்திலுள்ள அற்புதக் காட்சிகளில் ஒன்றா யிருந்த அந்தப பீங்கான்கோபுரம் மாத்திரம் உட் கலகக்காரரால் உருவழிக்கப்படாதிருக்குமாயின், இப்போது வெகு க்ஷீண தசையி லிருக்கிற நான்கின் பட்டணம் அந்தக் கோபுரத்தின் உன்னதத்தில் யாவரும் வியக்கத்தக்க அதிசிறப்புள்ளதான நகரமாய் ஜ்வலிக்கு மன்றோ? அக்கோபுரத்தின் படமே எவ்வளவோ அழகாய் இருக் கும்போது அக்கோபுரத்தை நேரிற் கண்டார்க்கு எத்துணைப் பரம சுந்தரமாய்த் தோன்றியிருக்குமோ!

இவ்வளவு அழகிய கோபுரமானது மாதாவின் ஞாபகார்த்த மாக நிர்மாணிக்கப்பட்டதென்பதை யறிந்தபிறகு, உங்கள் மாதா வுக்கு—அதாவது, மாதாவினும் பெரிய தேசமாதாவுக்கு—பாரத மாதாவுக்கு நீங்கள் செய்யப்போகும் ஊழியம் யாது?

---

தீபாவளியில் கதரையே உடுத்துங்கள்.

கதர் தான் விடுதலைக்கு வழி.

# மதிப்புரை

**(கனம் திவான்பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை.)**

[அவரது ஜீவிய சரித்திரம். திருவாளர் ஆ. ஷண்முகம் பிள்ளை யவர்கள் எழுதியது. விலை அணு 4. செல்வம் அண்டு கம்பெனி, புஸ்தக வியாபாரிகள், பரங்கிமலை.]

கனம் ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையவர்களின் ஜீவிய சரித்திரம் ஒவ்வொரு தமிழனுக்கும் புத்துயிர் அளிக்கவல்லது. 16-வயதில் பி. ஏ. தேர்ந்ததும், 19-ம் வயதில் எம். ஏ. ஆனதும், 14-பாஷைகளில் பயிற்சி கொண்டிருந்ததும் சாமான்ய விஷயங்களன்று. வாசிப்பவர்க்கு விசேஷ ஊக்கம் உண்டுபண்ணும். அவரது நீண்ட ஜீவியத்தில் பிரதானமான "புள்ளிகள்" மட்டும் இந்நூலிற் காணப்படுகின்றன. ஏனையவற்றையும் சேகரிக்க முயல்தல் சிலாக்கியமாகும். இந்நூலின் தமிழ் நடை மிருதிவ்யம். கனம் பிள்ளையவர்களின் உருவப் படமும் இதில் உளது.

**திருச்சிநேசன்**

[மாதம் இருமுறைப் பிரசுரம். சந்தா ரூ. 3. ஆசிரியர்கள் ஸ்ரீமான் எஸ். பார்த்தஸகன், ஸ்ரீமான் ஏ. ஆர். ராஜகோபாலன். ஆண்டார் தெரு, தெப்பக்குளம் போஸ்ட் திருச்சி.]

"திருச்சிநேசன்" என்ற பெயர் திரிச்சிவாசிகட்கு மிக மிக இனியது. இதன் முதல் இலக்கம் வரப்பெற்றோம். இப்பெயருடன் 24-வருஷங்களுக்கு முன்னர் திரிச்சியில் ஒரு வாரப் பத்திரிகை 10-வருஷ காலம்போல் பிரசுரமாகி வந்தது. அதன் ஆசிரியர் ஸ்ரீமான் மருதூர் M. D. சுப்பிரமணிய பிள்ளை என்பவராவர். இப்பொழுது அதே பெயர்கொண்டு வேறு இருவரால் வெளி வந்துள்ள இப்பத்திரிகையை அன்புடன் வரவேற்கின்றோம். தற்போது திரிச்சியிலுள்ள பத்திரிகைகளுடன் இப்புதிய ஸகோதரனும் சேர்ந்து உலவுவானாக. இதன் வாசக நடை கம்பீரமா யிருக்கின்றது. திரிச்சி நேசன் நீடூழி வாழ்க.

## முன்னும் பின்னும்

---

விவாகத்திற்கு முன்பு எதையும் ஒருவனுக்குத் தர மனம் வரும்.

விவாகத்திற்குப் பின்போ சேர்த்துவைக்கவே புத்தி போகும். தந்ததையும் வாங்க நினைக்கும்.

குழந்தை பிறப்பதற்கு முன்பு எதையும் பிறருக்குத் தந்துவிடப் பெண்ணுக்கும் ஆணுக்கும் புத்தி போகும்.

புத்திரபாக்கிய முண்டானபிறகு அவர்களுக்குப் பிற்காலம் உதவுமே என்ற எண்ணம் எதையும் கொடுக்கத் தடைசெய்யும். நீ இதில் எதில் சேர்ந்தவன்?

# தீபாவளியில் கதர் அணிதல்

ஆம், அது நமது கடமை. கதர் உடுத்து வாழவே நாம் பிறந்தோம். கதர் அணிந்து மகிழ்வதே நம் தாய்த் திருநாட்டிற்கு நாம் செய்யும் முதல் திருப்பணியாகும். நாட்டுத் துணியைத் தரித்து நலம்செய்த முன்னோர்களின் வம்ஸத்தினராகிய நாம் அவர்களைப் போலவே கதர்தான் உடுத்தவேண்டும். நம் நாட்டு வஸ்திரத்தையே நாம் தரிக்கவேண்டும். "காக்காய்க்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல, நமது ஊர் துணிதான் நமக்குத் தங்கம். அது கரடுமுரடாயிருப்பினும் கனத்திருப்பினும் நாம் அதைப் பாராட்டமாட்டோம். நமது குழந்தை கனத்திருக்கிறதென் றெண்ணி அதைத் தூக்க நாம் பின்னடைகிறோமா? எவ்வளவோ கனத்ததான ஸம்சாரத்தையும், மற்றும் உலகத் தொல்லைகளையும் தாங்கிச் சுமந்துச் சமாளிக்கத் தேர்ச்சி கொண்டுவிட்ட நமக்கு இந்தக் கதர் ஒரு கனமா? நம் நாட்டுத் தொழிலை நாம் ஆதரியாமல் பின் வேறு யார் ஆதரிப்பது? நமது குடித்தனத்தை நாம் ஆதரிக்காமல் பின் வேறு எவர் ஆதரிப்பது? நாட்டு வேலையும் வீட்டு வேலையும் நம்முடைய முதல் வேலையல்லவா? நாட்டுத் தொழிலை ஆதரணைபுரியாமல் ஓயாமற் பேசும் தேசாபிமானம் பாஷாணமே யாகும். அது பாசாங்கே யாகும். "அன்பு" என்ற ஒன்றை உள்ளத்திலே கொண்டு எவ்வளவு உழைக்கிறோம். அதற்காக எத்தனைச் சுமைகள் தாங்குகிறோம்? அந்த அரிய அன்பு நம் நாட்டினத்து நமக்கு இருப்பதாகில்—அது உண்மையே யாகில்—அதைக் கதர் அணிவதில்தான் வெளிப்படுத்திக் காண்பித்துக் கொள்ள வேண்டும்.

உலகத்தில் ஒரு மனுஷ்யனுக்கு வேண்டியது அன்னமும் வஸ்திரமுமாம். அன்னத்தை நமது வீட்டிலேயே செய்துகொள்ளுகிறோம். நமக்கு அன்னம் ஊட்டி வளர்க்கவே பெண் தெய்வங்கள் நம்முடன் எப்போதும் இருந்து துணை புரிகின்றனர். அவர்களின் அழகிய கமல மலர்க் கரங்களால் ஆக்கப்பட்ட அன்னத்தின் சுவைக்கு நிகர் இவ்வுலகில் உண்டோ? சோற்றுக் கடைகள் எனும் இடத்தில் சாதத்தை விலைக்குப் பெற்றால் அதில் வீட்டுச் சுவையைக் காண முடியுமா? வீட்டில் செய்யும் பண்டத்திற்குள்ள இனிமை கடையில் விற்கும் பண்டத்துக்கு வருமா? அப்படியே மிகுந்த ருசிகரம் அதற்கு ஏற்படினும், வீட்டிற் செய்தவை என்னவோ ஒரு மாதிரியாக இருப்பினும் அபிமானம் எங்கே பாய்கின்றது?—வீட்டுப் பண்டத்தில் தான். அதுதான் திருப்தியைக் கொடுக்கும். போதும் போதும் என்கிற வரையும் புசிக்கவைக்கும். உப்பு இல்லையோ, புளியில்லையோ, காரம் அதிகமோ—என்னவோ,—நாம் கஷ்டப்பட்டுச் சமைத்த சமையல் நமக்குத் தேவாமிர்தமாம். அதுவே நமக்குத் தேவருணவாம்.

அன்னத்திலே இத்தனைத் தெளிந்த ஞானம் கண்டுகொண்ட நாம், அன்னத்திற்குப் பிறகு உள்ள வஸ்திரத்திலும் அறிவு விளக்கம்பெற வேண்டாமோ? நாம் நம் வீட்டிற் சமைத்து உண்பதிலே உபயோகிக்கும் பண்டங்கள் யாவும் நம் நாட்டில் விளைந்தவை-உற்பத்தியானவை. அதைத் தயாராக்கி அந்தத் தொழிலால் நம்மவர்களான எத்தனையோ லக்ஷம் ஜனங்கள் ஜீவனார்த்தம் நடத்துகின்றனர். அறியாத சில பேதைகள் தான்

மேனுட்டுப் பால் டப்பிகளையும் மற்றவைகளையும் வாங்கி அலங்கோலம் தாங்குகிறார்கள். ஐயோ! பால் டப்பியைத் திறந்ததும் களிம்பு போல், சீழ்போல் ஏதோ ஒரு வெண்மையான ஜலம் வெளியில் வருகிறது. அது பார்க்கவே அசங்கிதம் தருகிறது. சிறிது எடுத்து வாயில் இட்டால் ஏதோ ஒருவிதத் தித்திப்பு தோற்றுகிறது. ஆவின் பாலுக்குள்ள அபூர்வ மணம்-சுவை அதனிற் காணவே காணோம். எல்லாம் விளம்பர மயக்கே, ஏமாற்றும் இந்திர ஜாலமே. இப்படியே நெடுக ஒவ்வொன்றுமாம். நமது வீட்டுக்குள் உரியிலே யிருக்கும் பானையில் உள்ள பாலின் சுவை இதில் வருமோ? எதுவும் நம் வீட்டில்-நம் நாட்டில் செய்ததே நமக்கு இனியது ஆகும். அன்னத்தை வீட்டில் சமைப்பதுபோலவே வஸ்திரத்தையும் நமது நாட்டில்தானே நாமே செய்துகொள்ள வேண்டும். நமக்கு அவகாசமின்றேல், அது செய்து ஜீவிப்பவரை—நாம் செய்யவேண்டியவற்றை அவர்கள் செய்வதற்காக மகிழ்ந்து அவர்களை யாதரிக்கவேண்டும். ஒரு காசு செலவானாலும்-அந்த ஒரு காசு நம்மவர் கையிலே போய்ச் சேருகிறதா-நமது நாட்டிலேயே தங்கி நிற்கிறதா என்று பார்த்துச் செலவிடவேண்டும். ஒரு ஆங்கிலேயர் ஆங்கிலக் கம்பெனியாகிய ஹிக்கின் பாதம் கம்பெனியில் ஒரு புத்தகம் வாங்கி வரச் சொல்லுகிறார். அங்கு விலை ரூபா பத்து. அதே புஸ்தகம் ஒரு இந்தியக் கம்பெனியில் வேறு பதிப்பாயுள்ளதின் விலை ரூபாய் ஆறுதான். சேவகன் இரண்டிடத்திலும் விசாரித்துவிட்டு விலை நயம் கருதி ஆறு ரூபா பெறும் புத்தகம் வாங்கிச் சென்று ஆங்கிலேயரிடம் தந்து, ஆறு ரூபாய்க்கான ரசீதையும் அவர்பால் அளிக்கின்றான். அந்த ரசீதில் இந்தியக் கம்பெனியின் பெயரைக் கண்டதும் ஆங்கில கனவானுக்குக் கோபம் அதிகரிக்கிறது. தமது பணம் தன்னவர்களின் கம்பெனியிற் சேரவில்லை யென்று வருந்தி, அப்புத்தகத்தைச் சேவகனின் முகத்தில் விட்டெறிந்து பத்து ரூபாயே தந்து ஹிக்கின்பாதம் கம்பெனியிலேயே வாங்கி வரும்படி ஆக்ஞாபிக்கிறார். இது எதைக் காட்டுகின்றது? தன் காசு தன்னவர்களின் கையிலேயே விழவேண்டும். மற்றவர்களிடம் அது போகக்கூடாது. விலை அதிகமானாலும் தன்னவர்களிடமே வாங்கவேண்டும் என்ற தன் மதிப்பையும் தன்னவர்கள் என்ற உணர்ச்சியையு மன்றோ இது விளக்குகின்றது. இதுவே தேசாபிமானமாம். இந்த உணர்ச்சியே அவர்களின் நிகரற்ற உன்னதத்திற்கும் காரணமாயிற்று. இதிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய படிப்பினை யாது? நமது நாட்டில் விளைந்ததை நாம் உண்ணவேண்டும்; நம் நாட்டிற் செய்ததை நாம் உடுத்தவேண்டும்; நம் நாட்டின் காசு நம் நாட்டினரின் கையிலேயே விழப் பார்க்கவேண்டும்; நம் நாட்டு ஏழைகள் நம்மால் ஏதோ கொஞ்சமாவது ஜீவிக்கும்படியாக இருக்கவேண்டும்— என்ற படிப்பினையே. இதுதான் மகா பெரிய படிப்பினை. இதை உணர்ந்துள்ள நாடும், நாட்டினரும் வெகு துரிதத்தில் உன்னதம் கொண்டுவிடுவர் என்பது உறுதி.

அங்ஙனமாக, நாம் இப்போது இந்தத் தீபாவளியில் செய்யவேண்டியதென்ன?—உடுத்தவேண்டியதென்ன? நம் நாட்டிற் செய்த தங்கமான கதரையே நாம் வாங்குதல்வேண்டும். அணிதல்வேண்டும் அந்தக் கதர்தான் நமது பெரியோரும் இராஜ ரிஷியுமான காந்தி யடிகளுக்கு உகந்ததாகும். அதைத் தரியுங்கள் என்பதே அவரது உபதேசமாகும்.

பாரத மாதாவும் கதரையே வாங்குமாறு ஆக்ஞாபிக்கின்றார். நமது கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளும் கதரையே அணியும்படி நமக்கு உத்திரவிடுகின்றனர். தீபாவளி எத்துணையோ உத்கிருஷ்டம் பொருந்திய நாள். ஸ்ரீ கண்ணபிரானுக்கு உகந்த நாள். இந்திய மக்கள் யாவர்க்கும் இனிய நாள். காலஞ்சென்ற நமது மறவாத தலைவரான ஸ்ரீ ஜீ. சுப்பிரம்ணிய ஐயர் இருபத்தொரு வருடங்களுக்கு முன்பு இந்தத் தீபாவளி தினத்தை தேசியத் திருநாளாக்கி, அந்த நாளில் சுதேசிய நிதிக்குப் பணம் சேகரிக்குமாறு ஏற்பாடுசெய்து தீபாவளி பண்டிகையை ஜாதீய பண்டிகை யாக்கி, இந்திய ஜாதி முன்னேறுதற்கான முயற்சியைத் தீபாவளி நாளில் தொடங்கும்படி காட்டி யருளினார். உடனிருந்து அவ்விதமே நடப்பித்தும் வைத்தார். அப்போது சுதேசீய நிதியின் வசூலுக்கு உபயோகமாய் நின்ற தீபாவளி தினத்தை, இப்போது நாம் கதரின் வியாபகத்திற்குரிய நன்னாளாக்கிக் கொண்டு, நாமும் கதர் அணிந்து, மற்றவர்களையும் கதர் அணியச் செய்வித்து, இந்தத் தீபாவளி தினமுதற்கொண்டு இன்னும் தீவிரமாகவும் உண்மையான உள்ளத்துடனும் நாட்டிற்குத் தொண்டுபுரிவோமாக. புது சபதமும்-புது சத்தியமும்-புது உறுதியும் செய்துகொள்ளக் கடவோம். கடைசியாக ஒரு வார்த்தை: துறவிக்குக் காவியுடை எவ்விதம் பிரதான அடையாளமாகுமோ, அதே போல் பாரதத் தாயின் சேவையைச் செய்யும் மக்களுக்குக் கதர்தான் முதல் அடையாளமாகும். சுமங்கலி என்பதற்கு மாங்கல்யம் முன்னடையாளமாக நிற்பதுபோல், தேச பக்தன் என்பதற்குக் கதர்தான் முதற் குறியாம், மங்கள வஸ்துவாம். அதனை நாம் நன்குணர்ந்து தீபாவளியில் கதர் ஆடைகள் அணிந்து நமது பாரதத் தாய்க்குத் தீபாவளி மங்களம்பாடி வணங்கக் கடவோம்.

---

## கேள்விகள் ?

1. பிரதி தினமும் உன் வீட்டுச் செலவு எவ்வளவு?
2. ஒரு மாதத்திற்கு அரிசி எவ்வளவு ?
3. உன் தனி சொந்தச் செலவு ஒரு மாதத்தில் எவ்வளவு ?
4. சும்மா உட்கார்ந்தபடியே உன்னோடு உண்பவர் எத்தனை பேர் ?
5. உன் மாத வருமானம் என்ன ? மீதி என்ன ?

# கேதாரி கௌரி விரதம்

## —அதன் வரலாறு.—

ஸ்ரீ கயிலாயத்திலே பரமேச்வரனும் பார்வதா தேவியும் வீற்றிருக்குங் காலையில், ஒரு நாள் பிருங்கி மகரிஷியானவர் பார்வதியம்மனுக்கு வணங்காது பரமேச்வரனை மாத்திரம் கண்டு நமஸ்கரித்துச் சென்றார். இவ்விதம் தன்னை விலக்கி வணங்கியது பார்வதி தேவிக்குக் கன வருத்தமாகி, கைலாயத்தை விட்டுப் பூலோகத்திற்கு வந்து வால்மீக ரிஷியின் பூங்காவனத்தில் தங்கினார். வால்மீக ரிஷி தேவியை வணங்கி யாவும் தெரிந்துகொண்டார். அவரை நோக்கிப் பார்வதிதேவி, ஓ மகரிஷியே! இந்தப் பூலோகத்திலே நான் ஒரு விரதம் அநுஷ்டிக்க வேண்டும்; அது நூதனமாயும் இதுகாறும் எவரும் அநுஷ்டியாத விரதமாயும் இருக்கவேண்டும்; அவ்விதம் ஒன்றிருக்குமானால் எனக்கு நீர் அருளவேண்டுமென்று கேட்க, அதற்கு அம்முனிவர், இப் பூலோகத்தில் எவருக்கும் தெரியப்படாநின்ற விரதமொன்றுண்டு. அந்த விரதத்திற்குக் கேதாரி ஈஸ்வர நோன்பென்று பெயர். அது இது பரியந்தம் எவராலும் அநுஷ்டிக்கப்படவில்லை. நீர் அந்த விரதத்தை யனுஷ்டித்தால் உமது இஷ்ட சித்தி கைகூடி வருமென்று சொன்னார். அந்த விரதம் எப்போது அனுஷ்டிக்க வேண்டுமென்று ஈசவரி கேட்க, அதற்கு முனிவர் சொல்லியதாவது :—புரட்டாசி மாதம் சுக்லபட்ச தசமி முதல் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷத்தில் தீபாவளி அமாவாசை வரையிலும் இருபத்தொரு நாளும் கேதாரி ஈச்வரனை இலிங்கத்தில் ஆவாகனம் செய்து அதற்குத் தினந்தோறும் அபிஷேகம் செய்வித்து வஸ்திரம், ஆபரணம், புஷ்பம் இவைகளால் அலங்கரித்து, தினம் ஒரு வில்வம், ஒரு சந்தன உருண்டை, ஒரு மஞ்சள் உருண்டை, ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை, ஒரு வெல்ல உருண்டை, ஒரு அதிரசமும் வைத்து நைவேத்தியம் செய்து தூபதீபமுங் கொடுத்தபிற்பாடு, ஒரு கயிறு இருபத்தோரிழையிலே முறுக்கி அதைத் தினந்தோறும் ஒரு முடியாக இருபத்தொரு முடிமுடிந்து, தினந்தோறும் உபவாசமாக இருந்து, நைவேத்தியம் செய்த அதிரசத்தையும் சாப்பிட்டு, இந்தப் பிரகாரம் இருபத்தொரு நாளும் கிரமமாய் இந்த விரதத்தை யனுஷ்டித்து வந்தால், இருபத்தோராம் நாளில் தீபாவளியுடன் வரும் அமவாசையினன்றைக்குப் பரமேச்வரர் ரிஷபவாகனரூடராய்ப் பிரஸன்னமாகி வேண்டிய வரங்களையெல்லாம் கொடுத்தருளுவாரென்று முனிவர் கூறினார். ஈச்வரியும் வெகு சந்தோஷங்கொண்டு முனிவர் வாக்கின்படியே விரதம் அனுஷ்டித்து முடிக்க, உடனே பரமேச்வரரும் பிரஸன்னமாகி உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என, ஈச்வரியும் மனமகிழ்ந்து 'ஸ்வாமி எனக்குத் தங்களுடைய இடபாகம் தரவேண்டுமென்று கேட்க' அப்படியே ஈச்வரிக்கு இடப்பாகம் தந்து கயிலாயத்திற்கு எழுந்தருளினார்.

***

பார்வதிதேவி அனுஷ்டித்த இந்த நோன்பைத் தேவகன்னிகைகள் அறிந்து தாங்களும் அநுஷ்டித்து நலம்பெற விரும்பி பூலோகத்திற்கு வந்து ஒரு ஆலவிருக்ஷத்தின் கீழ், பார்வதியம்மன் நோன்பு நோற்ற பிரகாரம் தாங்கள் நோன்பு நோற்கச் சக்தியில்லாமையால், ஒரேதரமாக ஐப்பசி மாதத்தில் தீபாவளி அமாவாசையினன்றைக்கு மணலை லிங்கமாகப் பாவித்துவைத்து கேதாரி ஈச்வரனை அதில் ஆவாகனம்செய்து புஷ்பம் அலங்கரித்து ஒரே நாளையில் இருபத்தொரு நாளும் செய்யவேண்டியபடியே இருபத்தொரு வில்வம், இருபத்தொரு சந்தன உருண்டை, இருபத்தொரு மஞ்சள், இருபத்தொரு வெல்ல உருண்டை, இருபத்தொரு அதிரஸம், இருபத்தொரு பாக்கு, இருபத்தொரு வெற்றிலை, இருபத்தொரு இழையிலேயே ஒரு கயிறு முறுக்கி, அதிலே இருபத்தொரு முடிமுடிந்து இவைகள் அனைத்தையும் ஒரு புது முறத்திலே வைத்து நைவேத்தியம் செய்தார்கள்.

***

அந்தச் சமயம் அவ்வழியாக வந்த இரு இராஜகன்னிகைகள் இத்தேவ கன்னிகைகளைக் கண்டு என்ன விரதம் அநுஷ்டிக்கிறீர்கள் என்று கேட்டனர். அதற்குத் தேவகன்னிகைகள் விரத வரலாற்றினைக் கூறி, அக்கன்னிகைகளுக்காக ஆலம் விழுதையறுத்து அதிலே இருபத்தொரு முடியும் முடிந்து தங்களுடையதுகளுடன் கூடவைத்து நைவேத்தியம் செய்து, அந்த ஆலம்விழுதை அவர்களின் கையிலே கொடுத்து அணிந்துகொள்ளச் செய்து, நீங்கள் இந்தப்பிரகாரம் வருஷா வருஷம் செய்துவாருங்கள், எல்லா நன்மைகளும் உண்டாகும் என்றுசொல்லி விரதம் முடிந்ததும் தேவலோகத்துக்குச் சென்றுவிட்டனர்.

***

இந்த இரு இராஜ குமாரிகளுக்கும் புண்ணியவதி, பாக்கியவதி என்றும் முறையே பெயர். இவர்களின் தந்தையான சிற்றரசன் மிக்க வறுமையில் மூழ்கியவன். பெண்களுக்கு இன்னும் விவாகம் நடக்கவில்லை. நாட்களும் சென்றுகொண்டிருந்தன. செல்வக் குறைவினால் பெண்ணை எந்த அரசரும் வந்து கேட்கவில்லை. இவ்வித நிலைமையானது, இரு இராஜ குமாரத்திகளின் கையிலும் நோற்ற ஆலம்விழுது ஏறிய உடனே, மாறிப் போயிற்று. செல்வமும் தினேதினே பெருகியது. புண்ணியவதியைச் சகரகிரி யரசனுக்கும், பாக்கியவதியை அழகாபுரி மன்னனுக்கும் விவாகம் செய்து கொடுக்கப்பட்டது. இவ்விரு பெண்களும் தங்களின் கணவர் வீட்டில் இல்லறம் நடத்திவருகையில், பாக்கியவதி என்ற பெண் தனது ஐச்வரிய மமதையால், கேதாரி யீச்வர நோன்புக்கயிற்றை யவிழ்த்துத் தன் வாசலிலிருந்த அவரைப் பந்தலிலே கட்டிப்போட்டு நோன்பு நோற்பதையும் மறந்துவிட்டாள். நோன்பின் மூலமாகவந்த செல்வம் உடனே சுருங்கத்தொடங்கி, முடிவில் அரசும், வாழ்வும் வேற்றரசனால் கைக்கொள்ளப் பட்டு பரம ஏழைகளாய் ஓடிவிடும்படியாயிற்று.

***

ஒருநாள் பாக்கியவதி தன் கஷ்டம் தாங்காமல் வருந்தித் தன் குமாரனைத் தன் தமக்கையான புண்ணியவதி இடத்திற்குப் போய்வரும்படி யனுப்புவித்தாள். புண்ணியவதி தன் தங்கையின் குமாரனை அன்புடன்

தழுவிக்கொண்டு, பாக்கியவதி நோன்பு நோற்கத் தவறியதைக் கேட்டறிந்து, அதனால்தான் இவ்வளவு பொல்லாப்பும் நேர்ந்ததென்று சொல்லி, அப்போதுவந்த கேதாரி யீச்வர நோன்பை நோற்று, தன் தங்கையின் குமாரன் கையிலும் நோன்புக்கயிற்றைக் கட்டி, இனிமேல் நோன்பு தவருது நோற்கும்படிப் புத்திகள் சொல்லி, வேண்டிய ஐச்வரியங்கள் கொடுத்துத் தன் தங்கையிடத்துக்கு அனுப்பினாள். சிறுவன் தன் தாயிடம்போய்ச் சேர்ந்து எல்லா சங்கதிகளும் தெரிவித்துத் தன் பெரிய தாயார் தன்கையில் கட்டிய நோன்புக் கயிற்றையும் காண்பித்தான். உடனே பாக்கியவதிக்குத் தான் நோன்பு நோற்காமற்போன ஞாபகம் வந்து, அதனால்தான் இவ்வளவு பொல்லாப்புகளும் சூழ்ந்தனவென்று அறிந்தவளாய் இனி எக்காலத்திலும் மறவாமல் நோற்பதாய்த் தீர்மானித்துக் கொண்டாள் குழந்தையின் கையிற்கட்டிய நோன்புக்கயிற்றின் மகிமையால் இழந்த அரசும் செல்வமும் முன்போல் திரும்பிற்று. பாக்கியவதி முன்போல் உன்னத நிலையை யடைந்தாள். அதுமுதல் பிரதி வருஷமும் தவருமல் நோன்பு நோற்று எல்லா பாக்கியங்களும் அடைந்து சுகமே வாழ்ந்தாள். அது முதற்கொண்டு எல்லோரும் கேதாரி கௌரீ விரதத்தை அநுஷ்டிக்க ஆரம்பித்து உலகப் பிரஸித்தியாயிற்று. இதுவே கேதாரி கௌரீ விரதத்தின் வரலாறு.

---

# தீபாவளியில் ஜீவகாருணியம்

தீபாவளி யென்பது தீபத்தின் வரிசை யென்னும் பொருளுடையதாக நிற்கும் ஒரு மொழி. நல்லொழுக்கமுடையவர்களது கிரகங்களில் அன்று உதயத்திற்கு முன்னர் வீடெல்லாம் நன்ருய்த் தீபத்தினல் அலங்காரம் செய்து, தீபத்தின் எதிரே எண்ணெய் முதலிய ஸ்நான திரவியங்களை வைத்து தேவ பூசைசெய்து தெய்வப் பிரீதியான எண்ணெயை ஒவ்வொருவரும் முன் தீபாவளி முதல் இதுகாறும் கெட்ட நாளில் நீராடியிருந்தால் அதனு லுண்டாகும் தோஷங்களை நிவர்த்திசெய்து கொள்வதற்காகத் தீப முன்னிலையில் தைலமிடுத லென்னும் வழக்கத்தைப் பூர்வீகர்கள் ஏற்படுத்தினர்கள். இத் தினத்தில் உதயத்திற்கு முன்னர் நீராடுவதென்னும் ஒன்றுடன் கோடி யுடுத்தலென்னும் மற்ருென்றும் தொடர்ந்து மங்களகரமாக அன்றைய தினத்தைக் காட்டி நிற்கும்.

***

"சாராய மெல்லாம் பூரா விலையாகும்." இப் புண்ணிய தினத்தில் சதாசாரமுள்ள வீடுகளில் தீபாலங்காரம் முதலியவை விசேஷமாக இருக்கும். அநாசாரிகளின் கிரகங்களில் ஆடுகளுக்கும் கோழிகளுக்கும் இறத்தலென்னும் கஷ்டம் நேரிடும். இத்துடன் சாராய மென்னும் கொடிய மயக்க

*வஸ்துவும் ஒவ்வொருவர் வாயிலும் புகுந்து பரிமளிக்கும். இத் தருணத்தில் மாமிச போஜனம் செய்யும் மனிதர்கள் எல்லாருக்கும் நுட்பமான ஒரு சங்கதி அறிவிக்கக் கருதுகிறோம். நாம் நமது மனைவி மக்களுடனே கூடிக் களித்துச் சந்தோஷமா யிருக்கிற பண்டிகை நாளில் பல்லாயிரம் பிராணிகளை வதைத்தோ நம் வயிற்றை நிரப்புவது! அன்றைய தினம் ஆடுகளை அடிக்கும் தொட்டியிற் போய்ப் பார்த்தால் எவருக்காயினும் அணுவளவாவது சந்தோஷ முண்டாகுமோ? தீபாவளி பண்டிகை யென்று பெயரிட்டு இத் தேசத்தில் செய்கிற ஜீவ வதைக்கு அளவு உண்டோ? உங்கள் வீட்டில் உள்ளவர்களுடைய உயிர் போலவே யன்றோ அந்தப் பிராணிகளின் உயிர்? அத்தனைப் பிராணிகள் ஜீவனை இழக்கும்போது, பண்டிகை கொண்டாடுவது பெரிய பேதமை யன்றோ? ஆகையால் "பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்" என்பதைத் தெரிந்து இந்தக் கெட்ட வழக்கத்தை இனி யாவது யாவரும் கைவிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம். இரக்கமில்லாதவர் நெஞ்சு இரும்பிலும் கொடியதாகையால், இதன் கீழ்வரும் பாட்டின் கருத்தைச் சற்று நினைப்பாராக.*

***

## ஜீவகாருணியம்

சீர்கொண்ட பூவுலகி லுள்ளவென் நண்பரே!
திகழுமெவ் வருடத்திலுஞ்
சேர்பொங்கல் வருடப் பிறப்புதீ பாவளி
சிறந்தவிச் சுபதினத்தில்,

ஏர்கொண்ட நல்லுடுப் போடுவணி யும்மணிந்
தின்புறு முணவருந்தி
ஏகமா யாவரும் மகிழ்வோ டிருப்பதற்
கேற்றவவ் வமயந்தனில்,

சார்வுண்ட நமதுவீட் டினிலிறைந் துள்ளநற்
சாதமுத லியாவுமுண்டு
சஞ்சரித் திடுகின்ற கோழி,யுள் ளான்,காடை
சாந்தமா டாடுகளெலாம்

நேர்கொண்ட வைந்தறி விருக்குமுயிர் நம்போல
நீடுசந் தோடமோடு
நிற்கின்ற விவைகளை யறுத்திடி லழும்; ஈது
நேர்மையோ நந்தமக்கே?

# பத்திரிகா சாரம்

**ஸ்ரீ பாரதியின் பாடல்கள் :—**

"காலஞ் சென்ற பாரதியார் தமது தாய் நாட்டின் விடுதலைப் போருக்குத் தமது பாடல்கள் வாயிலாகப் பெரியதோர் துணை புரிந்திருக்கிறார். அதன் அருமையை நம் தலைவர்கள் என்பவர்கள் சரியாக அறியவில்லை. தமிழ் அருமை அறியாத ஆங்கிலத் தலைகளாக இருப்பதே அதற்குக் காரணம்."

(லோகோபகாரி)

**சுய பாஷாபிமானம் :—**

"தமிழ் நாட்டில் தமிழ் பேசும் தாய் வயிற்றில் பிறந்த ஒருவர் தமிழ் படித்தல் அகௌரவமெனக் கருதுவது அன்னோரின் மனோபாவம் எவ்வளவு கீழ் நோக்கிச் சென்றிருக்கிற தென்பதையே விளக்குகிறது. ஐயோ! எந்த நாட்டிலும் இத்தகைய பரிதாப நிலைமை இருக்காது."

(திருச்சிநேசன்)

**எருக்களின் ஏற்றுமதி :—**

"பிரெஞ்சு இந்தியாவி லிருந்து நெல்லும் அரிசியும் கடல் வழியாய் ஏற்றுமதி செய்யக் கூடாதென்று பிரெஞ்சு இந்திய கவர்ணர் உத்திரவு செய்திருப்பதாய் சில தினங்களுக்கு முன் புதுச்சேரி தந்தி கூறிற்று. நமது கவர்ன்மெண்டார் இவ் எருக்கள் ஏற்றுமதி யாவதில் பயிர்களுக்கும் ஜனங்களுக்கும் கெடுதல்கள் திட்டமாய் விளைகிறதெனஅறிந்த பின்னும் தூங்க லாகாது. சட்ட சபை மெம்பர்களே! எலெக்ஷனில் காட்டும் ஊக்கத்தில் பத்தாயிரத்தில் ஒரு பாகமாவது இதில் காட்டுங்கள்."

(கிருஷிகன்)

**மருவி வழங்கும் சொற்கள் :—**

"மம்பட்டி" என்பது "மண்வெட்டி" என்பதன் மரூஉ. மண்ணை வெட்டியெடுக்க உபயோகமாகும் ஆயுதம் என்பது அதன் பொருள்.

(நச்சினார்க்கினியன்)

**பேத நினைவு :—**

வட இந்தியாவில் வகுப்புணர்ச்சியானது ஹிந்துவென்றும் முஸ்லீமென்றும் வித்தியாசம் பாராட்டச் செய்கிறது. தென் இந்தியாவில் வேறு விதமான சுயநல உணர்ச்சி பிராமண ரென்றும், பிராமணரல்லாதா ரென்றும் வித்தியாசம் பாராட்டச் செய்கிறது.

(சுதேசமித்திரன்)

---

உலகத்திலுள்ள ஸர்வ கலாசாலைகளில் இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் (Oxford) ஸர்வகலாசாலையே பெரிது. அதில் 21-காலேஜ்களும், 5-மண்டபங்களும் உண்டு.

***

சீனதேசத்துக்கு வட எல்லையாகக் கட்டப்பட்டிருக்கும் சுவரே உலகத்தில் பெரிய சுவர். அதன் நீளம் 1250-மைல். உயரம் 20-அடி. சுவரின் கனம் கீழே 25-அடி. மேலே 15-அடி.

---

# சென்ற மாதம்

**"ஓட்-பசி"**

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி திருவல்லிக்கேணிக்கு நகர சபைப் புதிய பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டதற்கு அவர் திருவல்லிக்கேணி ஸ்வாமி கோயில் திருக்குளத்தைச் சீர்திருத்த முற்பட்டது நல்ல வேலை. மற்ற வேலைகள் வெறும் கூச்சலில் முடியும். திருக்குள கைங்கரியமோ வெகு நாளைக்குப் பெயர் சொல்லிக் கொண்டிருக்கும். ஓட் கேட்க வருபவர்களிடம் இப்படியொரு வேலையைச் செய்து முடித்த பின் ஓட் தருவதாகக் கூறித் தூண்டினால் வெகு பழுதுகள் சீர்படும். "ஓட் பசி" எந்த வேலையையும் செய்ய வைக்கும்.

***

**மத துருக்களின் கட்டுப்பாடு.**

ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்து அப்பால் நாவிதர்கள் செல்லக்கூடாதென்று கட்டுப்பாடு இருக்கிறது. "எங்கள் பெருமாள்" என்று வெகு பக்தி சிரத்தையோடும் வணங்கும் நாவித பக்தர்களை இரங்கநாதர் ஒருபோதும் திரஸ்காரம் செய்யார். "நம் பெருமாள்" என்று இரங்கநாதருக்குப் பெயர் தந்த வண்ணார்கள் கோயிலுக்குள் வருகையில் நாவிதர்கள் வர வொண்ணாதா?

***

**சுய பாஷையில் தன் மதிப்பின்மை.**

தென்னாட்டில் தெலுங்கரும் தமிழரும்தான் தங்களின் சுய பாஷையை இகழ்பவர்கள். பரஸ்பரம் சந்திப்பினும் ஆங்கிலத்தில் பேசுவதையே மகா கௌரவமாகக் கொண்டவர்கள். தங்கள் குமாரனுக்குத் தெலுங்கு எழுதத் தெரியாவிடினும், ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதி விடுவானாகில் உச்சி மேல் மெச்சிக்கொள்ளும் மூடப் பெற்றோர் எண்ணிலர். பட்டு நூற்காரர்களிடமும், முஸ்லிம்களிடமும் இந்த அவலக்ஷணத்தைக் காண முடியாது. அவர்கள் எப்போதும் ஸ்வய பாஷையிலேயே பேசுவர். வங்காளத்தில் வங்காளிகளும், பூனாவில் மஹாராஷ்டிரர்களும், பம்பாயில் குஜராத்தியினரும் தங்களின் சொந்தப் பாஷையில் பேசுவதையே கௌரவமெனக் கருதுவர். தமிழ் நாடோ தலை கீழ் பாடம்!

***

**தலையங்கம் இல்லாத பத்திரிகைகள்.**

அமெரிக்காவில் தலையங்கமே இல்லாமல் சமாசாரங்களை மட்டும் வெளியிடும் பத்திரிகைகள் அநேகம் உள்ளன. சமாசாரங்களை அறிந்த அளவில் தங்களுக்குள் ஒரு அபிப்பிராயத்தை உண்டாக்கிக் கொள்ளும் பக்குவத்தை ஜனங்கள் கொண்டிருக்கையில் பத்திராதிபரின் அபிப்பிராயம் வெளியிட வேண்டாமென்பது அவற்றின் நோக்கம் போலும்!

***

**ஒரு புது பக்குவம்.**

நமது பக்கத்திலும் முன்னாட்களில் பத்திரிகா அபிப்பிராயமே பொது ஜன அபிப்பிராயமாகக் கருதப்பட்டு வந்தது. அப்போது எவ்விதக் கக்ஷி பேதங்களும் இல்லை. பரஸ்பர நிந்தனைகளும் இல்லை. ஆனால் இப்போதோ எண்ணற்ற கக்ஷிகள் பெருகி விட்டன. அதற்கேற்பப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை அதனதன் ஆசிரி

யர்களான ஒரு தனி மனிதர்களின் அபிப்பிராயங்களாகவும் அந்தந்த ஆசிரியர்கள் தழுவியுள்ள கக்ஷிகளின் கொள்கைகளாகவும் கருதப்பட்டு, அவைகள் பொது ஜனக் கருத்துக்கு எவ்வளவுக்கு ஒத்திருக்கின்றனவென்று அலசிப் பார்த்துத் தெரிந்துகொள்ளப் பயிற்சி பெற்றுக்கொண்டு விட்டனர். எனவே, ஒரு பத்திரிகையில் ஒரு விஷயம் வந்ததும் மயங்காமல் நிதானிக்க நம்மவர்கள் இப்போது முற்பட்டுள்ளார்.

***

**சபர்மதி ஆச்ரமம்.** டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் சபர்மதி ஆச்ரமத்தைப் பற்றிப் பேசிய சாரமாவது :—ஆசிரமத்தில் குழந்தைகள் உட்பட 85 பேர் உள்ளார். **விடிய 3-45 மணிக்கே யாவரும் எழுந்திருப்பர். **ஆச்ரம வாசிகள் அனைவருமே சேர்ந்து சுத்தி செய்கின்றனர். **மல ஜலமுள்ள இடங்களைச் சுத்தம் செய்வதற்கென்றே மனித வர்க்கத்துக்குள் பிரத்தியேகமாய் ஒரு ஜாதியார் இருப்பானேன் என்பதுதான் மஹாத்மாவின் கருத்து. **நூல் நூற்றல் முதலியவற்றிலிருந்து ஆசிரம மாத வருமானம் ரூபா 800. ஆச்ரம செலவோ 2000 ரூபா ஆகும். **“அந்த ஆஸ்ரமத்தை விட்டு நான் வெளி வரும் பொழுது, ஒவ்வொருவனும் தன்னுடைய தேசத்திற்கு சேவை செய்யத் தயாராயிருக்க வேண்டுமென்றும், தேசத்திற்காக உயிரையும் வேண்டுமானால் தியாகம் செய்யத் தயாராயிருப்பவனே உத்தம தேச பக்தன் என்ற எண்ணத்துடனேயே நான் வெளி வந்தேன்.”

***

**பெரியோரது திருநாட்கள்.** “பாரதி திருநாள்” என்று தேச மகா கவி ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் தினத்தைத் தமிழகமெங்கும் கொண்டாடித் துதித்தனர். மத பக்தி நிறைந்த விழாக்களே நம்மில் இதுவரை பாராட்டப் பெற்று வந்தன. இப்பொழுது தேசீயத் திருநாட்களையும் போற்றி நம்மில் ஒரு பக்குவம் உண்டாக்கிக் கொள்ளத் தலைப்பட்டிருப்பது நாட்டின் நற்காலத் துவக்கமெனவே கொள்ளல் வேண்டும். 25-9-1926ல் மகாத்மாவின் 57-வது வருட தினத்தையும் யாவரும் கொண்டாடி மகிழ்ந்தனர். இவையெல்லாம் தேச பக்தியைப் பெருக்கி, நம் குணங்களைத் திருத்துவனவாகும். முன்பு பிரான்சின் மீது ஜர்மனியர் வெற்றி கொண்ட தினத்தை நாளைக்கும் ஜெர்மனி தேசத்தில் ஒரு பெரும் திருநாளாகப் பாவித்துக் குதூகலிக்கப்படுகின்றது. இந்தக் குதூகலம் பயன் தாராது போகுமோ?

---

டாக்டர் மூஸ் எனும் வைத்தியர் சகல வகைப் பால்களையும் பரீக்ஷித்து அறிந்ததில், யானைப் பாலே விசேஷமான தென்றும், அதில் தண்ணீர் அற்பமாயும்—வெண்ணெயும் சீனியும் அதிகமாயும்—நல்ல சுவையும் மணமு முடையதாயும் இருக்கிறதென்றும் சொல்லுகிறார்.

***

1882-ம் வருஷத்தில் சவரன் விலை, குவீன் சவரன் (பழுப்பு) ரூ. 12-2-6, ஆஸ்திரேலியா சவரன் (பசுமை) ரூ. 12-2-0. அரை சவரன் ரூ. 6-3-0. கால் சவரன் ரூ. 2-7-9. அவ்வருஷத்தில் மிளகாய் பாரம் 1-க்கு ரூ. 26-முதல் ரூ. 30-வரை விற்றிருக்கிறது.

# தீபாவளி பண்டிகை

## நரக சதுர்த்தசி ஸ்நானம்

**பா**ண்டவர் பன்னிரண்டு வருஷகால வனவாசம் செய்துகொண்டிருக்கிறபொழுது பிராக்ஜிஜோதிடபுரம் என்னும் நகரிலே அரசு செலுத்திவந்த நரகாசுரனென்பவன் பிரம்மதேவனிடத்தில் பெறுதற்கரிய வரங்களைப்பெற்று, பூலோக பாதாள லோகங்களை அதம் பண்ணுவதோடு, ஸ்வர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரனோடும் போர் புரிந்து, தேவேந்திரன் அணிந்திருந்த காதணி குண்டலங்களையும், மற்றும் வேண்டிய பொருட்களையும் கொள்ளைகொண்டு தன் நகரடைந்திருந்தான். தேவேந்திரனும் இராக்ஷதனால் இம்சையடைந்திருந்த முனிவர்களும் ஸ்ரீ கண்ணபிரானைப் பிரார்த்திக்க, அவர் தமது பத்தினி சத்தியபாமா சமேதராய் யுத்தகோலங் கொண்டு கருடாரூடராய்ப் புறப்பட்டு, நரகாசுரனோடு போர்புரிந்து, நரகாசுரனின் பதினெண்ணாயிரம் சேனைகளையும் முறியடித்து, அசுரனுடைய யுத்தக் கருவிகளைப் பொடிப்பொடியாக்கி, அதாவது தோல்வியடைவித்து, பாதாதிகேசம்வரை சல்லடைக் கண்களாகத் துளைத்து, குபீர் குபீர் என உதிரம் பெருகும்படிசெய்ய, அவ்வரசனும் அஞ்சாத நெஞ்சினனாய்த் தாக்கிவந்து, முடிவில் முற்றும் அடியற்ற பனைபோல் நிலத்தில் விழுந்து, ஞானமுற்றவனாய் ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி, பகவானே! யான் செய்த குற்றங்களைப் பொறுத்து யான் வதைப்பட்ட இந்த ஸ்திதியின் நிலைமையைப்பற்றி என் பெயரைச்சொல்லி அப்பியங்க ஸ்நானம் செய்து பல திவ்ய போஜனங்களை (தீபாராதனை அல்லது தீப வரிசையெனப் பொருள்படும்படி) தீபாவளி செய்தபின்பு தமக்கு நிவேதனம்செய்த பேர்களுக்கேனும், சக்தியில்லாத ஒரு ஏழைக்கேனும், ஒரு பிராமணனுக்கேனும் அப்பியங்க ஸ்நானம் செய்வித்து, பல உபசாரங்களோடு தானம் செய்வோருக்கு அஸ்வமேதயாகஞ் செய்த பலன் கிடைக்கும்படி யருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அப்படியே அருளி ஸ்ரீ கண்ணபிரான் அவனைப் பரமபதம் சேர்த்து, அசுரன் காவல்செய்திருந்த பன்னிரண்டாயிரம் கன்னிகைகளை விடுதலைசெய்து யாவருக்கும் ஆநந்த சந்தோஷம் உண்டாக்கியருளினர். ஆதலால் மனிதர்கள் அந்நாளில் அப்பியங்க ஸ்நானம் புரிந்து, நிவேதனம் முதலியவற்றைச் செய்து ஸ்ரீ கண்ணபிரானை வணங்குவார்களாகில் இழந்துபோன பிதிரார்ஜிதம் மீளவும் பெற்று வாழ்வார்களென்பது நூல் துணிபும், முன்னோரது அநுஷ்டானமுமாகும்.

---

**1882-ம்** ஹூ ஆகஸ்டு மாதத்தில் மைசூரில் திவானாகிய ஸ்ரீ ரங்காசார்லு பின்வருமாறு ஒரு உத்திரவு பிறப்பித்தாராம், மைசூர் மகாராஜா தெருவில் சவாரி போகும்பொழுது தெருவில் செல்லும் எவரும்—வண்டியில் போயினும்—குதிரை சவாரி செய்யினும்—தக்ஷணமே கீழே இறங்கி மகாராஜாவுக்கு மரியாதை செய்யவேண்டு மென்பதே.

# கவிதா விலாஸம்

## சிற்றுயிர்மேல் அன்பு பாராட்டல்

(தீபாவளியில் இதனை நினைமின்.)

மன்னும் பற்பல் மடங்களும் கோயிலும்
துன்னும் சாலையும் சோலையும் பார்க்கலாம்
மின்னும் சிற்றுயிர் மேல்வைக்கும் அன்பையோ
பன்னும் பூமியில் பார்ப்ப தரியதே!

எந்த வேலையு மெப்பொழு துஞ்செய்து
வந்த துன்பங்கள் மாற்ற உயிர்தரும்
இந்த ஜந்துவு மீசன் படைப்பே! சு
தந்தி ரத்தைத் தடுத்தலும் நீதியோ?

பறவைக ளில்லெனிற் பாரில்லை; இல்லை
கறவைமா டில்லெனிற் காணுஞ் சுகங்கள்;
உடையில்லை யாடின்றேல், நாகரிகம் உண்டோ
நடைக்குதிரை இன்றேல் நமக்கு?

## * ஸ்ரீ ஹரிக் கண்ணி

1. நீர்பெருகுவாரிவளர் நித்தியநினைப்புகழ்தற்
கேர்பெருகுநல்வாக் கெனக்கருள்வாய் ஸ்ரீ ஹரியே.

2. எதிராஜவாசா னினைமலர்த்தாளேத்தி
மதிபெற்றுனைப்பாட வாஞ்சைவைப்பாய் ஸ்ரீ ஹரியே.

3. ஆண்டாடாள்போற்றி யரியேயுனதிருதாள்
பூண்டேனென்னெஞ்சகத்துன் போதந்தா ஸ்ரீ ஹரியே.

4. எம்பெருமானேயா னியம்புகவிக்கிரங்கி
வம்பிலுழலாத வரங்கொடுத்தாள் ஸ்ரீ ஹரியே.

5. ஸ்ரீரங்கநாதாவுன் சேவடியைப்போற்றுமெனைக்
காவெங்குந்தள்ளாமற் காட்சிதந்து ஸ்ரீ ஹரியே.

6. திருவேங்கடத்தாயென் றீவினைமன்னித்துப்
பொருவில்கருணை புரிகுவாய் ஸ்ரீ ஹரியே.

7. கஞ்சிவரதாவுன் கமலத்தாள்போற்றுமெனக்
கஞ்சாதேயென்றுன் னருடருவாய் ஸ்ரீ ஹரியே.

* All Rights Reserved to the Author.

8. செனனமெடுத்தேயான் செய்தபிழையாவும்
மனதினினையாமல் மன்னிப்பாய் ஸ்ரீ ஹரியே.

9. பாவியெனப்பேரெடுத்துப் பாழ்நரகில்வீழுமுனென்
னுவிக்கருளுதவி யாண்டுகொள்வாய் ஸ்ரீ ஹரியே.

10. உன்னைநினையாம லுன்மகிமையோராமற்
கன்மவினையெல்லாங் கணித்தேன்யான் ஸ்ரீ ஹரியே.

11. உன்மகிமைதன்னைநினைந் துன்னடியைப்போற்றிசெய்து
கன்மவினைநீக்கக் கடாட்சிப்பாய் ஸ்ரீ ஹரியே.

12. வீழ்நாளெலாந்தீ வினைபுரிந்தநாயடியேன்
வாழ்நாளைக்காக்க வருவாய்நீ ஸ்ரீ ஹரியே.

(தொடரும்.)

தஞ்சை சங்த இராமசாமி நாயுடு.

---

## அருட் செல்வம்

1. அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள.

அருளாவது :—தொடர்பு பற்றுமல் இயல்பாக எல்லா உயிர்களின் மேலும் செலுத்துவதாகிய கருணையேயாம். பொருளால் வரும் செல்வங்கள் கீழ் மக்களிடத்தும் உண்டாயிருக்கின்றன. ஆதலால், செல்வங்கள் பல வற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பட்ட செல்வமாவது நாம் ஜீவராசிகளிடம் செலுத்தும் அருளேயாம்.

2. அருளில்லார்க் கவ்வுலக மில்லை, பொரு
ளில்லார்க் கிவ்வுலகமில்லா தியாங்கு.

மேலும், பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லாதமைபோல, உயிர்கள்மேல் அருளில்லர்தவர்க்கு முத்தி யுலகத்தின்பம் கிடைத்தலில்லை.

3. அருள் சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை
இருள் சேர்ந்த இன்னு உலகம் புகல்.

அருளா லுருகுகின்ற நெஞ்சினை யுடையவர் இருள் நிறைந்த நரகத்தில் புகுதலில்லை. [திருக்குறள்.]

☞ தீபாவளி யன்று நீங்கள் அனைவரும் இந்த அருட் செல்வம் உடையோராய் விளங்கக்கடவீராக.

---

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப் பிரதாபன்
(Registered.)

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# தீபாவளியின் தர்பார்!



சபாஷ்! திருவிழா வென்றால் இதல்லவோ திருவிழா! ஹா! இந்தத் திருவிழாவில் பட்டாசுகளென்ன. வெடிகளென்ன பாணவேடிக்கைகளென்ன? வெடி மருந்து அறைத்து வெந்துபோகும் கதைகளென்ன, குடித்து உருண்டு சண்டை செய்து மண்டையுடைந்து மாள்வதென்ன, ஆடுகளென்ன, கோழிகளென்ன, வாத்துகளென்ன, காடைகௌதாரிகளென்ன, புருக்களென்ன, முசல்களென்ன—இப்படி எத்தனையோ ஜீவ ஜந்துக்கள் அறுபடுவதென்ன? இவ்வளவென்று விகடன் ஏடும் எழுத்தாணியும் எடுத்துக்கொண்டு கணக்கெழுதியும் முடிவுகாணக் கூடுமானதாயில்லை. எவ்வளவோ உத்தம நோக்குடன் முன்னிருந்த பெரியோர்கள் பக்தி சிரத்தையோடும் பண்டிகை—திருவிழாக்களை ஏற்படுத்தப்போக, அவர்களுக்குப் பிறகு வந்தவர்கள் “உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்” என்பதாக அவற்றின் நோக்கங்களையே—ஊரிலுள்ள குளங்களைப் பாழ்ப்படுத்துவது போல்—பாழ்ப்படுத்தி வெகு வெகு விபரீதத்தில் நுழைத்து விட்டார்கள். அல்லா பண்டிகைபோல அலங்கோலமாக்கி விட்டார்கள். ஏதோ உள்ளது உரியதுகளில் செட்டும் மட்டுமாகச் செலவிட்டுக்கொண்டு முன்னிருந்தவர்கள் காலம் தள்ளிக்கொண்டு போய்விட, இப்போதைய தீபாவளியில் நம்மவர்களின் மிதமீறிய செலவுகளைப் பாருங்களேன்!

***

பணக்காரர்களுடைய பணமெல்லாம் பாணங்களாவதும், பையன்களுடைய பணமெல்லாம் பட்டாசு மத்தாப்புக் கட்டுகளுக்குப் போவதும், சாராயமெல்லாம் பூராவாக விலையாவதும்—இவ்வாறாகக் கையிலுள்ள பணத்தையெல்லாம் ஓட்டாஞ்சில்லியாக நினைத்துச் செலவிடுவதனால் தான், அர்பத்னட் கம்பேனி போன்றவைகள் திடீரென்று கீழே விழுந்து சிதறும்போது அப்பேர்ப்பட்ட சங்கதிகளுக்கு—“அது

தீபாவளி எடுத்துக்கொண்டது "— என்பதாகக் கூறும் வாசகமும் உலக வழக்கத்தில் வந்துவிட்டது.

***

தீபாவளிக் கென்று கடன்படாத வீடு உண்டா? பெரிய இடத்தில் கூடக் கொஞ்சம் 'நஞ்சம்' கடன் வாங்கத்தான் செய்விக்கும். வீட்டி லிருந்த, பெட்டியிலிருந்த—பாவை யரின் கழுத்திலிருந்த—நகையுடை மைகள் பாங்கி ஆபீஸிலும், கடன் தரும் சௌகார்களிடமும், வட்டித் தரகு நடத்தும் மாதர்களிடமும் அடகுக்குப் போயிருப்பதும் சாதா ரணமாய்க் காணக்கூடிய சங்கதி. அவ்வளவ ரூபாய்களும் எப்படித் தான் செலவாயிற்றோ என்று வீட் டுக்காரன் கையைக் கடித்துக்கொள் வது அப்பாலே நடக்கும் சங்கதி! உத்தேசத்துக்கு மேல்—நான் போட்ட ஒரு கணக்குக்குமேல் செல வாகிவிட்டதே யென்று திகைப்பது வீட்டுக்காரன் சங்கதியாக, என்ன வாங்கி அப்படிக் கொடுத்துவிட்டது என்று இடித்து, நொந்த புண்ணில் வேலுருவியது போற் பேசுவது வீட்டுப் பெண்களின் சங்கதியாக, ஆத்திரமும் கோபமும் மிஞ்சுகிற அந்த உழைப்பாளியான ஒண்டி மனி தன், பட்ட இந்தக் கடனை என்ன வகையில் சம்பாதித்துத் தீர்ப்போ மென்று திகைப்பதுமான—இந்த மாதிரி பெருமூச்சுகளை இனிமேல் விஸ்தாரமாய்க் காணலாம். ஐயோ ஆண்டவனே! இந்த எளிய நாட் டிலே வருஷத்திற்கு ஒரு தடவை ஒரு ஜோடி வேஷ்டி வாங்கி உடுத்தி, உள்ள குழந்தைகளுக்கும், மனைவிக் கும், நம்பி நிற்பவர்களுக்கும், ஏதோ சொல்ப, நிதானத்தில் துணிமணிகள் எடுத்துக் கொடுத்துக் கடனில்லாமற் கால் வயிறு தோசை வடை சாப் பிடக்கூடக் கதி காணுமே! இந்தச் செலவுகளைக் கடன் இல்லாமல் தன் பெட்டி திறந்து ரூபாய்களாக எண் ணிச் செலவிட்டு உண்டு சுகிக்க வழி காணேம் ஐயனே! வருஷத்திற் கொருமுறை தான் இந்தச் செலவு பகவானே! இந்த சொற்பத்தைக் கூடக் கடன் உடன் படாமல் முடித் துக் கொள்ள முடியாதபடி—அதற் கென்று சிறு தொகை—ரொக்கம் சேர்த்து வைத்துக்கொள்ள இயலாத படி வருஷம் 365-நாளும் கிடைக் கும் காசுகளெல்லாம் "வயிறே உன் னோடு வாழ்தலரிது" என்றபடியாக வயிற்றுப் பாட்டுக்கே சரியாகி சந் தோஷப் பாட்டுக்குக் கொஞ்சமும் மிஞ்சாமல், அப்படி வருவதுகூட வரவு செலவுக்குப் போதாத நிலையில் இழுப்பும் பறிப்புமாய்ப் பொழுது போகிறது ஆண்டவனே! எந்தக் காலம் வரையில் இந்தக் கஷ்டமோ— பாடோ! எப்போது எங்கள் வறுமை தீருமோ! தீபாவளியில் கடனின்றி கைப்பணம் செலவழிக்கும்படியான மொத்தமான தொகை எங்கள் பெட் டியில் விழுந்து கிடக்க—நாங்கள் அதைக் காண— அந்தப் பாக்கிய காலம் எப்போதோ! ஆண்டவனே! பிறகு உமது இஷ்டம்.

***

தீபாவளி வந்து விட்டதென்றால் கொண்டாட்டம் யாருக்கு? சிறு குழந்தைகளுக்கு. என்? தீபாவளி யன்றைக்கு நன்றாக உடுக்கலாம், புது வஸ்திரம் தரிக்கலாம், சுடலாம், நன்றாய் நாலு பதார்த்தங்களுடன் புசிக்கலாம்—என்று புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமை விரதத் தின் போதே—இன்னும் தீபாவ ளிக்கு எத்தனை நாள் இருக்கிறது— பள்ளிக்கூடத்துக்குத் தீபாவளி லீவ் எப்போது—என்று நாள் கணக்கு பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். இவர்கள் இந்த ஸந்தோஷத்தில் குதிக்கிறார்களே தவிர, துப்பாக்கி சுட்ட கையெல்லாம் போய் பட்

டாசு சுடும்படியான கையாய் இப்படியும் அடிமைத்தனமான படு பாவிக் காலம் வந்ததே யென்று யாரப்பனே எண்ணி பார்க்கிறார்கள்! அடிமை வாழ்விலே, அல்பத்திலே கூட அளவற்ற திருப்தி கொண்டு விடுகிற—அதற்கு ஒரு வந்தனம் கூடச் செலுத்திவிடுகிற அல்பத் தன்மைதான் அதிகமாயிருக்கிறது.

***

இன்னும் யாருக்குக் கொண்டாட்டமென்றால், புதிதாக விவாகமான மாப்பிள்ளைகளுக்குத் தான். இவர்களுக்கு விருந்து அரிப்பு அதிகமாக எடுத்துக் கொள்வது வழக்கமல்லவா? பிறர் வீட்டுச் சொத்துக்குப் பேயாய்ப் பறப்பது மருமகன்களுடைய சங்கதியே யல்லவா? மாமியார் வீட்டுக்குச் செல்லலாம், மகாராங்கியோடு நிற்கலாம், தான் மகா வளர்ந்துவிட்ட பெரியமனிதனைப் பாவித்துக் கொண்டு, தன்னைப் போலும் வயதடைந்த வாலிபர்களை—அவர்களுக்குத் தன்னைப்போல் விவாகம் இன்னும் ஆகாத காரணத்தால்—தன்னிலும் சிறுவர்களாகப் பாவித்து, என்ன நாயினே, அப்படி யல்லடா நாயினே, என்னடா அப்பா, அப்படி யல்லடா குழந்தாய் என்று மகா பெரிய மனிதத் தன்மையுடனே புத்திசொல்லுகிறபெரிய அந்தஸ்தை யடையலாம். அந்த அதிகாரத்துக்கு மாமிவீடுதான் சரியான வீடு. எல்லோரும் தனக்கு உட்பட்டுத் தன் வார்த்தையை அதிகார வாக்காகக் கேட்பார்கள். இன்னும் சரிகை, பட்டாவளிகள் எல்லாம் வேண்டியவரை கிடைக்கலாம், இஷ்டப்படி தரித்து இன்பமுறலாம், நல்ல சாப்பாடுகள் வெகு வெகுவான மரியாதைகளுடனே உண்ணலாம். இப்படியே சிலநாள் உல்லாஸத்திலிருந்து வரலாம்—என்று நினைக்கிறான். இவ்விதமே பெண்ணின் தாயும்—இத்தனை நாள் பிரியாமலிருந்து, தன்னைப் பிரிந்து, இப்போது கணவனின் அகத்துக்குச் சென்றுள்ள தனது குமாரத்தியின் திருமுகத்தை ஆசையோடு காண எதிர்பார்த்து, எப்போது தன் மகளும் மருமகனும் தீபாவளிக் கென்று வருவார்களோ, எப்போது கண்குளிரப் பார்ப்பேனோ, என் கையால் எப்போது பலகாரங்கள் செய்துவைத்து ஊட்டுவேனோ வென்று அதே சிந்தையாய் நாட்களை எண்ணிக் காத்து நிற்கிறாள்.

***

இப்படியே குடும்பத்தில் வீட்டில் உட்கார்ந்தபடியே தின்று கொண்டு காலங்கடத்திவிடப் பார்க்கிறவர்களும், சளையமிடுபவர்களும் அந்தக் கிழிந்த வேஷ்டியை இனி முதுகு துடைக்க, தலை துடைக்க வைத்துக் கொள்ளலாம்; உடுத்திக் கொள்ளப் புதுவேஷ்டி வந்துவிடும்; நாலுபேருக்கு வாங்கும்போது நமக்கும் அகப்படாமல் போகுமா என்று தாமும் தீபாவளி சமயத்தைச் சுயகாரியமாய் எதிர் பார்க்கிறார்கள். அபபடியே ஏமாந்த தாசிரியாகிய வீட்டுத்தலைவன் வாங்கித் தர அதை நன்றாக உடுத்தியும் கொள்கிறார்கள். அப்பால் அவனையே கேவலப்படுத்திப் பேச அடுத்தவீட்டுக்குப் போகவும் ஆரம்பிக்கிறார்கள். திட்டுகிறது—கோபிக்கிறது—துரோகம் செய்கிறது—எல்லாம் உண்ணுகிற, உடுத்துகிற இடத்தில்தானே!

***

அப்பால் வருஷ முழுதுக்கும் க்ஷவரம் இலவசமாகக் செய்கிற நாவித பண்டிதனும், தனது வருஷா வருஷ வழக்கத்தைப்போல், அவர் புடவை எடுத்துக் கொடுப்பார்—இவர் வேஷ்டி வாங்கித் தருவார்—அங்கே ஒன்று—இங்கே ஒன்று—

எல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒரு ஐந்து சேலையாவது கிடைக்கும்: வேஷ்டிகளோ அதற்கு மேலேயே வரும்—என்று தன் கணக்குகளை எண்ணுகிறான். வண்ணானும்—இனி தன் வீட்டுத் திண்ணையிலே வந்துகுவிந்து, அடியிலே கறையான் பிடிக்கப் போகிற தீபாவளி மூட்டையிலே, நல்லதாக—சரிகை போட்டதாக—ஒரு நாலைந்தை "அமுக்கி" விட்டால்தான் நல்லதென்று இப்பொழுதே அந்தக் கணக்குகள் பார்க்க ஆரம்பிக்கிறான். இப்படியே தபாற்காரனும், தனது தீபாவளி வசூலைப்பற்றிக கணக்குகள் போடப் பார்க்கிறான். போன வருஷம் அந்த ஆள் தராமற் போன ரூபாயை இந்த தடவை எப்படியும் கைப்பற்றி விடவேண்டும் என்று எண்ணுவதெல்லாம் எண்ணுகிறான். இப்படியே வேலைக்காரர்கள் தங்களின் எஜமானர்கள் தங்களுக்கு எடுத்துக் கொடுக்கப் போகும் வேஷ்டிகளின்மேல் கண் வைக்கிறார்கள். இனி நமது சிறுமிகள், பெண்கள் சங்கதியோ, அவர்கள் 100, 200, 300 ரூபா சேலைகளில் கண் வைத்து அதற்கென ஆவலாதி கொண்டு புருஷனுக்குச் சுருங்கின மூஞ்சியைக் காண்பித்தும், சிலசமயம் அவன் மனதுக்கு மகிழ்ச்சியாய் நடந்தும் இவ்வாறாகவெல்லாம் தாளம் போடுகிறார்கள்!

***

ஜவுளிக் கடைக்காரர்களோ கடைக்குள் மக்கி மண்ணாய்ப்போன சேலைகள், துணி மணிகள் யாவற்றையும் வெளியில் தொங்கவிட்டு, அதற்கான அலங்காரமாய்ப் பந்தல்கள் முதலியனவும் அமைத்து, அந்தப் பந்தல் செலவையும் இந்த ஜவுளியில் சேர்த்து, சாயமே போகாதென்று ஆயிரம் சத்தியங்கள் செய்து ஏமாந்தவர் பணம் பறிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதிலும் இந்த நாளில் பட்டுச் சேலைகளைப்போல் இமிடேஷன் சேலைகள் வந்து குவிந்துகொண்டு—12 ரூபாய் சொல்லுகிற சேலை 4-ரூபாய்க்கும் பெறுததா யிருக்கிறது.

***

மளிகைக் கடைக்காரரோ வென்றால் ஒவ்வொரு சரக்குக்கும் ஒரு துட்டு அதிகமாக விலையை ஏற்றி விடுகிறார்கள். இது அவர்களுக்கு நாம் செலுத்தவேண்டிய தீபாவளி உண்டிப்படியாக்கும்! உதவாத வெல்ல மெல்லாம் விலையாய் விடுகிறது. நாறிப்போன நெய்யெல்லாம் முருங்கை இலையின் உதவியினாலும், நெய்யில் போட்டுக் காய்ச்சுகிற வஸ்துக்களின் சேர்க்கையாலும் வியாபார சாமர்த்தியத்தாலும் அப்போது தான் வந்த புதியநெய் போலாகி விலையும் ஆகித் தீர்ந்து விடுகிறது.

***

இனி, எண்ணெய்க் கடைக்காரனோ நிலக்கடலை எண்ணெயைக் கலந்து ஏற்கெனவே தயார் செய்து வைத்து விடுவதற்காக அந்த வேலையைப் புரட்டாசி மாதத்திலேயே தொடங்கிக் கொள்கிறான். இவ்விதமாக ஊர் முற்றிலும் வியாபாரமும், ஆரவாரமும், மோசங்களும், சுயநலச் செய்கைகளுமாக ஆநந்த தாண்டவம் புரியத் தொடங்கிக் கொள்கிறது.

***

இவ்வளவு வைபவத்தினுள்ளே இனித் திண்டாட்டப் படுவோரும் ஒரு புறத்தே இருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் தனக்கு அருமையாக இருந்தவர்களை இழக்கக் கொடுத்தவன்—தனக்கு இந்த வருஷம் தீபாவளி இல்லாமற் போயிற்றே, போன வருஷம் அவர்கள் இருந்தார்கள், இவர்கள் இருந்தார்களே—என்று அவர்களை நினைத்து ஏங்குகிறான். அவ்வளவு கடனும் உடனும் பட்டு

இப்போது தானே மகளை விவாகம் செய்து கொடுத்தோம்; ஆடிக்கு மருமகனைத் தருவித்துப் பட்ட கஷ்டமும் நஷ்டமும் நோட்டங்களும் திட்டுகளும் போதாதா? இனி இந்தத் தீபாவளிக் கடனையும் செய்து தீர்க்கவேண்டுமே, இது போக, இனிப் பொங்கலுக்கு வேறே அழைக்கவேண்டியதாய்இருக்கிறதே கடன் உயர்ந்துவிட்டதே. வட்டி விஷம்போல் ஏறுகிறதே என்று தலை இரங்கி விசாரப்படுகிறான்.

***

இனி சென்ற, வருஷம் தனது பிரிய பர்த்தாவோடு மிருந்து மஞ்சள் குங்குமமாய் விளங்கிய பெண்கள், ஐயோ! போன வருஷம் தீபாவளி எவ்வளவோ நன்றாக நடந்ததே! மஞ்சள் குங்குமத்தோடு விளங்கினோமே! அந்தக் கலியாணத்தில் மங்கள ஆர்த்தி எடுத்தோமே! நலுங்கு வைத்தோமே! நோன்புத் தட்டு எடுத்துச் சென்றோமே! அந்தோ! தெய்வமே! அத்தனையும் போயிற்றே!—என்று அங்கலாய்க்கிறார்கள்.

***

இனி மாற்றாந் தாய்மார் தமது கணவனை நோக்கி,—உன் மூத்த மனைவியின் குமாரர்களுக்கும்—அவர்களின் ஸம்சாரங்களுக்கு மட்டும் நல்ல ஜவுளிகளும் சேலை வேஷ்டிகளும் வாங்கினாயே; நான்தானா பாவம் செய்தேன்; என் வயிற்றில் பிறந்தவர்கள்தானா பாவம் செய்தார்கள்; அந்த சேலையைக் கொண்டுபோய் குப்பையிலே போடு; நாலுபேர் முகத்தில் விழிக்கிறதற்கும் லஜ்ஜையாக இருக்கிறது—என்று பிரஸங்கம் செய்யத் தொடங்கிப் பொன்னான கணவனைத் தூஷிக்கவும் ஆரம்பித்துக் கொள்கிறார்கள்.

***

இறந்துபோன தமக்கையின் பிள்ளைகள் தன் ஆதரவில் இருந்தால், தமக்கைக்குப் பிறகு அவள் புருஷனுக்கு இரண்டாந்தாரமாக வந்திருக்கிற சுயநலக்காரியான அவளுடைய சொந்தத் தங்கையே, உடற் பிறப்பாக இருந்துங்கூட, தன் குழந்தைகளுக்கு நாலைந்தும்—அவர்கள் பிரியப்பட்டதும் நல்லதுமாக ஜவுளிகளை வேண்டிய வரையில் எடுத்துவிட்டு, தன் தமக்கைக் குழந்தைகளுக்கு—உதவாததும், ஏதோ கடனுக்குச் செய்து தொலைப்பதுமான மாதிரியில், ஆளுக்கொரு துணிமணியாய் நனைத்ததும் சாயம்போவதாய் எடுத்துவிட்டு சனியன் தீர்ந்தது என்கிறாள். உங்கள் பவிஷுக்கு இவ்வளவு போதாதா என்று முகத்தில் இடிக்கவும் வருகிறாள்.

***

இனி, விவாகத்தை எதிர்பார்த்து வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் யுவதிகளோ, எனக்கு அது வேண்டும் இது வேண்டும், தீபாவளிக்கு ஒரு புது நகை செய்யவேண்டும்—என்று தொந்தரவு கொடுக்க ஆரம்பித்துக் கொள்கிறார்கள். இவர்களுக் கெல்லாம் நடுவே வருணனும் புறப்பட்டு ஊரெங்கும் மழையும், வீதி எல்லாம் சேரும் சகதியுமாக்கித் தன் ஆரவாரத்தைக் காண்பிக்கின்றான். இதன் மத்தியில் சிங்கார தீபாவளியும் சிரித்துக்கொண்டு வருகிறது. சில்லரைக் கடைகளெல்லாம் பட்டாசுக் கடைகளாக வெகு பசந்தாக மாறுகின்றன. சென்ற வருஷத்தில் விற்காமல் மீந்தவற்றைத் தூசி துடைத்து சுத்தம் செய்து இந்த வருஷம் புது சரக்கு நாலோடு கலந்து விலைப் படுத்திவிடப் பார்க்கிறார்கள்! சிறுவர்கள் தங்கள் பட்டாசுகளில் பாதி படுமோசமாய் இருப்பதைக் கண்டு அங்கலாய்க்கிறார்கள். எந்தப் பட்

டாசுக் கடையில் அதிகக் கூட்டமோ, அந்தக் கடைதான் நல்ல கடை என்று தீர்மானித்து விடுகிறார்கள். டட்-டுப் சத்தம் தீபாவளி இரவெல்லாம் கேட்கிறது. அதற்கு முந்தியும் பிந்தியுமாக இளைஞர்களிற் சிலர்—பட்டாசில் நெருப்புப் பற்றியதா—என்று குனிந்து பார்ப்பதிலும், பாண மருந்துகளை வாங்கிவந்து அரைப்பதிலுமாக அபாயங்கள் நேரிட்டு வெடித்து, கண்ணிலும் கையிலும் பட்டு, அரகரா சிவசிவா, என்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் படுகிறார்கள்.

***

இன்னொரு பக்கம் வீடுகளெல்லாம் சுண்ணும்படித்து சிங்காரமாக எங்கும் பட்டாசுகளும் பாணவேடிக்கைகளுமாக, ஓடிப்போனவர்களெல்லாம் வந்து கூடிக்கொள்ள, உடைமை மேலே உடைமை போட்டு மினுக்கிக் கொள்ள, எல்லோரும் விடிய நேரத்தில் மங்கள ஸ்நானம் செய்து புது ஆடைகளை உடுத்திப்பலகாராதிகளைப் பெண்டு பிள்ளைகளோடும் பந்து வர்க்கங்களோடும் ஆவலுடன் புசிக்க ஆரம்பிக்கின்றார்கள். உண்மையான தீபாவளி வாய்க்குள் பலகாரங்கள் வெகு ருசிகரமாகப் போகும்போது தான் தொடங்குகிறது! இதிலே, அன்று சுத்தமும் சுசிகரமுமாக இருக்கும் வழக்கத்தைக் கொண்டோர் சிலராக, அன்றைக்குத்தான் தமது நெடுநாட்பட்ட மதுமாம்ஸ வீக்கத்தைத் தணித்துக் கொள்வோர் பலராக—இதனிடையே சாராயவர்க்கங்களும் பிராந்திபுட்டிகளும் வந்து பரிமளிக்க போடப் போடப் பொன்னிறமென்று ஆனவரைக்கும் குடித்தும் தின்றும் அழித்துத் தீர்க்கிறார்கள். பொழுதும் விடிகிறது. குஜராத்தி மார்வாடிகளுக்கு அன்றைய தினம் தான் புதுவருஷப் பிறப்பு. எவர் முகத்தையும் பாராமல் எழுந்ததும் கொட்டிக் கிடக்கும் தனக் குவியல்களைக் கண் திறந்து பார்ப்பது பம்பாய்ப் பக்கங்களில் வழக்கமாம்! குஜராத்தியர் புதுக்கணக்கு எழுதும் புண்ணிய தினமும் தீபாவளியில் தான்.

***

இதனிடையே கொல்லை கூட்டுபவன், நாவிதன், வண்ணான், தெருக் கூட்டி, தபால்காரன், வேலைக்காரர்கள், சேவகர்கள், அந்த இந்த பல்லிளிக்கும் உத்தியோகஸ்தர்கள், பாகவதர்கள்—இன்னும் பலருமாகச் சூழ்ந்துகொண்டு தீபாவளியின் வேஷ்டிகளையும் ஸன்மானங்களையும் வசூலித்துப்போக நெருங்கிக் கொள்கிறார்கள். அமாவாசையும் அதற்குள் புறப்பட்டு விடுகிறது. சாயந்திர நேரத்திலே "கேதார கௌரீ விரதம் என்ற நோன்பு தொடங்கிக் கொள்கிறது. பெண்கள் நோன்பு எடுக்கத் தட்டோடு போக, பையன்கள் "டட்டுப்" பாணவரிசைகளுடன் பாரா கொடுத்துச் செல்ல, அங்கே புரோகிதர் பாடு பெரிய கொண்டாட்டம்! ஏதோ தமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான மந்திரங்களை அரைகுறையாக, மொண மொணேச்சாரணம் செய்துவிட்டு வந்த பணத்தை வகையாய் வாங்கிக் கொள்கிறார். அன்றிரவோடு நோன்பும் பூர்த்தி பெறுகிறது. நோன்புக் கயிறும் கையிலேறுகிறது. தீபாவளியானது தோசை வாய்க்குள் போனபோதே—பிறகு இலையை விட்டு எழுந்த போதே முடிவுக்கு வந்துவிட்டது! அதற்குப் பிறகு தொடங்கிய நோன்பும், அதிரஸம் உள்ளுக்குப் போனதும் முடிந்துவிடுகிறது. இடுப்பொடிய வேலை செய்த பெண்மணிகளெல்லாம், அப்படா! என்று உட்கார்ந்து ஆயாஸம் தீர்த்துக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். இப்பண்டிகை—நோன்பு—இவற்றின் கருத்து—தாற்பரியங்களை அறிந்

தோர் சிலரும், தெரியாதோர் பலருமாக, எப்படியோ ஆநந்தத் தாண்டவத்துடனும், முன்னோர்களின் இரத்தம் இன்னும் நம்தேகத்திலே ஓடிக்கொண்டிருக்கிற தென்பதைக் காட்டிக்கொள்ளும் தன்மைபோல—"கடனோடு கடனாய் நெய்யிலே சுடடி பணியாரம்" என்பதாய்க் கொண்டு முடிவக்கு வருகிறார்கள்.

உலகவாழ்வில் பல்வகைத்தாய இடுக்கண்களால் புண்பட்டார்க்கு ஒருவித பரிகாரமாகவும், உற்சாகம், புளகிதம—துக்கமறதி— தோன்றும் பொருட்டாகவும் இவ்வித பண்டிகைகளைப் பெரியோர்கள் ஏற்படுத்தினார்களோ வென்றும் விகடனுக்குத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும் எதிலும் ஒரு நல்ல அருத்தம்—சங்கதி இல்லாமற் போகாது. தீபாவளியிலே விகடனையும் கொஞ்சம் நினைத்துக் கொள்ளும்படியும், இன்னும் அநேக சந்தாதார்களைச் சேர்த்தனுப்பும்படியும் வேண்டிக் கொள்கிறேன். எல்லோருக்கும் தீபாவளி மங்களம் பாடுகிறேன். ராம், ராம் சுபம்—சூ—சுவாஹா !!

## விருந்தாளி

தன் கைச்சேலவில்லாமல், கவலை யேதும் கண்டிடாமல், உடம்பு ஆடாமல், வாய்க்குள்ளே நல்ல நல்ல உணவுகளை யனுப்பிவிட்டுப் பிறர் வீட்டில் உட்கார்ந் திருப்பவர்க்கு விருந்தாளி யென்று பெயர். (1) பல் விளக்குங்கள், (2) ஸ்நானம் செய்யுங்கள், (3) உண்ண வாருங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் அழைத்தாக வேண்டும் அழைத்ததும் தன் தேக பாரத்தைத் தூக்கிக்கொண்டு எழுந்திருப்பார். விருந்து செய்வோரின் சிரமம்—பாடுகளை இவர் ஏதும் எண்ணார். உன் வீட்டில் அவர்கள் அப்படியானால் அவர்கள் வீட்டில் நீயும் இப்படியே.

"இந்துக்களும் மகம்மதியரும் இவவாறு சச்சரவு கொண்டிருப்பின், இவவிரு தரத்தவரும் ஒன்று சேர்ந்து சுய அரசாக்ஷி முதலிய பொது நன்மைகளைக் கைவல்லியப் படுத்துவ தெங்ஙனம்? தேசாபிமானமுள்ள இந்து—மகமதியர்களே! இவவிஷயத்தைத் தீர்க்காலோசனை செய்யுங்கள்"—என்று 1882-ம் வருஷம் ஆகஸ்டுமாதத்திய சென்னை திராவிட வர்த்தமானி எனும் வாரம் இருமுறைத்தமிழ்ப் பத்திரிகை கூறுகின்றது.

* * *

"திரைதய வர்த்தமானி" என்று ஒரு தமிழ்த் தினசரி பத்திரிகை 1882-ம் வருஷத்தில் சென்னையில் பிரசுரிக்கப் பெற்றுவந்ததாய்த் தெரிகிறது.

# தேர்தலுக்குப் பிறகு!

அப்பபடா! தேர்தல் முடிந்தது. நல்ல வேளையாக எனக்கே வெற்றி கிடைத்தது. எவ்வளவு தெய்வங்களை வேண்டினேன்? எத்தனை கோயில்களுக்குக் கும்பிட்டேன்? எத்தனை பேர் காலில் விழவேண்டியிருந்தது? ஒவ்வொரு வாக்காளரின் வீட்டுக்கும் அலைந்து அலைந்து பட்ட பாடுகள் போதும். என் எதிரி தலை குனிந்துகொண்டு சென்றானே! அவனுக்கு அப்படித் தான் வேண்டும். அவன் என்னை அந்த மாதிரியில் பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்தான். அவன் கெடு நினைவு அவனுக்கே பலித்தது! தனக்கே தேர்தலில் வெற்றி கிடைக்குமென்று நம்பிப் பெரிய பூமாலைகளுக்கும் ஊர்வலங்களுக்கும் கூட எனக்குப் போட்டியாக ஏற்பாடு செய்து வைத்திருந்தான். அவன் எண்ணமெல்லாம் இப்போது மண்ணாயிற்று.

[வெற்றியாளரின் மனைவி வருகிறாள்.]

மனைவி:—என்ன வெகு சந்தோஷத்தில் சிரித்துக்கொண் டிருக்கிறீர்கள். உங்களுக்குள்ளாகவே ஏதேதோ பேசிக்கொண்டு வெகு ஆத்திரமாய் மேஜையை உங்கள் கையால் குத்துகிறீர்களே. பாங்கிக்குப் போன எனது நகைகள் எப்போது திரும்பிவரும்? கழுத்து வெறும் காலியாக இருப்பதில் வெளியில் தலையை நீட்டக்கூட வெட்கமாயிருக்கிறது. பாழாய்ப் போன இந்தத் தேர்தலால் இப்படி அடிக்கடி என் நகைகளுக்கு ஆபத்து வந்து பாங்கிக்கு ஸதா காலமும் போய்த் திரும்ப வேண்டியதாய் இருக்குமோவென்று நடுங்குகிறேன்.

வெற்றியாளர்:—பொறு, பொறு, என் சந்தோஷ சமயத்தைக் கெடுக்காதே. இந்த நேரத்தில் நகைப் பேச்சையும் கடன் பேச்சையும் எடுத்து என் உற்சாகத்தைப் பாழாக்குகிறாயே. அன்றைக்கு இருந்த அவசரத்தில் செட்டியாரின் கடைக்கு நான்கு முறை அலைந்தும் ஆள்விட்டும் பணம் கிடைக்காததால் உன்னிடம் நகைகளுக்குக் கெஞ்சினது. இன்னும் இரண்டு நாளில் வேறொரு செட்டியிடம் பணம் வாங்கி உன் நகைகளைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

மனைவி:—நகைகள் திரும்பக் கிடைப்பதில் சந்தோஷமே. செட்டியிடம் படுகிற கடனை எப்போது தீர்ப்பீர்கள். ஏற்கெனவே கடன் ஏறிக்கொண்டு போகிறதே. அது போதாதென்று இந்தப் புதிய கடன் வேறேயா?

வெற்றியாளர்:—அந்தக் கவலை உனக்கு ஏன்? உனக்கு மேற்பட்ட விஷயங்களில் நீ பிரவேசிக்க வேண்டாம். உன் நகைகள் உனக்கு இரண்டு தினத்தில் வந்துவிடும். அவ்வளவு தான் சங்கதி. இனி இங்கு நிற்காதே, வெளியில் போ,

[கணவனின் கோபத்தைக் கண்டு
மனைவி அப்பாற் செல்ல,
வேலைக்காரன் உள்ளே வருகிறான்.]

வேலைக்காரன் :—ராமசாமிப் பிள்ளை வந்திருக்கிறார். உங்களைப் பார்க்கவேண்டு மென்கிறார்.

வெற்றியாளர் :—எந்தப் பிள்ளையையும் இப்போது பார்க்க முடியா தென்று சொல்லிவிடு. என் அநுமதி யில்லாமல் எவரையும் இங்கு உள்ளே விடாதே. என் பேட்டி கிடைப்பதே எவருக்கும் கஷ்டமா யிருக்கும்படி நீ நடந்து கொள்.

வேலைக்காரன் :—அவர் தங்கள் தேர்தலுக்காக 30 வாக்காளர்களைச் சேர்த்துக் கொடுத்து வெகு விஸ்வாசத்துடன் இரவு பகலாய் உழைத்தவர். அவரை அப்படிச் சொல்லி யனுப்பக்கூடாது.

வெற்றியாளர் :—என்னடா, நீயா எனக்குப் புத்தி சொல்கிறவன்? சீ! அப்பாற் செல். சும்மா தான் செய்தாரோ?—பணம் வாங்கவில்லையோ?—இதுவரையில் பிடுங்கித் தின்றது போதாதென்று மறுபடியும் வந்திருக்கிறு ராக்கும். வந்த வழியைப் பார்த்துப் போகச் சொல்லு. இன்னும் இப்படியே நீ உபகாரம் செய்தவர்களாய்ச் சொல்லி மெச்சிக் கொள்ளக்கூடிய பலர் என்னைத் தேடி வரலாம். எவர்கள் வந்தபோதிலும் நான் வெளியில் போயிருப்பதாய்க் கூறிவிடு.

[வேலைக்காரன் போகிறுன். தபாற்காரன் உள்ளே வந்து கடிதங்கள் கொடுத்துச் செல்கிறுன். மனைவி திரும்பவும் வருகிறுள்.]

மனைவி :—ஏது இவ்வளவு கடிதங்கள்? வி.பி. அனுப்பும் வியாபாரிகளுக்குக் கூட இவ்வளவு கடிதங்கள் வந்து குவியாதே; அவ்வளவும் பணமா? அல்லது வெறுங் கடிதங்களா?

வெற்றியாளர் :—என் வெற்றிக்காக என்னைப் புகழ்ந்து இக்கடிதங்களில் சொல்லப்பட் டிருக்கும். சிலர் என்றால் ஏதாவது அநுகூலத்தைப் பெறவேண்டுமென்று கடிதங்கள் எழுதி யிருப்பார்கள். சிலர் என்னிடம் இரண்டுவார காலமாகச் சாப்பிட்ட உப்புமா—காப்பி—பக்ஷணங்கள்—மதுவர்க்கங்கள்—இவைகளுக்கு நன்றி பாராட்டவும் எழுதி யிருப்பார்கள். சிலர் உண்மையாகவே விஸ்வாசக் கடிதங்கள் எழுதி யிருப்பார்கள். இக்கடிதங்களை யெல்லாம் படிக்க எங்கே நேரமிருக்கிறது. அதற்கு ஓய்வு தான் ஏது? 'வேலைமெனக் கிட்ட' கடிதங்கள்—வீண் குப்பைகள்; இவற்றைக் கொண்டுபோய் அந்தப் பழய கடிதங்களோடு போடு.

மனைவி :—என்ன இது? வந்த கடிதங்களைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லையே? எல்லோரையும் மூடர்களென்றும், உங்களை மட்டும் புத்திசாலியென்றும் நினைத்துக்கொண்டு விட்டீர்களா? உங்களைப் பொது மனிதரென்று எவரும் எல்லா இடங்களிலும் பேசி உங்களுக்காகப் பாடுபட்டு வேலை செய்யப் போக, நீங்களோ அவர்களை உங்களுக்காக உழைக்கும் நாய்க்குட்டிகளாக எண்ணிக்கொண்டு, நல்ல ஏமாந்த குட்டிகள் நமக்கு அகப்பட்டார்களென்று சந்தோஷத்தில் பொங்கி நிற்கிறீர்களே? இது தான் தேசாபிமானமா? "தேசாபிமானி" என்றால் பலர் உழைத்துப் பாடுபட—ஒருவன் பெயர் வாங்க—என்று அப்படித் தான் அர்த்தம் செய்து கொள்ள வேண்டுமோ?

வெற்றியாளர் :—முன்பே உனக்குச் சொன்னேனே ?—உனக்குச் சம்பந்த மல்லாத விஷயங்களில் பேசாதே யென்று? காரியம் ஆனபிறகு இவர்களுடைய உதவிகள் இனி எதற்காக? இனி இந்த ஓட்டர்களின் தயவு எதுக்கு? வேலையில்லாமல் சந்தோஷக் கடிதங்கள் எழுதியவர்களுக்கு, அவர்களைச் சட்டைசெய்து பதில் எழுதுவது தேர்தலில் வெற்றி பெற்ற என் அந்தஸ்துக்கு எவ்வளவோ குறைவு. தேர்தலுக்கு முன்பு நான் சாதாரண மனிதன். இப்போதோ—வெளியில் கேட்டுப்பார்—என் பெயரை எவ்வளவு கௌரவமாகச் சொல்லுகிறார்களென்று உனக்குத் தெரியவரும். முன்பு கடன் கொடுக்க மறுத்த செட்டிகள் இப்போது வலிய என் வீடு தேடி வருவார்கள். இனி என் கைப்பட எவருக்கும் கடிதங்கள் எழுதேன். அதற்காக ஒரு அந்தரங்கக் காரியதரிசி (Private Secretary)யை வைத்துக் கொள்ளப் போகிறேன். என் பேட்டி இனி ராஜா பேட்டியாக எவருக்கும் அருமையாகத் தான் இருக்கும்.

மனைவி :—உங்களுடைய ஆரவாரங்களைப் பார்த்தால், இனி இந்தக் குடும்பம் கடன்காரர்களின் கையில்தான் விழும்போல் இருக்கிறது. எப்படியாவது நீங்கள் ஸந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குப் பெரிய பாக்கியம். தேர்தலுக்கு முன்பு மட்டும் ஒவ்வொரு ஓட்டரின் வீட்டுக்கும் போய் அவர்களின் முன்பு புன்னகை முகம் காட்டி, இனிக்க இனிக்கப் பேசிக் கெஞ்சிக் கெஞ்சி வேண்டிவிட்டு, மறுபடியும் இரண்டா முறை—மூன்று முறைகூட அவர்களின் வீட்டுக்குப் போவதற்கு வேண்டிய நேரம் கிடைத்தது! இப்போது தேர்தலில் வெற்றி பெற்ற பிறகோ தனக்கு வாக்கு (ஓட்) தந்த ஓட்டர்கள், உதவி செய்த நண்பர்கள் தனது வெற்றிக்காகச் சந்தோஷப்பட்டு எழுதுங் கடிதங்களுக்குக் கூடப் பதில் எழுத முடிகிறதில்லை. அதற்கு ஓய்வும் கிடைக்கவில்லையாம்! காரியம் ஆகிப் போன பிறகு ஓய்வு எப்படிக் கிடைக்கும்? தங்கள் நியாயம் சரிதான்!

வெற்றியாளர் :—முன்பு ஓட்டுக்காக அலைந்தது என் காரியம் ஆக வேண்டியதற்காக. அவ்வளவே தவிர ஓட்டர்கள் (வாக்காளர்கள்) மேலுள்ள அன்பா லல்ல. பொது விஷயத்தில் உழைக்க வேண்டுமென்ற ஆவலாலுமல்ல. அப்படி உழைக்கும் சிலர் இருக்கிறார்களானாலும், அவர்களைப் பிழைக்கத் தெரியாத பைத்தியக்காரர்களென்றே சொல்வேன். எப்படியோ தந்திரங்கள் செய்து தேர்தலில் வெற்றி பெற்றாயிற்று. பொதுநலப் பிரியன்போல் வேஷமும் போட்டுக் காட்டியாயிற்று. இனிமேல் இந்தக் கடிதங்களுக்குப் பதில் எழுதவேண்டிய அவசியமில்லை. அவற்றைப் பழய காகிதக் குப்பையில் போடவேண்டியதே.

மனைவி :—அவ்வாறாயின், அவர்களை எப்போதாவது சந்திக்கப் போய், அவர்கள் தங்களுக்குப் பதில் கடிதம் ஏன் எழுதவில்லை யென்றால், நீங்கள் என்ன சொல்வீர்கள்?

வெற்றியாளர் :—இது ஒரு பிரமாதமா? தினசரிப் பத்திரிகைகள் இந்த வேலைக்கு உதவாமல் பின் எதற்கென்று இருக்கின்றன? இந்தப் பத்திரிகைகளின் மூலம், எல்லோருக்கும்—சந்தோஷக் கடிதங்கள் வரைந்த எல்லோருக்கும்—எனது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவிப்பதாயும், ஒவ்வொருவருக்கும் பதில் எழுத எவ்வளவோ விருப்பம் கொண்டிருந்தும் அதற்கான ஓய்வு கிடைக்காமைபற்றி அவ்விதம் எழுத முடியாம லிருப்பதற்கு

என்னை மன்னிக்க வேண்டுமென்றும், மறுபடியும் என் வந்தனங்களை யெல்லோருக்கும் தெரிவித்துக் கொள்வதாயும் ஒப்பாரி யுறவாய்த் தெரிவித்து விட்டால் ஒரே தடவையில் எல்லாத் தொல்லைகளும் தீர்ந்து போகிறது. அவரவர்கள் தங்கட்கும் அந்த பதிலில் பங்கு உண்டென்று நினைத்துக் கொண்டு, "ஆமாம்: பாவம்! அவருக்கு ஒய்வு எது?—எத்தனை கடிதங்களுக்குத் தான் அவர் பதில் எழுதுவார்"—என்று என்னைப்பற்றி வெகு கௌரவமாகப் பேசிக்கொண்டு அவ்வளவில் போய்விடுவார்கள். இதுதான் இப்போதைய நாகரீகர்களால் அநுஷ்டிக்கப்படுகிற தந்திரம்!

மனைவி:—ஐயோ! நாசமாய்ப் போன தந்திரங்களா! இவ்விதத் தந்திரங்கள் பெருகிவிட்டனவே யன்றி, சுதந்திரங்கள் பெருகக் காணோமே! என்ன தேர்தலோ!—என்ன வெற்றியோ!—ஒற்றுமையைக் குலைத்து நசுக்கிக் கொண்டு என்ன கூட்டமோ!—நாட்டிற்கு இதனால் வரும் நலம் தான் யாதோ? ஹா! பாரத மாதாவே! உனக்கு விமோசனம் தான் என்றேயோ? (**கண்ணீர் வடிய அவ்வறையினின்றும் வெளிச் செல்கிறாள்.**)

---

## இவர்களிடம் ஏமாறுதே

வந்ததை வரப்பற்றிக் கொண்டு, தந்ததைப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு, கொடுத்தவனுக்கு ஒரு வந்தனத் தலையாட்டு ஆட்டி, சிறிது புன்னகை காட்டி அனுப்பிவிடுகிற சிலர் உண்டு. இவர்களிடம் புத்தகமோ, பொருளோ, கடனோ, காசோ ஏனோ தந்து ஏமாறுகிறாய்? அதை விலைக்குத் தந்தாலும் நாலு காசு வருமே. அவர்களின் பல்லிளிப்பில் நீ பெற்று விடுகிற கௌரவம்—லாபம் என்னவோ? இனியேனும் ஏமாறுதே.

சில வருஷங்களுக்குமுன் பர்மாவில் மோல்மேனுக்கு சுமார் 43-மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் மூங்கில்கள் சூழ்ந்த ஓரிடத்தில் ஒரு பர்மியன் களைப்புடன் ஸயனித்திருந்தான். அவன் அன்றுதான் சிறையிலிருந்தும் விடுபட்டவன். சிறைச்சாலையில் அவன் நேத்திரங்கள் கெட்டு அந்தகனாய் விட்டதால் மனமிரங்கி அவனை விட்டுவிட்டனர். ஸயனித்திருந்த இவனை ஒரு விருத்தாப்பியர் தட்டி எழுப்பி நீ யார் என்று கனிவாய் வினவ, அதற்கு அவன் தன்பாடுகளைச் சொல்லிப் புலம்பினான். விருத்தாப்பியர் அவனது கைகளைப் பற்றி யழைத்துச் சென்று ஒரு கிணற்றின் அருகே நிறுத்தி, கிணற்றங்கரைச் சேற்றை வாரிக் குழைத்து அவன் முகத்தில் பூசிக்கொள்ளச் சொல்லி, பிறகு அவன் கையைப் பிடித்துக் கிணற்று நீரை வாரி முகத்தைக் கழுவச் சொல்லியபின் மாயமாய் மறைந்து போயினராம். உடனே பர்மியனுக்குக் கண்கள் பிரகாசமாய்த் தெரிந்ததாம். அது பிரஸித்தமாகி அக்கிணற்று நீரைப் பலர் மருந்தாக உட்கொள்ள அநேக வியாதிகளும் குணமாய் விட்டனவாம். இப்போது அக்கிணற்றின் தெய்வீகம் போய்விட்டனவோ—யாதோ!

# பிரபஞ்ச தரிசனம்

உலகம் தோன்றிய கால முதற்கொண்டு சத்தியத்துக்கும்—அசத்தியத்துக்கும், கொடுங்கோல் அரசுக்கும்—ஸ்வாதீனத்துக்கும் ஸதா போர் நேர்ந்து கொண்டே வந்திருக்கிறது. அசத்தியத்தைத் தவிர்த்து, சத்தியத்தை நிலை நாட்ட வெகு கஷ்டங்கள் இருந்து வந்திருக்கின்றன. கொடுங்கோல் அரசை நீக்கி ஸ்வாதீனத்தை ஸ்தாபிக்க, சரித்திரங்களில் ஒவ்வொரு காலத்திலும் மானிடர்கள் கஷ்டப்பட்டு வந்திருக்கிறார்கள். மனஸாக்ஷிக்கு விரோதமாய் நடவோமென்று முரண்டு செய்து வைராக்கியம் செலுத்தினவர்கள் படாத பாடு பட்டிருக்கிறார்கள்.

***

ஆதிகாலத்தில் கிரீஸ் தேசத்தில் தர்க்க சாஸ்திர வேதாந்த மேதாவியாயிருந்த ஸாக்கிரட்டிஸ் பாஷாணம் குடிக்கும்படி கட்டாயம் பண்ணப்பட்டார். கிறிஸ்து மத ஸ்தாபகராகிய இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டார். இட்டலி தேசத்தில் ஜியார்டோனு புருனே என்ற மகான் நெருப்பில் போடப்பட்டார். அவர் தேகத்தைச் சுற்றி ஜுவாலை எரியும் பொழுதும், அவரது அபிப்பிராயங்களை மாற்றும்படி கேட்கப் பட்டார். அவர் கடைசி வரை தமது அபிப்பிராயமே உண்மையென்று கூறிப் பிராணனை ஸந்தோஷமாய் விட்டார். காலிலியோ என்ற வான சாஸ்திரி பூமி சூரியனைச் சுற்றி வருகிறதென்று தம் அபிப்பிராயத்தைச் சொன்னபொழுது அவர் ஹிம்ஸிக்கப்பட்டார். அவரை வதை செய்து துன்பப்படுத்தும் மத்தியில் "நீர் இப்பொழுதாவது பூமி சுற்றாமல் அசைவற்று நிற்கிறதென்று சொல்வீரானால் உம்மை விட்டு விடுகிறோம்" என்று அவரை ஹிம்ஸித்தவர்கள் கேட்டபொழுது, அவர் மறுபடியும் "பூமி இன்னும் சுற்றுகிறது" என்று வற்புறுத்தினார்.

***

மத விஷயத்துக்காகவும், சாஸ்திர விஷயத்துக்காகவும் மானிடர்களில் உயிர் விடுத்தவர் ஏராளமாயிருக்கிறார்களென்று நாம் சரித்திரங்களில் வாசித்திருக்கிறோம். இவர்களை ஹிம்ஸைப்படுத்துகிறதற்காகப் பற்பல காலங்களில் பல ஆயுதங்களும், கருவிகளும், உபாயங்களும் செய்யப்பட்டன. மனிதன் தன் மூளையை நல்ல வழியிற் செலுத்தாமல் இவ்வித கோரமான ஆயுதங்களைக் கண்டு பிடிக்கத் தன் புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தியிருக்கிறான். அயல் நாட்டுச் சரித்திரங்களை நாம் கவனிப்பானேன்? நம்முடைய சரித்திரத்தில் பாண்டிய அரசர்கள் சமணர்களைக் கழுவேற்றியதை அறியோமா? இவைகளெல்லாம் எதற்காகச் செய்யப்பட்டன? அபிப்பிராய பேதத்துக் கல்லாமல் வேறொன்றுக்கும் செய்யப்படவில்லை. இது நியாயமா?

***

ஒருவன் பூமி உருண்டையாயிருக்கிறது—அது சூரியனைச் சுற்றுகிறதென்கிறான். மற்றொருவன் பூமி தட்டையாயிருக்கிறது—அதை ஆயிர நாவுள்ள ஆதிசேஷன் சுமக்கிறான் என்கிறான். ஒருவன் எங்கள் கடவுள்

திக்குகளை ஆடையாகக் கொண்டு திகம்பரராயிருக்கிறார் என்கிறான். மற்றொருவன் எங்கள் சிவபெருமான் விபூதி ருத்திராட்சம் அணிந்த சைவ சொரூபியாயிருக்கிறார் என்கிறான். ஒருவன் எங்கள் கடவுள் கருமேக வண்ணராய் திருப்பாற்கடலில் வீற்றிருக்கிறார் என்கிறான். மற்றொருவன் எனது தேவன், தகப்பன்—மகன்—பரிசுத்த ஆவி—என்ற அம்சம் பொருந்தி, மானிடர்களுடைய பாவத்தைப் பெற்றுக்கொள்ள, தமது குமாரனை உலகில் அவதாரம் செய்வித்துப் பாவிகளுக்காகப் பாடு படச் செய்தார் என்கிறான். இவ்விதமே பௌத்தர்கள், இஸ்லாம் மதஸ்தர்கள், பார்ஸி மதமாகிய ஸோரோஸ்டிரானியர்கள் முதலிய பற்பல மதஸ்தர்களும் வெவ்வேறு கொள்கைகளை அனுசரித்து வருகிறார்கள்.

***

ஒருவர் தமது மூதாதை மதத்தை அநுஷ்டிக்காதவர்களையாவது, அல்லது தமது அபிப்பிராயத்துக்கு அநுஸரணையில்லாத மதத்தைத் தழுவுகிறவர்களையாவது நாம் ஏன் தூஷிக்க வேண்டும், கஷ்டப்படுத்த வேண்டும், எரிக்க வேண்டும், கொல்ல வேண்டும்—என்று தம்மையே தாம் வினவிக் கொண்டு சாந்தத்வம் பெற்றிருக்கலாகாதா? "என்ன ஹிம்ஸித்தாலும், என் அபிப்பிராயம் அபிப்பிராயமே; என்னைச் சுட்டெரித்தாலும் என் சாம்பலும் அவ்வித அபிப்பிராயத்தை உடைத்தாயிருக்கும்" என்று ஒரு அமெரிக்க மகான் சொன்னார். அபிப்பிராய பேதங்களுக்காக ஒருவரைத் துன்பப்படுத்துவது என்ன நியாயம்? இப்போது நாம் பெற்றிருக்கிற சொற்ப நாகரீகமுங் கூட—நெருப்பில் போடப்பட்டும், மற்றும் பலவித மாயும் ஜீவவதை யடைந்த மகான்களின் மூலமாக வந்ததென்றே சொல்ல வேண்டும். அவர்கள் எல்லாம் தம் பிராணனை விடப் பயந்து தமது அபிப்பிராயங்களை மாற்றி யிருப்பார்களானால் உலகத்திற்கு உண்மையான விஷயங்கள் தெரிவது எப்படி?—நாகரீகம் உயரவோ, உலகம் விருத்தியடையவோ எவ்வாறு முடியும்? ஆனால், அவர்களின் காலங்களில் அவர்கள் தோல்வி அடைந்ததாகவே எண்ணப்பட்டது. இப்போதோ நாம் அவர்களைத் தங்கள் அபிப்பிராயத்தில் வெற்றி யடைந்தவர்களென்று போற்றுகிறோம்.

***

இதுபோலவே ராஜீய விஷயங்களிலும் ஸ்வாதீனத்தை ஸ்தாபிக்க வேண்டி உலகம் தோன்றிய கால முதல் துன்பப்பட்டவர்களின் தொகை கோடிக்கணக்காயிருக்கும். ஒரு நற் கருத்தாவது அல்லது ஸ்வாதீனம் வேண்டுமென்ற ஆவலாவது முதலில் ஒரு மனிதன்—அல்லது இரண்டு மனிதரிடம்தான் ஜெனிக்கின்றது. பிறகு ஒன்று—இரண்டாய், இரண்டு—இரண்டாயிரமாய், கூடிய சீக்கிரத்தில் அந்த ஆவல் பொது ஜனங்களிடமெல்லாம் பரவுகிறது. இதுதான் சரித்திர ஆராய்ச்சியின் அநுபவம். இந்த ஆவலை எதிர்க்க சேனைகளும் ஏராளமான போர்க் கருவிகளும் குண்டுகளும் பீரங்கிகளும் எதிரிகளால் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஸ்வாதீனம் அடைய வேண்டுமென்ற ஆவல்தான் பொது ஜனங்களுடைய பலத்தின் ரகசியம். ஸ்வாதீனம் என்ற பெயரைக் கேட்டவுடனே ஜனங்களுக்கு எதிரே முற்காலத்தில் யுத்தக் கருவிகளை நிறுத்தினார்கள். அநேக தேசங்களில் முடிவில் வெற்றி ஜனங்களுடையதாகவே முடிந்தன. என் இப்படி?

***

ஏனென்றால், ஜனங்களுடைய பலத்தை வெளியே பார்க்க முடியாது. சக்தி உள்ளிருந்து ஆவி ரூபமாய்க் கிளம்புகிறது. நிராயுதபாணியான சக்தி வெற்றிக் கொடியை நாட்டவும், ஏராளமான ஆயுதங்களுடன் அந்த சக்தியை எதிர்ப்போர் தோல்வியுற்றுப் பின்னடையவும் நாம் பார்த்து வருகிறோம். நேற்றையதினம் ரஷ்யாவில் பார்த்தோம். பிறகு ஜர்மனியில் பார்த்தோம். ஸ்வாதீனம் சூரியனுக்கு ஒப்பாகும். அந்த சூரியப் பிரகாஸத்தை மறைக்க எவராலும் முடியாது. ஸ்வாதீனம் மனிதனுடைய இயற்கையாக இருக்கிறது. அதை அடைய மனிதன் தன் ஜீவனை ஸந்தோஷமாய் விடுகிறான்.—தான் பிழைக்கும்படியல்ல—தன் ஜாதியார் உய்யும்படியும், மானிடர் முன்னேறிச் செல்லும்படியும் தன் உயிரைத் திரணமாக நினைக்கிறான். உலகில் ஸ்வாதீனம் நீடித்திருக்கும்படி தானே தன்னைப் பலி கொடுத்துக் கொண்டு, இது ஸ்வாதீனத்தின் விலை யென்று தம் சந்ததியாரும் மானிடரும் அறியும்படி அறிக்கை யிட்டுவிட்டு, கடவுள் பதம் அடைந்தவர்கள் எத்தனையோ பேர்களாவர்.

***

ஸ்வாதீனத்தின் விலையைப்பற்றி மேலே சொன்னோம். தாம் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றாது அதை நிறைவேற்றி வைப்பதும் ஸ்வாதீனத் தன்மைக் குரியதேயாகும். நமது பாரத நாடு ஸ்வாதீனம் பெற வெகு காலமாக முயன்று வருகின்றது. மகாத்மாவின் மகத்தான உபதேசங்கள் தான் நம்மைக் கை தூக்கிவிடக் கூடியவை. அவ் வுபதேசங்களின் முன்னணியில் நிற்பது மகா பரிசுத்தம் பொருந்தியதான கதர் அணிதல்தான். தீபாவளி தினத்தை நமது சபத தினமாகக் கொள்ள வேண்டும். தீபாவளியை நமது ஜாதீய பண்டிகையாக்கி, அன்று நமது பரிசுத்த கதரை யணிந்து பாரத மாதாவைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஜாதீய ஸ்வாதீனத்திற்கான வலிமை நமது மனத்திலும் இரு தோள்களிலும் பூரணமாய் இருக்கின்றதாவென்று நம்மை நாமே பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளும் நாள் தீபாவளி நாளே. அதுவே நமது திருநாள்.

---

## எளியவனும் செல்வனும்

---

“அவன் ஒரு ஏழைப் பூச்சி. அவனுக்கே அவ்வளவு திமிரா கில் செல்வச் சீமானை எனக்கு எவ்வளவு இருக்கும்?—என்று உறுமுகிறான் பணக்காரன்.

செல்வவான் உறுமுகிற வகையில்—அவனின் அந்தரங்க குணங்களை நன்கு தெரிந்து கொண்டு விலகுகிறான் ஏழை.

“நான் ஏழையேயெனினும் எவரையும் வணங்கேன்; தன் மதிப்பு, மானம் என்பதைக் கைவிடேன். இப்பணச் செருக்கினரிடத்து மயங்கேன்” என்கிறான் ஏழை.

“ஏழைப் பெண் ணில் கற்பில் குறைந்தவளாய் விடுவளோ?”

# தர்க்க விளக்கம்.

## வினவுக்கு விடை

(269-ம் பக்கத் தொடர்ச்சி.)

### III

இராம பிரான் மீது குற்றஞ் சாட்டி அதற்கு மூன்று சாக்ஷியங்கள் சொல்லப்படுகின்றன. முதலாவது : ராமபிரானுக்குப் பொன்மான் உண்மையான மான் அல்ல வென்று நன்றாய்த் தெரிந்தும், அதனால் ஆபத்துகள் அநேகம் நேரிடுமென்று உணர்ந்தும், கடைசியாக ஸ்திரீ புத்தியைக் கேட்டாரே ; அவர் தீர்க்கா லோசனை யுள்ளவராயும் புத்திசாலியாயு மிருந்தால் அப்படி ஸ்திரீ வார்த்தையைக் கேட்பாரா ? அதனால் வரும் துன்பத்திற்குப் பாத்திரமாவாரா ?

இரண்டாவது: சீதையின் மகிமையையும், அவ்வம்மணியின் பாதிவிரத்யத்தையும் சந்தேகித்து அவ்வுத்தமியை அக்கினியில் குதிக்கச் சொன்னாரே ; அது தான் போகட்டும் ; அப்படி யெல்லாம் நடந்து தன் பதிவிரதா மகாத்மியத்தை நிரூபித்த பிறகும், கேவலம் ஒரு வண்ணான் செய்த தூஷிதத்தைக் கேட்டு ஒரு கர்ப்பிணியை நிர்மானுஷ்யமான ஆரண்யத்துக்குத் துரத்தினாரே, இவரையோ நாம் நரசிரேஷ்ட ரென்று கொண்டாடுவது? கடினமான ஹிருதயமுள்ளவரென் றல்லவா சொல்ல வேண்டும்.

மூன்றாவது: கடைசி காலத்திலும் குற்றமே காணவேண்டுமா? சீதையிடம் இரண்டு குழந்தைகளைப் பார்த்து விட்டு, குழந்தைகள் இருவர் ஏது?—எனக்குச் சந்தேகம் உண்டாகிறது என்றாரே; இவரையா பிரேமநாத ரென்றும், ஏகபத்நீ விரத ரென்றும் சொல்வது? ஏகபத்நீ விரத ரென்று பெயர் மட்டும் கொண்டு விட்டு தாம் மணந்த மனைவியை இவ்வாறு துன்புறுத்துவது ஒரு தீர புருஷனுக்கு லக்ஷணமோ? ஆகிய இம்மூன்று கேள்விகளுக்கும் நமது சிற்றறிவுக்குத் தெரிந்தளவு சமாதானம் சொல்லுவோம்.

***

முதலாவது: இவ்வளவு தீர புருஷ ராயிருந்தால், ஸ்திரீ புத்தியைக் கேட்கலாமா வென்பது கேள்வி. அதற்குச் சமாதானம் சொல்வோம். ஸ்திரீ புத்தியைக் கேட்கக் கூடா தென்றால், ஒவ்வொரு விஷயத்திலும் கேட்கக் கூடாது என்று அர்த்தமல்ல. புருஷனைச் சாப்பிட வாரும் என்றழைத்தால், அவன் போகக்கூடாதா? ஏனென்றால், ஸ்திரீ வார்த்தையைக் கேட்கக் கூடாதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்களே, ஆதலின் புசிப்பதற்குச் செல்லக்கூடா தென்றால் பொருந்துமா? ஸ்திரீ ஒரு வஸ்திரம் வேண்டு மென்றால், அதை வாங்கிக் கொடுப்பது புருஷனின் கடமையன்றோ? மேலும் சீதையின் நிலைமையைப் பார்ப்போம் ? எல்லோரும் பரிதபிக்கும்படியான ஸ்திதி. விவாகம் செய்து வெகு காலமாகி விடவில்லை. புதிதாக வீட்டுக்கு வந்த புதிய ரத்நம். காட்டில் முள்ளிலும் கல்லிலும் நடந்து வருகிறாளல்லவா? அதை நினைத்தால் எவர் மனது தான் கரையாது? ஆயினும் அவ்வுத்தமி அதைக் கஷ்டமாக நினைத்தாளோ? இல்லையே.

ஏன் நினைக்கவில்லை? ராமபிரான் ஸமீபத்திலேயே இருந்தாரன்றோ? அப்படித் தன்னிடத்தில் அபிமானம் வைத்து ஆயிரம் கஷ்டங்கள் இருந்த போதிலும் கொஞ்சமேனும் பாராட்டாமல், ஸதா ராமதரிசனத் திருப்தியிலேயே ஆநந்தங் கொண்டிருந்த சீதையின் வார்த்தையை இராமர் கேட்டது ஆச்சர்யமா? கருணையில்லாத நாதனை நாதனென்னலாமோ? அதிலும் புஜபல பராக்கிரமசாலியா யிருக்கிற தனது கணவனைக் கேட்டால், அகப்படுமென்று பூர்ண நம்பிக்கையுடன் அந்த மான் வேண்டு மென்ற அபிலாஷையைத் தெரிவித்தவுடன், தனக்காக இவ்வளவு கஷ்டப்படும் உத்தமியின் எண்ணத்தைப் பூர்ணம் செய்வோம் என்று ராம பிரான் கேட்டாரேயொழிய, ஏதோ ஒரு பெரிய ராஜ்ய வியவகாரத்தில் யோசனை கேட்கவில்லை. ஆகையால் தனது சிரமத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் சீதையின் கோரிக்கைக்கு இணங்கினர். பர்த்தாவின் பணிவிடை யொன்றிலேயே ஸதா ஆநந்தித்துக் கொண்டிருக்கிற உத்தம ஸ்திரீகளின் நாதர்களே! உங்களின் தர்ம பத்நி ஏதாவது விரும்பிக் கேட்டால் கேவலம் மிருகம் மாதிரி அவர்களை உதைத்துத் தள்ளுவீர்களோ? அல்லது அவர்களது அல்ப இச்சையைப் பரிபூரணம் செய்வீர்களோ? பராக்கிரமசாலிக்கு எதுவும் அற்பமேயாதலால் பொன் மானையும் ரகுநந்தர் ஒரு சாமான்யமாகவே எண்ணித் துரத்திச் சென்றார். அயோத்தியில் கைகேசியும், ஆரண்யத்தில் சூர்ப்பநகியும் ராமாயணத்துக்கு அவசியமாகிறார்கள். அதற்கேற்ப முன் சூழ்வினைக்குத் தகுந்தவாறு காரியங்கள் நடக்கின்றன.

***

அக்காலத்தில் ராமபிரான் சீதையின் பிரியப்படி, பொன் மானைப் பிடிப்பதற்குச் சென்றிராவிட்டால், உலக மெல்லாம் கேவலம் ஜானகி கஷ்டப்படுங் காலத்திற் கூடக் கொஞ்சமேனும் அவள் பேரில் தயை வைத்து கருணை பாராட்டி அவ்வுத்தமியின் அபிலாஷையை ராமர் தீர்க்க வில்லையே, ஆகையால் அவர் சுயநலம் பாராட்டுகிறவர் என்று உலகம் சொல்லும் இந்த அபவாதத்திலிருந்து தன்னை மீட்டுக் கொள்ளும் பொருட்டு சீதா தேவியின் வார்த்தையைக் கேட்டார்.

***

இரண்டாவது: சீதையின் கற்புக்குப் பங்கம் நேரிடவில்லை யென்று நிச்சயமாய்த் தெரிந்திருந்தால், இவர் அக்கினியில் பிரவேசம் செய்யச் சொல்லுவாரோ? அப்படி அவ்வுத்தமியைச் சொன்னாரே; அது தான் போகட்டும். அவ்வுத்தமி தன்னைப் பதிவிரதை யென்று நிரூபித்தான பிறகும் ஒரு வண்ணான் பேச்சைக் கேட்டுக் காட்டுக்கு விரட்டியடித்தாரே! இவர் இரக்க முள்ளவராவாரா என்பது கேள்வி ராமபிரான் மஹா தயாளு வென்பது நமது உத்தரம். சீதையைப் பிரிந்து அவர் கண்மணியே! பெண்மணியே! காதலியே! ஜானகியே! என்று அழுதது கொஞ்சமா! அசோகவனத்திலிருந்து சீதை வந்த பொழுது தமக்குச் சற்றேனும் சந்தேகமில்லை. சந்தேக மிருந்தால், அவ்வளவு ஜனங்களுக்கு முன் ஹநுமார் முதலியவர்கள் சொல்லியும் கேட்காதவர் போல் அபிநயிப்பாரா? உள்ளபடி தமது பத்தினியின் கற்பில் ஸம்சயம் இருந்திருந்தால் அநேகர் முன்பாக தமது பிதா வந்து சொல்லட்டு மென்பாரா? இல்லையேல், தான் தனியாய் உட்கார்ந்து மனதை உறுதி செய்து கொண்டு எனது பிதா சொன்னால் தான் அவள் பாதிவ்ரதயம் ஸத்யமென்று நினைத்து, அவர் சொல்லுமளவும் சும்மா

விருப்பாரா? அவருக்கு உண்மையிலேயே சந்தேகம் இருந்திருந்தால் தனியே தான் இந்தப் பரீக்ஷைகள் செய்திருப்பார். பகிரங்கப் பிரவேஸமாய் முற்பட்டிரார். ஆகையால், அவருக்குச் சற்றேனும் சந்தேகமில்லை. உலகத்திற் கெல்லாம் சீதா தேவியின் பதிவிரதா மகாத்மியம் விளங்கட்டு மென்பது அவர் கருத்து. அதன்படியே சீதையை மகா உத்தமி யென்று அனைவரும் போற்றினர்.

***

அதன் பின்பு அயோத்தியை யடைந்தார். அங்கு கொஞ்ச காலத் துக் கெல்லாம், வண்ணான் சொல்வதைக் கேட்டு சீதையைத் துரத்தினார். அதற்குக் காரணம், அவர் மஹா ஸத்யவந்தன். அவரைப் போல் அபிமான முள்ள புருஷன் எவருமில்லை. அதனால் தன் பத்தினியை உள்ளடங்கிப் பொங்கும் துக்கத்தோடும் வனத்திற்கு அனுப்பினார். உத்தமர்களுக்கு லோகோபவாதம் நஞ்சினுங் கொடியதாய்த் தோற்று மன்றோ? உண்மை யான அபிமானம் இருந்தால் அரண்யத்துக்கு அனுப்புவாரா வென்று கேட்கலாம். ராமர் செய்ததை ஆலோசிப்போம். சீதையைக் காட்டுக்கு அனுப்பாமல் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டால், வண்ணானைப் போலச் சிலர் ராமரை "பெண்ஜாதி பித்துப் பிடித்து அலைகிறவர்" பெண் டாட்டியைப் பற்றி சந்தேகம் இருந்தபோதிலும் சேர்த்துக் கொண்டு விட் டார் என்று சொல்லுவார்கள். இப்பொழுது காட்டுக்கு அனுப்பினபடியால், ஆஹா! சீதாதேவி மஹா பதிவிரதை; மஹா உத்தமி. பாதி விருத்யமே உருவெடுத்து வந்தது போலிருந்தாள்; அவ்வுத்தமியை நிர்த்தாக்ஷண்யமாய் ராமர் அனுப்பினார்; இவ்விஷயத்தில் ராமர் கொஞ்சமேனும் சரியாய் நடக்கவில்லை. தேவியின் மீது ஒரு குற்றமும் இல்லாதிருக்கும் பொழுது தள்ளின பாபியாகிறார்—என்று அநேகம் சொல்லுவார்களென்று ராம பிரானுக்குத் தெரியும். வால்மீகர் முதல் எல்லோரும் ராமரைக் குற்றஞ் சாட்டினார்கள். தம்மீது குற்றம் சொல்லச் சொல்ல ராமபிரானுக்கு ஆநந் தமே விளைகிறது. ஏனெனில், தன்னை எல்லோரும் தூஷித்துத் தனது பத்தினி உத்தமி என்று எல்லா உலகமும் கூறுவதில் அவருக்கு மிகவும் சந்தோஷம். தன்னைக் குற்றஞ் சொன்னாலும் சொல்லட்டும்; தன்னை நிஷ்கண்டக னென்று சொன்னாலும் சொல்லட்டும்; தன் பத்தினியின் பதி விரதா தர்மத்திற்கு யாதொரு பங்கமும் வராமல் காக்க வேண்டியது தன் கடமை யென்று எண்ணினார்.

***

மூன்றாவது: சீதையிடம் இரண்டு குழந்தைகளைக் கண்டு ராமர் சந் தேகித்ததைப் பற்றியது. இராமபிரானுக்கு எந்த நாளிலும் சீதையின் மீது சந்தேகம் இருக்க வில்லை. உலகத்துக்கு மிகவும் பயந்தவர். அபவாதத்திற்கு அஞ்சி மாந்தர்கள் நடக்க வேண்டுமென்ற சித்தாந்தத்தைக் கற்பிக்கவந்தவர். அதனால் தான் வண்ணானின் அவதூறு கேட்டு உலகத்தின் திருப்திக்காக சீதையை வனத்திற்கு அனுப்பி விட்டுப் பின் கதறலானார். அவ்விதமே இப்பொழுதும் உலகத்தின் திருப்திக்காக இரு குழந்தைகள் ஏது என்று சீதையைக் கேட்பதானார். இது சாமான்யனும் விசாரிக்கக் கூடியதே. கர்ப் பிணியான தனது மனைவியைப் பிரிந்து தேசாந்தரம் சென்றவனொருவன் பிறகு திரும்பி வருங்காலத்தில், தன் பத்தினியிடம் இரண்டு குழந்தைகளைக் காண்பானாயின், அவன் உள்ளம் தன் இல்லாளின் கற்பை எத்துணைப்

போற்றிப் புகழ்வதாயிருப்பினும், இரண்டு குழந்தைகள் எவ்வாறு உண்டாயினர் என்ற சந்தேகப் பேய் தோன்றவே செய்யும். இரட்டைக் குழந்தைகள் என்று உண்மையைச் சொன்னால், அவனும் திருப்தி பட்டுப் போவான். அவ்விதமே இராமர் லோக ஸ்வபாவத்தைக் கருதி சீதையைக் கேட்க வேண்டியவரானார். அதற்கு வான்மீக முனிவரால் தான் தர்ப்பையிலிருந்தும் உண்டாக்கிய குழந்தை மற்றொன்று என்று விடையும் சொல்லப்பட்டது. எனவே, இவ்வகையில் இராமபிரானைக் குற்றம் கூறவேனும், குற்றமே காண்பவர் என்று சொல்லவேனும் இடமில்லை. குற்றத்தை எல்லாம் தாம் சுமந்து குணநலங்களை யெல்லாம் சீதைக்கு ஈந்தார். லோகாபவாதத்துக்கு அஞ்சுவது உத்தமர்களின் இயல்பு. அவ்விதமே இராமரும் தமது அஞ்சுந் தன்மையை உணர்த்தினர். இவற்றிலிருந்தும் இராமபிரான் சீதையிடத்துக் கொண்டிருந்த உத்தம சிந்தையையும் அன்பின் பெருக்கையும் ஒருவாறு உணரலாம்.

***

ஏகபத்நீ விரதரென்று பெயர் மட்டும் கொண்டுவிட்டுத் தாம் மணந்த மனைவியை இவ்வாறு துன்புறுத்தலாமா வென்பது மற்றொருவினா. "துன் புறுத்துதல்" என்பதற்கு இன்னது தான் பொருள் என்பதையே இராமர் அறியாதவர். யாவர்க்கும் நலமே விளக்க நினைத்தவர். தமது சிற்றன்னையின் திர்ப்திக்காகவே அரண்யம் சென்றவர். பரதனின் திருப்திக்காகவே மகுடாபிஷேகத்துக்கு ஒப்பியவர். இன்னும் நெடுக மற்றவர்களின் திருப்திக்காகவே அவர் நடந்து கொண்டவர். சீதையின் திருப்திக்காகவே மான் பின் சென்றவர். கடைசி காலத்திலும் உலகத்தின் திருப்திக்காகவே இருமக்கள் ஏது என்று சீதையைக் கேட்டவர். அதனால் சீதைக்கு மிக்க துயரம் ஏற்பட்டிருக்கக் கூடும் தான். என் செய்வது? தப்பும் வழி வேறில்லை. சீதைக்குத் துயரம் உண்டாயினும், அவற்றின் மூலமாகச் சீதையின் தூய கற்பு உலகத்துக்குப் பிரகாசமாகு மாதலின், தம்மைக் கொடியன் என்று உலகம் இகழினும் இகழ்க; சீதையைக் குறித்து சிலாக்கியமாய்ச் சொல்லிக் கொள்ளப்பட்டால் அதுவேபோது மென்று நினைத்து நடந்த தயாள மூர்த்தியாவர். எவர்கள் ஸத்தியத்தையே துணை கொண்டு தர்மத்துக்குப் பயந்து நடக்க முயல்கின்றார்களோ அவர்களுக்கே அபவாதம் நேர்வது லோக சகஜம். அவ்விதமே கருணையே ஓர் உருவெடுத்து வந்த ரகுநந்தரும் கற்பில் பழுது கூறுபவர் என்ற கொடிய அபவாதத்தை ஏற்கவேண்டியவராய் விடுகிறார். உத்தமர்களுக்கு எந்த நாளிலும் கஷ்டம் தான், அபவாதம்தான்; அதுவும் லோக ஸ்வபாவம்தான்.

***

இராமர் சீதையினிடத்து வைத்த அன்பு ஒரு தனி அன்பு; என்றும் குன்றாத அன்பு. அவ்வளவு அன்பு வைத்ததற்கு அவர் அடைந்த சுகானுபவத்தை விட, சீதையைப் பிரிந்து பட்ட துயரமே அதிகமாக இருக்கும். உலகில் அன்பு கொண்ட இடத்திலெல்லாம் கண்ணீர்ப் பெருக்கே மிகுதி; கதறியழுதலே பெரும் பான்மையாக முடியும். அன்பு கொண்ட இடத்தில் தான் அதிக சீக்கிரத்தில் மறைந்து போகிறார்கள். பரஸ்பரம் அன்பற்ற தம்பதிகள் நெடுநாள் ஜீவித்து நிற்க, அன்பே உருவாய் நின்ற ஸதிபதிகள் தான் ஒருவரை யொருவர் பிரிந்து துறந்து அங்கலாய்ப்புக்கு

ஆளாகின்றனர். அன்புள்ள ஸகோதரத்வத்திற்குத் தான் அதிகமான ஆபத்து; அன்புள்ள நட்புக்குத்தான் பாழ்பட்ட பிரிவினை. அன்பினர் களைத் தான் கடவுள் வெகு தூரத்தில் வைத்து விடுகிறார். அன்புடன் அனைத்தும் செய்தவர்களுக்குத் தான், 'நீ' என்ன செய்து விட்டாய் என்ற அபவாதம். அன்புள்ள குமாரனையே மாதா முதற்கொண்டு வெறுக்க நேர் கிறது. அன்புள்ள கணவனைத்தான் மனைவி பகைக்கிறாள். அன்புள்ள இல்லாளிடத்துத் தான் கணவனுக்குப் பெரிய துவேஷம். அன்பு வைத்த குழந்தைக்கே அடிக்கடி பிணி நேர்கிறது. தம்மீது அத்யந்த அன்பு மிகுந்த பக்திமான்களையே பரமனும் சோதிக்கின்றார். அன்பு வைத்துக் காப்பாற்றிய பொருள் தான் காணமற் போகிறது; அல்லது பழுது பட்டு விடுகிறது. அதுபோலவே, அன்பின் களஞ்சியமான இராமபிரானும், அந்த அன்பு காரணமாகவே பலவகையாலும் அங்கலாய்ப்புக்கு ஆளாகி, அபவாதத் தையும் சுமந்து, உலகத்தின் திருப்தியையும் எதிர்பார்த்து நடந்துகொள்ள வேண்டியவரானார். இராமபிரானைப்போன்ற தயாளுவும், உத்தமரும், ஏக பத்தினீ விரதருமான மகா புருஷர் உலகில் வேறு எவருளர்? அந்த மகத் துவமிக்க இராம நாமத்தை நாம் ஸதா ஸ்மரிக்கக் கடவோம்.

☞ குறிப்பு :—இதுபோன்ற தர்க்க விளக்க-வியாசங்களை நமது நண்பர்கள் எழுதியனுப்ப முயன்றிடுவாராக. அதற்கு முன் மாதிரியாய் இது உதவுக.

---

## பத்து வருஷங்களுக்குப் பிறகு?

நீ எவ்வளவோ நல்ல புத்தகங்களையும், மாத—வாரப்—பத்திரிகைகளையும் சேர்த்து வைக்காமற் போய் விட்டாய். இப்போது அவை கிடைப்ப தேது? இன்று அகப்படும் மாதப் பத்திரிகைகளும், புத்தகங் களும் இனி பத்து வருஷத்திற்குப் பிறகு அருமை யாகி விடும். கிடைக்காமற் போய்விடும். வருஷங்கள் ஆக ஆகப் பழைய நூல்களுக்கு அதிக மதிப்பு. ஆதலின் இப்போது கிடைக்கும் நூல்கள், பத்திரிகைகள் எல்லாவற்றையும் உடனே சேகரித்து வை.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு.

(272-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 19. அண்ணன் தம்பிவேண்டும் இன்னும் தம்பிரானே.

அண்ணன் தம்பி அதிகமாய் வேண்டும் ஸ்வாமி என்று பகவானை ஒரு ஸகோதரன் பிரார்த்திப்பதாக இந்தப் பழமொழியின் கருத்து. தம்பி தான் தனக்குப் பிறக்கக் கூடும்; அண்ணன் வேண்டுமென்று எப்படிப் பிரார்த்திக்கலாம்? வேண்டியமட்டும் அண்ணன்கள் தனக்கு முந்தியே பிறந்திருக்கவேண்டும். தனக்குப் பிறகு தனக்கு அண்ணன் பிறக்கவேண்டும் என்பதாக ஒருவன் எவ்வாறு பிரார்த்திக்க முடியும் என்பதாக நமது நண்பர்கள் சந்தேகிக்கலாம். ஆனால், அண்ணன் வேண்டுமென்று இந்தப் பழமொழியில் குறிப்பிட்டதானது, அண்ணன் இன்னும் சௌக்கியமாகச் சிறப்புற்று வாழ்ந்திருக்கவேண்டும்—அப்போது தான் தம்பிக்கும் சௌக்கியம் என்ற கருத்துடன் கடவுளை வேண்டுவதாக இங்கு, நாம் அருத்தம் கொள்ளவேண்டும்.

***

இனி, மற்றொரு அருத்தமும் கொள்ளலாம். இப்படிப் பிரார்த்திக்கும் தம்பி உண்மையாகவே அன்புள்ள தம்பியாய் இருக்கவேண்டும். அண்ணனோடு இருந்து நல்ல சுகம், நல்ல சந்தோஷம், நல்ல வாழ்வு கண்டிருக்கவேண்டும். அந்த அண்ணனையே கதியாய் அவனோடுதானே ஸதா காலமும் லக்ஷ்மணன் ராமரைப் பின்பற்றியதுபோல் சுற்றிக்கொண்டிருந்திருக்கவேண்டும். அண்ணனுடைய அன்புக்கு ஒப்பானது இவ்வுலகில் இல்லை என்று நல்ல நல்ல ருசியாக ருசித்திருக்கவேண்டும். எப்போது இவ்வளவு பிரியம் தன் அண்ணன் மேல் வைத்து ஒரு தம்பி நடந்துகொள்ளுகிறானோ அப்போது "ஆசைப்பட்ட பண்டம் அழுகிப் போகும்" என்பதுபோல, அந்த அருமை அண்ணனைத் தம்பி எமனுக்குக் கொடுக்கும்படியாகவே நேரிட்டுப் போவது அநேக இடங்களில் கண்ட சங்கதி. அன்பு வைத்த முக்கியமான இடத்தில்தான் மரணபாணம் வந்து விழுவது இயற்கை. அதற்கேற்ப அவ்வளவு ஆசைவைத்து நின்ற அண்ணன் திடீரென்று கண் மூடிக்கொண்டு கடவுளிடம் போய்விட்டிருக்கலாம். அண்ணன் போய்விட்டாலும் அவனிடம் வைத்த ஆசை போய்விடுமா? இந்த உடல் இருக்குமளவும் மறக்கவும்தான் முடியுமா? ஆகவே தன் உள்ளம் ஆற்ற முடியாமல் பேதமைப் புத்தியுடனே தனக்கு முந்திய அண்ணனைப்போல் இன்னும் அண்ணனைக் கொடும் ஸ்வாமி என்று கடவுளை நோக்கிப் பரிதாபமாய் வேண்டி தன் அண்ணனை நினைத்துக் கண்ணீர் சிந்துகிறான். இவ்வாறான கருத்தில் தன்னை யறியாமலே அண்ணனைத் தரும்படி கேட்பது பொருந்துமா என்று உரையாமலே பிரிவாற்றாமையால் அன்பின் சோகத்திலே சிக்கிப் பகவானை வேண்டுவது போன்ற பொருளில் நாம் இப் பழமொழியைக் கொள்ளவேண்டும்.

"பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்போல" அண்ணனிடத்து இவ்வளவு பிரியம்கொண்ட தம்பியானவன்—அந்த அன்பின் மகத்துவம்—உடற் பிறப்பின் உன்னதம்—தெரிந்த தம்பியானவன்—தனக்குப் பிறகு பிறந்த தம்பிகளிடம் எவ்வளவு ஆசை பற்றுதல் வைத்து நடந்துகொண்டிருக்கக் கூடும்? அத்தம்பிகளை எவ்வளவு உயிருக்குயிராக நினைத்து அவர்களிடம் அன்பு வைத்திருக்கக் கூடும்? இத்தகைய அன்பின் களஞ்சியமான ஒருவனுக்கு எத்தனை தம்பிகள் இருந்தாலும் போதுமென்று தோன்றுமோ? "பெறப் பெறப் பிள்ளை ஆசை" என்பதுபோல இன்னும் தனக்குத் தம்பிகள் பிறக்கவேண்டு மென்றே ஆவலாதிகொள்வான். தன் தாயின் வயிற்றிலிருக்கிற தன் தம்பி எப்போது பிறப்பான்—எப்போது தூக்கி விளையாடலாம் என்றே ஆசைப்படுவான். இப்படிப்பட்ட உத்தம புருஷனாகிய ஒருவன் "அண்ணன் தம்பிவேண்டும் இன்னும் தம்பிரானே" என்று கடவுளை நோக்கி அன்பு மிகுதியால் தன்னை மறந்து வேண்டுவதும் சாதாரணமாக உலகில் நடக்கக் கூடிய சங்கதிதான். இவ்வாறான அண்ணன் தம்பிகள் உலகத்தில் இருந்தால் குடும்பம் எவ்வளவோ பலமும் உன்னதமும் கௌரவமும் பெறுமே. அண்ணன் தம்பிகள் ஒற்றுமையாயுள்ள வீட்டை வெளியார் எவரும் எதிர்த்து விரோதப்படுத்திக்கொள்ள அஞ்சுவார்கள். ஒருவனை அடித்தால் மற்ற ஸகோதரக் கூட்டங்களெல்லாம் எதிர்க்க ஓடிவந்துவிடும் என்று பயந்து பின்வாங்குவார்கள். அவர்கள் ஜோலிக்கே போகமாட்டார்கள். அண்ணன் தம்பிகளோடு ஒற்றுமையும் அன்புமாய் வாழ்பவர்கள் அவர்கள் வாஸம்செய்கிற தெருவுக்கே இராஜாக்கள் போலிருந்துக்கொண்டு அதிகாரம் செய்யலாம். எல்லோரும் மதிக்க எவ்வளவோ சீரும் சிறப்பும் செல்வமுமாய் கைவீசி உலாவி வாழலாம். ஐயோ! இப்படிப்பட்ட நல்ல வாழ்வை, உடன் பிறக்கப் பாக்கியம் செய்திருந்தும்கூட அந்த உடன் பிறப்பின் அருமையை உணராமல் ஒருவருக்கொருவர் விரோதப்பட்டுக்கொண்டு ஊர் நகைக்க, தெரு சிரிக்கப் பாழ்படுகிறார்களே! என்ன பரிதாபம்!! இதற்குத்தான்—"இருந்தும் அநுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை" என்பதும் "கையில் கிடைத்தும் களிக்கக் கொடுத்துவைக்கவில்லை" என்பதும் இப்படியான சங்கதிகளுக்குத்தான்.

***

## 20. ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தால் பகைமை.

இந்தப் பழமொழியும் அன்பின் விளக்கத்தைக் குறிப்பதே. ஒருவனாய்ப் பிறந்தால் தனது ஒண்டித்தன்மையை எண்ணி, "ஒரு பிறப்பும் பிறப்பல்ல, ஒண்டி மரமும் தோப்பல்ல" என்றபடி தன் பிறப்பும் ஒரு பிறப்பா என்று சலித்துக்கொண்டு ஏங்குவான். எனக்கு ஒரு அண்ணன் தம்பி இருந்தால் எவ்வளவோ பிரியமாய் நடந்துகொள்வேனே என்று பலர் சொல்வதையும் கேட்டிருக்கிறோமன்றோ? இப்படி அன்பால் தவிக்கும் ஒரு தவிப்பு, இருவராய்ப் பிறந்தால் உடனே கெட்டுப் போகிறதாம். ஐயோ! அது எப்படித்தான் கெடுகிறதோ தெரியவில்லை. ஆனால், உலகத்தை நோக்கிப் பார்த்தளவில் அப்படிக் கெட்டுப்போன பலருடைய பகைமைச் சங்கதிகள் நமது செவிக்கு வந்து எட்டுவதால்

இந்தப் பழமொழியையும் நாம் உண்மை யென்றே நினைக்கவேண்டியிருக் கிறது. இப்படி அன்பு கெட்டவர்கள் மிருகங்களாய்ப் பிறக்கவேண்டியது தான் நியாயம். அது தப்பி மனித ஜாதிகளாய்ப் பிறந்தது உலகம் செய்த பாபம். இந்த சகோதரப் பதர்கள் மிருகங்களினும் கேவலமானவர்களே யாவர். மிருகங்களில் கூட ஆடு, மாடு முதலிய இனங்கள் ஒத்துவாழும் தன்மையன. புலி, கரடி முதலிய காட்டு விலங்குகள்தான் சச்சரவிடும். ஆகையால் இந்த ஸகோதரத் துரோகிகளை இந்த துஷ்ட விலங்குகளுக்கே ஒப்பிடவேண்டும். இவ்விதம் மனித ரூபத்தைத் தரித்து மிருகங்களாய் வாழும் வாலிபர்கள் இருக்கும் வீட்டில் "அண்ணன் தம்பியும்தான் ஜென் மப் பகை" என்று 18-வது பழமொழியைச் சொன்னால் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இந்த அண்ணன் தம்பிகள் பிறருடைய செல்வத்தைக் கண்டு மகிழ்வார்கள். பிறருக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். பிறருடைய நோய் நொடிகளுக்குத் துணையாயிருந்து உழைப்பார்கள். பிறருடைய அவசர காலங்களுக்கு ஆயிரம் மைல்கள் கடந்து சென்றாகிலும் உதவுவார் கள். ஆற்றில் பிரவாகம் வந்துவிட்டால் பிறருடைய கனத்த மூட்டை களையும் தாங்கிக்கொண்டு அபாயகரமான ஜலப்பெருக்கில் வெகு பாடுபட்டு அந்த மூட்டைகளை அந்தப் பிறரின் வீடு கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அந்தப் பிறர் தின்னுதத்தைத் தின்னச் சொன்னாலும் தின்பார்கள். இப் படி யெல்லாம் பிறர்க்கு உதவுகிற இந்த அண்ணன் தம்பிகள், ஐயோ! தங்களுக்குள் அவ்வளவு அன்பும் இரக்கமுமாய் உதவிக்கொள்ள மாட் டார்கள். ஒருவரை யொருவர் பகைப்பார்கள். ஒருவருக் கொருவர் ஒன்றை யொன்று நம்பிக் கொடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஒருவனுடைய மனைவி இன்னொருவன் மனைவியின் மேல் தீர்க்கமான பகை வைத்து நிற்பாள். அண்ணன் ஒன்பது மாதங்களாக வியாதிப் படுக்கையாய்க் கிடந்து மலஜலமும் படுக்கையிலேயே இருந்துகொண்டு கிடந்தாலும் சண் டாளத் தம்பி எட்டியே பாரான். அவன் அருகில் நின்றாலே தன் தேக சுகம் கெட்டுவிடும் என்பான். அவனைப் பலகையோடு தூக்கி வைத்துத் தேகம் எல்லாம் கழுவிய பிறகு தம்பியை யழைத்து சற்று தூக்கு என்று பிறர் சொன்னால், அந்தக் கழுவிய ஜலத்தில் தன் கால்பட்டாலே தனக்கு பிளேக்கு வந்துவிடும் என்பான். பேதை யண்ணனோ தம்பி மேல் ஆசை வைத்து, தம்பி தன் பக்கத்தில் உட்காரவில்லை யென்றும், தன் மேல் பிரியமா யிருக்கவில்லை யென்றும், தன்னோடு பேசவில்லை யென்றும், அதுவே தன் மனதைப் பெரிய பிணியாய் வாதிக்கிற தென்றும், எப் படியாவது தன் தம்பியைத் தன் பக்கத்தில் உட்காரச் சொல்லவேண்டு மென்றும் பல்லைக் காட்டி, வாயைக் காட்டி, நீர் பெருகும் தன் கண்களைக் காட்டி, வீக்கம் நிறைந்த தன் பரிதாபமுள்ள முகத்தைக் காட்டி, குச்சி போல் இளைத்துச் சதையேயில்லாத உலர்ந்த தனது கைகளைத் தூக்கித் தூக்கிப் பிறரை நோக்கி நோக்கி கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பான்.

இதைக் கேட்கிறவர்களுக்கோ தன்னை யறியாமலே ஆத்திரம் பொங்கிக் கொள்கிறது. உடனே தம்பியிடம் சென்று, என்னடா அண் ணன் அவ்வளவு கெஞ்சிக் கேட்கிறான், அவன் பக்கம் கொஞ்சம் போய் உட்காருகிறது தானே, அவனிடம் கொஞ்சம் பேசுகிறதுதானே, அவன் கூடப் பிறந்தவனல்லவா, இது வெல்லாமா பிறர் சொல்லுகிறது?

உனக்கே இருக்க வேண்டாமா? உன் நெஞ்சிலேயே அது குத்தித் துளைக்க வேண்டாமா? அக்கா என்று இருந்த பெண்தான் போய்விட்டாள். இனி அண்ணன் ஒருவன் தானே இருக்கிறான், அவனிடமாவது நீ அன்பு வைத்து நடக்க வேண்டாமா? உன் அக்கா போனதினால் எவ்வளவு பொல்லாங்கு நேர்ந்துவிட்டதென்று நீ கண்டாயா? எதற்கும் உதவாமற் போனாலும் பெருக்கென்றாவது ஒரு அண்ணன் இருந்தால் அது எவ்வளவோ மேலான சங்கதி யல்லவா? எவ்வளவோ கைப்பலம் இருப்பது போலல்லவா? உன் அண்ணன் எங்களைப் பரிதாபமாகக் கெஞ்சுவது இந்தப் பாழும் கண்கள் கொண்டு பார்க்கக் கூடவில்லையே! இன்றைக்கு அவனை உதவாதென்று வீசி விட்டால் இது சும்மா உன்னை விட்டுப் போகாது. நாளைக்கும் உன்னையும் இப்படியே மற்றவர்கள் வீசி விட்டுச் சட்டை செய்யாமற் போய்விடுவார்கள். பழி பாவம் வீணாய்ப் போகாது, அவனிடம் போய்ச் சற்றே உட்கார்ந்திரு என்றால் உடனே தம்பிக்குப் பொங்கிக் கொள்கிறது கோபம்!

ஓ! எனக்கு எந்த அண்ணனும் எந்த உறவும் அவசிய மில்லை. பற்றுதல் விட்டுப் போயிற்று. நான் ஜ்வரமாகக் கிடந்த போது அவன் என்னைப் பார்த்தானா—கவனித்தானா? அப்படித்தான் நானும் என்று என்னென்னவோ பேசி, தன் பேச்சே சரியென்று நினைத்துக் கொண்டு ஆரவாரிக்கிறான். இப்படிப்பட்ட தம்பியை என்னென்று சொல்லட்டும்?

இவ்விதமே அண்ணனும் தன் ஏழைத் தம்பியைக் கவனியாமல் அவனை நடுத்தெருவில் விட்டுவிட்டு தானும், தன் மனைவியும், மனைவியைச் சேர்ந்தவர்களுமாக இருந்து கொண்டு சுகிக்கிறான். இந்த சண்டாள அண்ணனை என்னென்று சொல்லட்டும்? "இருவராய்ப் பிறந்தால் பகைமை" என்பது இப்படியாக உலகத்தில் நடக்கும் அநுபவங்களைப் பார்த்து அதன்மேல் ஏற்பட்ட சொல்லாகும்.

ஆனால், உலகத்தில் எல்லோருமே இப்படிப் பகையாய்ப் போகிறார்களோ? அண்ணன் தம்பிகளுக்குள் எவ்வளவோ அன்பும் ஆதரவுமாய் இருக்கும் நற்குடும்பங்களும் இருக்கின்றன வல்லவா? கடைசியாக, ஒரு சங்கதி:—எவ்வளவு பகை உடற்பிறப்புக்குள் நேர்ந்தாலும்—ஒரு காலத்திலும் அடியோடு விட்டுப் போய்விடாது என்பது சத்தியம். வெளிக்குக் காட்டாவிடினும் உள்ளுக்குள்ளாவது குலை துடிக்காம லிராது. தன்னை யறியாமலே கண்ணீர் எப்படியும் வரச் செய்யும். அண்ணன், தம்பி, அக்காள், தங்கை பாசம் எவ்வளவு விரோதமிருந்தாலும் கடைசி வரை விட்டுப் போகிற சங்கதியாக இது ஆகவே ஆகாதென்பது திண்ணம் திண்ணமே. (தொடரும்.)

---

# பெண்கள் பக்கம்

## சந்திராவும் சரஸ்வதியும்

(166-ம் பக்கத் தொடர்ச்சி.)

சரஸ்வதி :—என்ன சந்திரா, மறுநாள் பொறுத்து வருவதாகச் சொன்ன நீ அப்படியே நின்று விட்டாய். நாமாவது போய்ப் பார்த்து வரலா மென்று புறப்பட்டேன்.

சந்திரா :—வீட்டில் விருந்துகள் விசேஷம். வெளியூரிலிருந்து "அவருக்கு" வேண்டிய நண்பர்கள் வந்திருந்தார்கள். பந்துக்களை விட "நண்பர்கள்" மிகவும் நெருங்கியவர்களல்லவா? என்னைத் தங்கள் ஸகோதரி போல் கருதி நடப்பவர்கள். என் பர்த்தாவுக்கு உயிருக்கு உயிராக விளங்கு பவர்கள். அவர்களை உபசரித்து அனுப்புவதில் பொழுதும் நாட்களும் எப் படியோ போய்விட்டன. அதனால் தான் வர முடியவில்லை. அன்றைய தினம் நான் பத்திரிகா ஞானம் அடைவது எப்படி என்றேன். அதற்கு இன்று பதில் சொல், கேட்போம்.

சரஸ்வதி :—அந்தக் கடைசிப் பேச்சை இன்னும் மறக்காமல் இருக் கிறாயே. மிக்க சந்தோஷம். நான் போன வருஷத்தில் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் புதிதாய்க் குடிவந்த ஒரு பெண்ணுக்குப் பத்திரிகையைப் படிக்கும்படி தூண்டினேன். அதற்கென்று ஒரு சுதேசமித்திரனைத் தரு வித்துக் கொள்ளும்படி சொன்னேன். ஆறுமாத சந்தா அனுப்பி சுதேச மித்திரனும் வந்தது. படித்துப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றுமே தெரிய வில்லை. ஆட்டுக் குட்டிக்கு மூன்று கண் என்று ஒரு சங்கதி இருந்தது; அதைப் பிரியமாய்ப் படித்து அதிசயப்பட்டாள். நீதி ஸ்தல வர்த்தமானங் களில் ஒரு பட்டதாரியான கணவன் தனது படியாத மனைவிக்குச் சூடு போட்டதாய் ஒரு வழக்கு பத்திரிகையிலிருந்தது. அதையும் சிரத்தையாய் வாசித்தாள். பிறகு, காங்கிரஸ் என்று வெகு விரிவாய் எழுதப்பட் டிருந்ததைப் படித்தாள். ஒன்றும் தனக்குத் தெரிய வில்லை யென்றும், காங்கிரஸ் என்றால் என்ன என்றும் வினவினாள். நான் அதற்கு, "காங் கிரஸ்" என்றால் இந்தியாவில் உள்ள ஜனங்கள் அனைவருக்கும் பிரதிநிதி போல் இருக்கும் மகா ஜன சபை என்றும், காங்கிரஸ் மகா சபை யொன்று நமக்குள் இருப்பதினால் தான் வெளி தேசத்தார் நம்மை மதிக்கிறார்கள் என் றும் விஸ்தாரமாகச் சொன்னேன். அவ்வளவையும் கேட்டு விட்டு, இந்த சங்கதியை நாம் அறிந்ததால் நமக்கு என்ன பிரயோஜனம்?—இதை விடப் புதிதாய் ஒரு பக்ஷணம் செய்யக் கேட்டுத் தெரிந்து கொண்டாலாவது நாலு பேருக்கு வைத்து நாமும் புசிக்கலாம். அதை விட்டு விட்டு, எங்கோ காங் கிரஸாம், அது மகா பெரிய சபையாம், வருஷத்திற்கு ஒரு முறை கூடுகிற தாம்—என்று தெரிந்து கொள்வதில் யாருக்கு என்ன லாபம் என்று சொல் லிச் சிரித்தாள். அவளுடைய அறியாமைக்கு மிகவும் வருந்தினேன். கடைசியில் தனக்குப் பத்திரிகையே வேண்டா மென்று சொல்லிவிட்டாள். அவளைத் திருத்துவது கஷ்டம் என்று நானும் விலகிக் கொண்டேன். அவள் பத்திரிகைக்குச் செலுத்திய சந்தாவை அவளிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, பத்திரிகையை என் பேருக்குத் தருவித்துக் கொண்டேன்.

சந்திரா:—அந்தக் கதையை என்னிடம் ஏன் சொல்ல வந்தாய்? அவளைப் போல் நானும் இருப்பேன் என்று எண்ணி விட்டாயா? ஒரு சங்கதியை என் அநுபவத்தில் நான் கண்டிருக்கிறேன். பெண்கள் பாடசாலையில் எவ்வளவு படித்தாலும் கூட படிப்பு வரப்பட்டவர்களுக்குத் தான் வருகிறது. மற்றவர்களோ தாங்கள் பள்ளிக் கூடத்தில் படித்த வரைக்குமே இருந்து விடுகிறார்கள். அதற்கு மேல் ஒரு பங்கு கூட உயர்வது கிடையாது. அவர்களும் அதைப் பற்றி நினைப்பதோ, அல்லது தாங்களே வருந்திக் கற்கத் துணிவதோ கிடையாது. நமது மூடப் பெண்கள் அவளுக்கு "படித்தவள்" என்ற பெயரைச் சூட்டிப் பண்டிதா மணியாக்கி விடுகிறார்கள். அந்தப் புகழ்ச்சியிலே அவள் மனம் மகிழ்ந்து போகிறாள். தன்னை மிகவும் படித்தவள் என்று எண்ணிக் கொண்டு கர்வித்து விடுகிறாள். அதற்கு மேல் படிப்புத் தனக்குத் தேவையில்லை யென்றும், தனக்கு எல்லாம் வந்து விட்டதென்றும் பொங்கிக் கொள்கிறாள். அவ்வளவுடன் படிப்பை ஒரு மூலையில் எறிந்து விட்டு ஹார்மோனியப் பெட்டியை எடுத்துக் கொண்டு, தனது மகா கந்தர்வக் குரலிலே கம்பிரமான சங்கீதம் பாடத் தொடங்கிக் கொள்கிறாள். அதிலே படிப்பை விடத் தனக்குப் புதுக் கௌரவம் புறப்பட்டுக் கொள்கிற தென்பது அவளது மூடமதியில் தோன்றுகிற சித்தாந்தம். அதற்குப் பிறகு நூல் கயிற்றையும் ஊசியையும் எடுத்துக் கொண்டு மகா பின்னல் போட ஐரோப்பியத் துரைசானியைப் போல் அமரிக்கையாய் உட்கார்ந்து கொள்கிறாள். இந்த வேலையிலேயே பாதி பொழுது போகிறது. பிறகு ஊர் வம்பு பேசப் பெண்கள் கூடுகிறார்கள். அதிலும் சிறிது நேரம் சிரித்தும் பேசியும் காலம் கழிக்கிறாள். பிறகு சடை பின்னல் போடத் தொடங்கி முற்றிலும் ஐரோப்பிய லேடி போல் தலை சீவி எல்லாம் ஆங்கிலத்தலுக்குகளாகச் செய்து முடித்துக் கொண்டு, மேலோக ரம்பையிலும் மேலாம் வடிவமைந்த பூலோக ரம்பையாய்த் தோன்றுகிறாள். இவ்விதமாக ஒரு பெண்ணின் பொழுது கழிந்து விடுகிறது. இந்தப் பெண்ணுக்குப் படித்த பெண் என்று பெயர் ஏற்பட்டு விடுகிறது. உள்ளுக்குப் பார்த்தாலோ பள்ளியில் படித்த படிப்பிலும் பாதி மறந்து போய் எழுத்துப் பிழையில்லாமல் எழுதவும் தெரியாத நிலையில் கிடக்கிறாள். இப்படிப்பட்ட பெண்ணை விவாகத்துக்குப் பெண் கேட்க வருகிறவர்கள், உங்கள் பெண் படித்திருக்கிறதா வென்று விசாரிக்கப் போனால், அதற்குப் பெண் வீட்டார் ஆகா, எங்கள் பெண் வெகு நன்றாக வாசித்திருக்கிறது என்று சொல்லி, ஹார்மோனியப் பெட்டியையும், பூப் பின்னலையும் எடுத்துக் காட்டுகிறார்கள். இதில் வந்தவர்கள் நல்ல நாகரீகமான பெண் என்று பூரித்துப் போய் விடுகிறார்கள். இப்படி விசாரிக்கிறவர்களும் அப்படி இப்படி என்று முக்கி முரண்டு ஆனா—ஆவன்னா—ஈனா—படித்து முடித்த பெண்கள் தானே? அவர்களுக்கு மனது திருப்தியாய் விடுகிறது. இனி இந்தப் பெண்ணை விவாகம் செய்து கொண்டு—படித்த பெண் வேண்டு மென்று ஆசைப் பட்ட கணவனுக் கல்லவா அவளது படிப்பின் லக்ஷணம் விளங்கப் போகின்றது. அப்போது அந்தக் கணவன் படித்தவள் என்று இந்த பாரக் கட்டையை மணந்தோமே என்று தன்னுள் கவலைப் படுவோனாகிறான். இது தான் பெரும்பாலும் நடக்கும் சங்கதி. படிப்பில் ஆசை பிறப்பது இயற்கையாலேயே வரவேண்டும். இயற்கையாக ஏற்ப டாவிடினும் சகவாசத்தாலாவது அது ஏற்படவேண்டும். அவ்வித உத்தமமான சகவாசங்கள் பெண்

களுக்குக் கிடைப்பதும், அதனால் அவர்களின் கல்வி உயர்வதும் மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. என்னைப் பொறுத்த மட்டில் நான் அத்தனை கேடு கெட்டவள் என்று எனக்குப் படவில்லை. நீ சொல்லுகிற விஷயங்களை என் உள் மனம் உடனே கிரகித்துத் தனக்கு விளங்க வைத்துக் கொள்வதால், நான் இன்னும் கல்வியில் தேறக் கூடியவளென்றே நினைக்கிறேன். நீ சொல்லிய எதிர் வீட்டுப் பெண்ணைப் போல, பத்திரிகையைப் படிக்கத் தொடங்கிய வாரத்திற்குள்ளாகவே, ஒன்றும் எனக்குத் தெரிய வில்லை யென்று வீசி நான் எறியப் பட்டவளல்ல.

சரஸ்வதி :—இவ்வளவு விஸ்தாரப் பிரசங்கம் செய்யும் உனக்கு நான் என்ன போதிக்கப் போகிறேன். பத்திரிகையைப் புதிதாக வாசிக்கத் தொடங்குகிறவர்கள், பத்திரிகையில் உண்டாகிற புது சந்தேகங்களுக்கும், புதிய பதங்களின் விவரம் தெரிந்து கொள்ளுவதற்கும், சில நாட்கள் வரையில் விடாமல் படித்து வந்தால், அந்த சந்தேகங்களை அப்பத்திரிகையே பிறகு தீர்த்து விடும். அதற்கான விடைகள், தெளிவுகள், சந்தேக நிவர்த்திகள் அப் பத்திரிகையிலேயே பல சந்தர்ப்பங்களிலும் வந்து விடும். விடாமல் ஒரு ஆறு மாதம் பத்திரிகையைத் தொடர்ந்து வாசித்தால் பத்திரிகையைப் படிப்பதிலுள்ள ருசிகரம் இன்ன விதமானது என்று தெரிந்து விடும். பிறகு நகையை விற்றுவது வாயையும் வயிற்றையும் கட்டிப் போட்டாவது பத்திரிகைக்கு சந்தா செலுத்திப் பத்திரிகையைப் படிக்கும்படி அதிலுள்ள இன்பமே தூண்டும். பத்திரிகையைப் படிக்கத் தொடங்கும் போதே கையில் ஒரு பென்ஸிலுடனே படிக்க வேண்டும். நல்ல பதங்களையும், ஸ்வாரஸ்யமான இடங்களையும் அடையாளங்கள் செய்து கொண்டு சென்று, எல்லாம் வாசித்த பிறகு பத்திரிகையை எறிந்து விடாமல் பொன் போல் போற்றிப் பத்திரமாய்ச் சேர்த்து வைத்து வருட முடிவில் பைண்டு செய்து விட வேண்டும். வாரப் பத்திரிகை, தினப் பத்திரிகை யானாலும் கூட, மாதப் பத்திரிகை போல் சேர்த்து வைத்துப் புஸ்தக ரூபமாகப் பயிண்டு செய்து விட்டால், அது பிறகு எவ்வளவு பணம் கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்க முடியாத மகா பெரிய ஆஸ்தியாகி விடும். (தொடரும்.)

## II

குமாரத்தியின் அருமை :—அமெரிக்க கோடீச்வரரான "ஹென்றி போர்ட்" என்பவர் தமது குமாரத்தியின் விவாகத்தில் 6-கோடி பவுன் பெண்ணுக்குச் சீதனமாகத் தரப் போகிறார். பெற்றவர்க்குத் தெரியும் பிள்ளையின் அருமை.

***

ஸயன அறை :—கணவனோடு எவ்வளவு மனஸ்தாபப்படினும், பிறகு அக்கணவனுடனேயே தனித்த அறையில் உறங்க வேண்டியிருக்கிறதன்றோ? பெரிய காஞ்சீபுரத்தில் தன்னை ஏற்கெனவே விலக்கி விட்ட கணவனோடு பிறகு ஸயன அறையில் உறங்கிய பெண், மனஸ்தாபம் மறவாத தன் கணவனால் உள்தாள் இட்ட அறைக்குள் கழுத்தறுப்புண்டு மாண்டாள். எவ்வளவு கலகம் வரினும், மறுபடியும் கணவனிடமே தான் வாழ வேண்டியவளாய் இருக்கிற ஒரு பெண், அந்தக் கணவன் மனஸ்தாபப்படும்படியும் கலக மிடும்படியும் ஏன் இடம் வைத்துக் கொள்ள வேண்டுமோ? இதனால் அவன் மனதும் கல்லாகிக் கொலை பாதகனாகிறான். இருவருக்கும் க்ஷேமமில்லை ; கல்யாண சுகம் என்பதும் இதுவேயோ?

# விநோதம்

பூனே என்றால் என்ன?

தாய் :—மகளே! பூனையை நீ பார்த்திருக்கிறாயா? நாம் தூங்கும் பொழுது திருட்டுத்தனமாக உள்ளே வருகிறதே அதுதான்.

மகள் :—ஓகோ! தெரிகிறது. நான் நித்திரை செய்த பிறகு உன் காலை வந்து மெதுவாகச் சுறண்டுமே—என் தந்தையா?

***

டாக்டரின் பதில் :—

நோயாளி :—ஐயா, இன்னும் வயிற்றுவலி தீர வில்லை. மிக்கப் பாடானபாடு. நேற்றைய மருந்தால் சுகப்படவில்லை. இன்னும் வேறு ஏதாவது நல்லதாக மருந்து கொடுங்கள்.

டாக்டர் :—எனக்குத் தெரியாதது உனக்குத் தெரிந்து விட்டதோ? நான் படித்துப் பாஸ் செய்து இந்த வேலைக்கு வந்து 30 வருஷ அனுபோகம் இருக்கையில்—நீ எப்படி வேறு மருந்து கேட்டாய்? இனி சுக மில்லை யென்று கண்டபடி உளறுதே. நேற்றைய மருந்தே இன்றும் சாப்பிடு, போ. மகா தெரிந்தவன்—என்னைப் பழிக்க வந்து விட்டாயோ?

(நோயாளி நடுங்குகிறன்.)

***

உடனே பதில் :—

எதிர் வீட்டுக்காரர் :—இந்தக் காலத்தில் ஒரு கேட்டிலிருந்து பல கேடுகள் நேருகின்றன.

பக்கத்து வீட்டுக்காரர் :—ஆமாம்! அப்போதே முன் யோசனையுடன் நீர் விவாகம் செய்து கொள்ளாதிருந்தால், உமக்குக் குமாரனும் இரான், அவனுக்கு மனைவி யென்று ஒரு பெண்ணும் வராள், இந்த மாமி மருகி கலகமும் இருந்திருக்காது. என் செய்வது—"ஒரு கேட்டிலிருந்து பல கேடுகள் நேருகின்றன."

***

மூன்று காலங்கள் :—

—"எங்கே மூன்று காலங்களையும் உதாரணத்தோடு சொல்லு?"

—"அப்போது நல்ல வேலை யிருந்து சம்பாதித்த காலம்—அது இறந்த காலம். (2) இப்போது முன் ஸம்பாதித்ததைச் செல்வச் செருக்கால் வாரி இறைக்குங் காலம்—இது நிகழ் காலம். (3) இனி யாவும் தொலைந்து கைவறண்டு குந்தி ஏங்குங் காலம்—இது எதிர் காலம். ஆகக் காலங்கள் மூன்றும்.

***

டாக்டர் என்ன சொன்னர் :—

கருப்பன் :—என்னடா முனியா, உன் காலைக் காட்டினயா? டாக்டர் என்ன சொன்னர்?

முனியன் :—இந்தக் கால் இருக்கிறவரை இந்த மேகப்புண் இப்படித்தான் அடிக்கடி வரும். முழங்கால் வரையில் காலையே வெட்டி விட்டால் அப்பால் இந்தக் காலில் எப்படி வரும் என்றர். எங்கே வெட்டி விடுகிறரோ வென நடுங்கி வந்துவிட்டேன்.

கிழக்கே போக :—

கிராமவாசி :—என்ன ஐயா, கிழக்கே வண்டி எப்போ போகுமென்றால், இன்றைக்குப் போகும், டிக்கட்டு ஐந்து ரூபா என்கிறீரே?

டிக்கட் தருவோன் :—உனக்குப் பதில் சொல்ல என்னால் இல்லை. கிழக்கே சென்னபட்டணம் வரைபோக 5 ரூபா டிக்கட்டு. அந்தக் கிழக்கிலே எந்த ஸ்டேஷனில் உன் வீடோ அங்கே நீ இறங்கலாம். ஆகவே முழு டிக்கட்டே எடுத்துக் கொள்ளு.

***

கடைக்காரர் உபசாரம் :—

வியாபாரி :—ஐயா வாருங்கள், உட்காருங்கள், அடே! ஐயாவுக்கு வெற்றிலைப்பாக்கு ஏலம் கிராம்பு கொடு. நீங்கள் வெற்றிலை போடுங்கள்.

சாமான் வாங்குவோன் :—அது இருக்கட்டும், பருப்பு ரூபாய்க்கு எத்தனை படி?

வியாபாரி :—தங்கள் விஷயத்தில் லாபம் வைக்கமாட்டோம். அடே! அந்த முழு மூட்டையில் ஐயாவுக்கு $2\frac{1}{2}$ படி பருப்பு அளந்து போடு.

சாமான் வாங்குவோன் :—என்ன ஐயா, அடுத்த கடையில் $3\frac{1}{2}$ படி போடுகிறார்களே? இதற்குத்தான் இந்த வெற்றிலைப்பாக்கோ?

***

புதிய தேர்தல் :—

சபாபதி :—சென்ற முறையில் சட்ட சபைத் தேர்தலுக்காக வேண்டி நான் அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன், அந்தரத்திலே பறப்பேன், அந்த மலையைத் தூக்குவேன், இந்தக் குளம்—கோயில்—சத்திரம்—வீதிகளெல்லாம் புதுப்பித்து விடுவேன்—என்று ஆரவாரித்து ஓட்டுகள் பெற்றுப் பிறகு இருந்த இடம் கூடத் தெரியாமல் மறைந்தவர்களெல்லாம் இப்போது மறுபடியும் புறப்படுவார்கள்! இனி அச்சுக்கூட்டத்தாருக்கு நல்ல வேலை கிடைக்கும். நீ யாருக்கு 'ஓட்' கொடுக்கப் போகிறாய்?

உமாபதி :—எல்லோரும் என் வீடு தேடி வருவார்களல்லவா? அவர்கள் என்னை வேண்டி முடியும் வரையில் அவர்களின் முகத்தையே கவனித்தபடி இருப்பேன். அந்த முகத்தில் காணும் ஸ்வயநலப் பிரியத்தையும், தேச வாஞ்சையையும் உற்று நோக்கித் தாரதரம் தெரிந்து கொண்டு பிறகு என் பிரியப்படி செய்வேன். இந்த முறை வீண் படாடோபத்தால் எவரும் என்னை ஏமாற்ற முடியாது. மோட்டார் எமனைப் பார்த்து மயங்கிவிடமாட்டேன்.

***

அதற்கு இது இடமல்ல :—

குப்பன் :—என்ன ஓய் சுப்பா, உன்னையும் என்னையும் ரிக்ஷாவண்டி இழுக்குமா? நாம் இருவர்களும் பருத்தவர்களல்லவா?

சுப்பன் :—உமக்குப் பதில் சொல்ல இது இடமல்ல. வேறிடத்திலிருந்து நீர் இப்படிக் கேட்டிருந்தால் சரியான பதில் உடனே புறப்பட்டுவிடும். என்ன செய்கிறது—அப்படிப் பதில் வாராதது உம்முடைய அதிர்ஷ்டம்!

# அரசியல் ஞானம்

(290-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒவ்வொரு அரசியல் யந்திரத்திலும் மூன்று அங்கங்கள் உண்டு.

1. சட்டம் செய்யும் சபைகள்.

2. அரசியலை நிர்வகிக்கும் சபைகள்.

3. நியாயம் வழங்கும் அதிகாரிகள்.

குறித்த ஒரு சட்டத்தை நிறைவேற்றவும், நிறைவேற்றிய சட்டத்தை உபயோகிப்பதும், சமயம் நேரும்பொழுது சட்டத்தை விளக்கிக் காட்டுவதும் மேற்கண்ட மூன்று அங்கங்களுடையவும் காரியமாகும். இம் மூன்று அங்கங்களும் ஒன்றுக்கொன்று கீழ்ப்படியாத சம அந்தஸ்து கொண்டவைகளாகும். இதனால் ஒரு அங்கத்துக்கு மற்றொரு அங்கம் இளைக்காமல் ஒன்றின் மேல் மற்றொன்று கண்ணாகவே இருந்து, தன் தன் உரிமைகளைக் காத்துக்கொள்ளும் பொருட்டு—அதற்காக ஒவ்வொரு அங்கமும் மற்றைய அங்கங்கள் செய்யும் தவறுகளையும் அக்கிரமங்களையும் உடனுக்குடன் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டிவிடும். இப்படிக் குற்றம் எடுத்துக் காட்டுவதில் தனக்கு நல்ல பெயர் கிடைக்குமென்று ஒவ்வொரு அங்கமும் ஆவலாய் எதிர்பார்க்கும். பொதுஜன பயத்தினால் ஒவ்வொரு அங்கமும் நேர் வழியாகவே செல்ல முயலும். இவைகளினால் உண்டாகும் பரஸ்பர பயமும் பொறுமையும் சேர்ந்து—தேசத்தையும், மனிதனின் ஸ்வதந்திர உரிமைகளையும் ஒரு ஒழுங்கில் வைத்துப் பாதுகாக்கின்றது.

***

இனி, மேற் சொல்லிய மூன்று அங்கங்களில் ஒவ்வொரு அங்கத்தையும் குறித்துத் தனித் தனியே ஆராய்வோம்.

(1) சட்டம் செய்யும் சபைகளைப்பற்றி முதலில் சொல்வோம்.

சட்டம் செய்யும் சபையானது எவ்விதப் பிரிவும் இல்லாமல் ஒரே சபையாகவே சில தேசங்களில் இருக்கின்றது. சில தேசங்களில் சட்டம் செய்யும் சபையை கீழ் சபை யென்றும், மேல் சபை யென்றும் இரு வகையினதாகப் பிரிப்பர்.

1. கீழ் சபை எனப்படுவது பொதுஜனப் பிரதிநிதிகளால் அமைக்கப்பெற்றது. நியாயமாகக் கீழ்ச் சபைக்குத்தான் அதிகமான உரிமைகள் உண்டு. அதுவே உண்மையில் அரசு புரிகிறது.

2. மேல் சபையின் அங்கத்தினர்கள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விதமாக நியமிக்கப்படுகின்றனர். சில தேசங்களில் பிரபுக்களும், சில தேசங்களில் 'மைனாரிட்டி' என்னும் சிறு பான்மைக் கக்ஷியினரும் மேல் சபையில் நியமிக்கப்படுவார்கள். மைனாரிடி என்ற சொல்லுக்கு சுருங்கிய தொகையினர் என்று அர்த்தம்.

முக்கியமான எல்லா அலுவல்களையும் கீழ்ச் சபையே கவனித்தாலும், 'மேல் சபை'க்கும் சில காரியங்களைக் கவனிக்கும்படி வரும். இப்படி இந்த 'மேல் சபை' கவனிக்கிற காரியங்களிற் பல கீழ்ச் சபைக்கு விரோதமாகவே இருக்கும். ஜனப் பிரதிநிதி சபையான கீழ்ச் சபை வெகு பாடுபட்டு ஒரு பிரேரணையை நிறைவேற்றி, அதை மேல் சபையாகிய பிரபுக்கள் சபையின் அங்கீகாரத்துக்கு அனுப்பினால், உடனே மேல் சபை வெகு அலக்ஷியமாய் அந்தப் பிரேரணையைத் தள்ளும்படி செய்து நிறைவேறாதவாறு செய்துவிடும். இதிலிருந்து ஆத்திரம் பொங்கி சமீபத்தில் ஜனப் பிரதிநிதிகளில் ஒரு சாரார் எப்போது பார்த்தாலும் எதிரிடையாக இருக்கிற இந்த 'மேல் சபை'களையே அடியோடு அழித்துவிடலா மென்று மேனாட்டில் வாதம் செய்யத் தொடங்கினர்.

1. மேல் சபையானது கீழ்ச் சபைக்கு விரோதமாக நின்றால், அது விஷமத்தனமாகும்.

2. மேல் சபையானது கீழ்ச் சபையின் அங்கத்தினர்களான ஜனப் பிரதிநிதிகளுக்குச் சாதகமாக நின்றாலோ, அப்போது மட்டும் அது இருந்து வரலாம்.

இதுவே மேற்கண்டவர்களின் வாதம்.

இப்படி இவர்கள் வாதம் செய்யினும் மேல் சபைகளினால் சில அவசிய நன்மைகள் உண்டு. அதை அடுத்த பத்திரிகையில் விளக்குவோம்.

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் பி. ஏ.

---

## வாய் திறவாதே.

உன்னிடத்தில் அவர்கள் மற்றவர் மீது வேண்டிய வரை புகார் சொல்வதெல்லாம்—நீ அவர்களைக் கண்டித்துப் பேசுவாய் என்று எதிர் பார்த்துத்தான்.

நீ அப்படி எதிர்த்துக் கண்டித்து, அதனால் சண்டையும் உண்டாகிய பிறகு, ஒரு நிமிஷ நேரத்தில் உன்னிடம் புகார் சொல்லியவர்களும்—அப்புகாரின் மேல் நீ எதிர்த்தவர்களும் ஒன்றாகிக் கூடிக் கொள்வர்.

எதிர்த்த நீயோ தனி மனிதனாகி அப்போது எங்குவாய் ஆதலின் அவசரப்பட்டு வாய் திறவாதே.

(1) சொல்வதைக் கேள். (3) தலையை அசை.

(2) அதை நினை. (4) ஆனால் வாய் திறவாதே.

# சிறு மணித் திரள்

(303-ம் பக்கத் தொடர்ச்சி)

154. துவேஷத்தை விட்டுச் சந்தோஷத்தைத் தொட்டு வாழுங்கள். துவேஷத்தையே நாம் பாராட்டுவதில் நமது மனமே முதலில் விஷமித்துப் போய்விடுகின்றது. அதிலிருந்து நமது நற்குணங்களும் பாழ்படுகின்றன.

155. உள்ளதை மறைத்து, அவரவர் மனதை ஆற்றிக் கொள்ள இஷ்டமானபடி தத்துவம் பேசுவது எளிது. (மகாத்மா)

156. "நமது பையன்கள் பால்ய "தூரப்யாஸங்களை"—"தங்களுடைய ஜீவதாரமான சக்தியை—சிதற விடாமல் காப்பாற்றிக் கொள்ளக் கற்கும் வரையில்—சரியான ஆண் மக்களை இந்தியா அடைய முடியாது."

157. "ஸ்திரீ புருஷர் கூடுதலைப்பற்றியே எங்குப் பார்த்தாலும் பேசப் படும்போது, பள்ளிச் சிறுவர்களின் மனது எப்படிக் கெடாம லிருக்கும்? நகர வாழ்வில் சாதாரணமாகத் தென்படும் நிலைமையும், புஸ்தகங்கள், நாடகங்கள், ஸினிமாக்களும், வீடுகளில் நடக்கும் காரியங்களும் மற்றும் பல சடங்குகளும் சிறுவர்களின் மனதில் காமத்தீயை மூட்டிவிடுகின்றன. ஏற்கெனவே அழுக்கான மனதுடைய சிறுவர்கள் போதாக் குறைக்குத் தங்களைச் சுற்றி நடப்பதையும் பார்க்கும்போது எப்படிச் சும்மா விருப்பார்கள்?" (மகாத்மா)

158. ஒரு பெண் பிறந்தது முதல் அது கணவன் வீட்டிற்குச் செல்லும் வரையில் விவாகப் பேச்சுகளே அப்பெண்ணுக் கெதிரில் பேசப் படுகின்றன. அப்பெண்ணுக்கு எப்போது விவாகம், யாருக்குக் கொடுக்கப் போகிறாய், உன் பெண் பெரிய பெண்ணாய் விட்டதா-என்பது போன்ற இதே பேச்சுகள் தான் ஸ்திரீ ஜனங்களால் ஸதா காலமும் உச்சரிக்கப் படுகின்றன. எனவே "காம விகாரப் பூச்சி"யின் வளர்ச்சிக்கு இந்த ஸம்பவங்கள் அநுகூலமாகி விடுகின்றது.

159. தொழிலாளர்கள், சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்வது முதலாளிக ளிடத்தில் அவர்களுக் கேற்பட்ட விரோதத்தினா லல்ல வென்பதையும், பரஸ்பரம் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட—தொழிலாளர்கள் சங்கங்கள் மிக உதவியா யிருக்கு மென்பதையும் முதலாளிகள் உணரவேண்டும்.
(ஸர். கே. பி. புட்டண்ண செட்டியார்.)

160. டாக்டர் ஆர்மண்டி என்ற ஒரு பிரபல ரஸாயன நிபுணர் 2-லக்ஷத்து 50 ஆயிரம் பவுன் செலவழித்துச் செய்த ஆராய்ச்சியிலிருந்து 100 பவுண்டு எடையுள்ள மரத்தூளைக் கொண்டு 65 பவுண்டு சக்கரையை உற்பத்தி செய்யக் கூடுமென்று கண்டு பிடித்திருக்கிறார்.

161. உத்தியோகமோ, மேல் பதவியோ, செல்வமோ, கிராக்கியோ எதுவோ ஏற்கெனவே முன்பு கிடைத்தவர்களுக்கே தான் மீண்டும் கிடைக்கிறது. இல்லாதவர்களுக்கு ஒருபோதும் இல்லை.

162. ஒரு வருஷத்தில் கௌரவப் பட்டம் பெற்றவர்கள் அத்துடன் திருப்தி யடைவதில்லை. அடுத்த வருஷப் பட்ட ஜாப்தாவிலும் தங்களுக்கு இன்னும் உயர்ந்த பட்டம் கொடுக்கப்பட் டிருப்பதைப் பார்க்க மாட்டோமா வென்று வாயூறுகிறார்கள். ஐயோ பாவம்!

163. பெண்களுடைய பெயரானது எளிதில் உச்சரிக்கப்படுவதாயும், கொடுமையான பொருள் இல்லாததாயும், தெளிவான பொருளுடைய தாயும், அழகானதாயும், மங்களமானதாயும், நீண்ட உயிரெழுத்தைக் கடைசியில் உடையதாயும், ஆசீர்வாதச் சொல்லைப் போன்றதாயும் இருக்க வேண்டும். (மனு நூல்)

164. வண்டியில் வருபவனுக்கும், தொண்ணூறு வயதுக்கு மேற் பட்டவனுக்கும, ரோகியா யிருப்பவனுக்கும், சுமை சுமந்து வருபவனுக்கும், ஸ்திரீகளுக்கும், அரசனுக்கும், வேதாத்தியயனம் முடித்து விரத சமாவர்த் தனம் செய்துவந்த ஆசாரியனுக்கும், விவாகம் செய்து கொள்ளப் போகும் வரனுக்கும் மார்க்கம் விட்டு விலகி ஒதுங்கி வழிவிட வேண்டும்.

165. "ஒரு கோர்ட்டு அல்லது நியாய சபை தராசுக்குச் சமானம். பட்சபாதமில்லாத, குருட்டுத் தனமான, ஆனால் சாமர்த்தியத்துடன் கூடிய ஒரு வயோதிக ஸ்திரீயின் கையில் அத்தராசு இருப்பதாக வைத்துக் கொள்ள வேண்டும். தர்ம தேவதையான அந்த ஸ்திரீ வெளிப் பார்வை யைக் கண்டு ஏமாந்து போகாமல் உண்மையை நன்றாக உணர்ந்து நியாயம் வழங்குவதற்காக அத்தேவியின் கண் வேண்டுமென்றே பார்வை யற்றதாக அமைக்கப்பட் டிருக்கிறது." (மகாத்மா)

166. "ஸமயத்துக் கேற்ற ஸமரஸ புத்திதான் அழகானதென்று என்னுடைய அனுபவ பூர்வமாக நான் இப்போது சொல்வேன்."

(மகாத்மா)

167. "ஸத்தியம் கடினமான விஷயம்; ஆனால், அதை எடுத்தாளத் தொடங்கிய பின் புஷ்பத்தைப் போல் இலேசா யிருக்கும்." (மகாத்மா)

168. "குதிரையைக் குளக் கரைக்கு ஓட்டிச் செல்லலாம்; ஆனால் அதைக் குடிக்கச் செய்ய முடியுமோ?" (மகாத்மா)

169. "எல்லோரும் சாவித்திரிகளாய்விட மாட்டார்கள்."

(ஸ்வாமி சித்தானந்தர்.)

170. "சுய நம்பிக்கை யுண்டானால் ஸ்வராஜ்ய முண்டு." (மகாத்மா)

171. "ஜனங்கள் காங்கிரஸையே ஆதரித்து அதன் செல்வாக்கைக் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் மிகுந்த தியாகத்தின் பேரில் இந்தியா வின் சிறந்த புதல்வர்களால் இந்த ஸ்தாபனம் வளர்க்கப்பட்டு வந்திருக் கிறது." (ஸ்வாமி சத்திய தேவர்.)

172. ரோகத்திலும், துக்கத்திலும், துர்ப்பிக்ஷத்திலும், சத்துருக்க ளுடைய உபத்திரவத்திலும், ராஜ விசாரணையிலும், ஸ்மசானத்திலும் எவன் தன்னை விட்டகலாதிருக்கிறானோ அவனே உண்மையான பாந்தவ்ய முள்ளவன்.

173. சில மூடர்கள் பணக்காரர்களுக் கென்று தங்கள் மானத்தைக் கூட விட்டு உடம்பு ஒடிய உழைக்கிறார்கள். அந்தச் செல்வத் தந்திரிகளோ தங்கள் பணப் பெயரை மட்டும் வெளியில் காட்டிவிட்டு, எவ்வித செலவு மில்லாமல்—நன்றி பாராட்டுவதான—ஒரு பல்லிளிப்புச் சொல்லில் எல்லோரிட மிருந்தும் இலவசத்தில் வேலை வாங்கிக் கொண்டு, ஜாடையாகக் கண்ணைத் துடைத்து அனுப்பி விடுகிறார்கள்.

174. எவன் ஸத்தியமான வஸ்துவை விட்டு, அஸத்தியமான வஸ்துவை நாடுகிறானோ, அவன் ஸத்திய வஸ்துவை யிழப்பதுடன், அதி சீக்கிரத்தில் அஸத்திய வஸ்துவையும் இழந்து தவிக்கிறான்.

175. நதிகள், நகங்களையுடைய நாய் கரடிகள், கொம்புகளுள்ள மிருகங்கள், ஆயுத பாணிகளான மனிதர்கள், ஸ்திரீகள் ஆகிய இவர்களிடம் நம்பிக்கை வைக்கலாகாதாம். புருடர்களிலும் வெகு பேரை நம்பக்கூடாதென்று உலக அநுபவம் சொல்லுகிறது.

(தொடரும்.)

## இதற்கு அர்த்தமென்ன?

பானையில் சாதம் இல்லை, இன்றைக்கு என் வீட்டுக்காரனின் சிற்றப்பாவும் வந்து உட்கார்ந்து கொண்டார். அவருக்கே எல்லாம் சரியாய்விட்டது. நான் பழயது உண்டேன் என்று வீட்டுப் பெண் மற்றொரு பெண்ணிடம் சொல்வது எப்படியோ சிற்றப்பாவுக்கு எட்டிவிடுகிறது. இவ்வளவு கடுகடுப்பான இடத்தில் இனி உண்ண நல்ல இரத்தமுள்ள மனம் ஒப்புமா? "பழயது உண்டேன்" என்பதற்கு இங்கு என்ன கடு கடுப்பான அர்த்தமென்று தெரிகிறதா?

## உலகப் போக்கு.

பணக்காரர்கள் வெறுங்குழம்பை ஊற்றி யனுப்பினாலும், அது விருந்து; அது பணக்காரர் வீட்டுப் புசிப்பு.

ஏழை பல பக்ஷணங்களுடன் உபசரிப்பினும் அது என்னவோ சாதாரண போஜனம்.

ஏழை மட்டும் பணக்காரரின் விசேஷங்கட்கு ஓடிவர வேண்டுமாம். பணக்காரரோ ஏழையின் தந்திக்கு-விசேஷத்திற்கு ஒரு ஒப்பாரிக் கடிதம் எழுதிவிட்டால் போதுமாம்.

# புஸ்தகம் ஹஸ்த பூஷணம்

"சர்க்கரையும் தேனும் கற்கண்டும்" இனிமைதான். ஆயினும் அவற்றை அப்படியே உண்பது நல்லதல்ல; திகட்டிப்போம். சரீரத்துக்கு ஏதேனும் தொந்திரவை விளைவிக்கும். அவைகளைச் சேர்த்து மிட்டாயாகச் செய்து உட்கொண்டால் சிலாக்கியமாகும். அதுபோல் விஷயம் ஒன்றாயினும் அதை முன் பின் தொடர்ச்சியாய்ப் படிப்பவர்க்குப் பரமாநந்த முண்டாகும்படி அலங்கரித்தெழுதுவது புத்திசாலியின் லக்ஷணம். ஒரு பெரிய மனிதரைக் காணச் செல்லுவோன் அவரிடம் போய் தடி மரம் போல் நின்றால் காரியம் ஆய்விடுமா? அப்பெரிய மனிதருக்குத்தான் அன்பு உதிக்குமா? அவருடைய நிலைமையை யறிந்து தகுந்தபடி க்ஷேமம் உசாவி, உசிதமான பேச்சுகள் பேசி, தனது நடை பாவனைகள் ஆதியவற்றால் அவரை ஸந்தோஷப்படுத்துவதன்றோ ஸாமர்த்தியம். இதைப்போல் இந்நாளில் எழுதுகோல் பிடிக்கத் தெரிந்த எல்லோரும் புத்தகங்கள் எழுதத் தொடங்கிவிட்டனரேனும், மிகச் சிலரே அப்புத்தகத்தைப் பிறர் படித்து ஆநந்தமடையும்படியாய் எழுதக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கின்றனர். ஒரு கதையை ஆரம்பம் செய்யும்போதே கிரந்த கர்த்தாவின் ஸாமர்த்தியம் புலப்பட்டுவிடும். இரத்தினத்தைப் பார்க்குமுன் அதன் ஒளி எப்படி வீசுகிறதோ அப்படியே கதையைப் படிக்குமுன் அதன் முதற் பக்கமே கதையின் ஸ்வாரஸ்யத்தை விளக்கப் போதுமானதாயிருக்கும்.

***

"புத்தகம் ஹஸ்த பூஷணம்" என்று பெரியோர் கூறுவர். சிறுவர் சிறுமியர்களின் கையில் எப்போதும் புத்தகம் இருப்பது கண்களுக்கு இன்பம். மனதுக்கு ஆநந்தம். ஒரு ஆசாரியனைப்போல் நல்லுரைகளைப் போதித்துச் சன்மார்க்கத்தில் நடத்துவதற்குப் புத்தகமே யோக்யமானது. இருட்டு வேளையில் தனி வழியே செல்லும் ஒருவன் கையில் ஒரு கோலைக் கொண்டு போவதுபோல், உலகமாகிய இருட்டுப் பாதையில் இளைஞர்கள் புத்தகமாகிய கோலைக் கொண்டுபோவது நன்மை. மகா புத்திமான்களோடு ஸம்பாஷிப்பதால் நம்முடைய புத்தி யுக்திகள் விர்த்தியாகும். புஸ்தகத்தைப் படிப்பது அதை எழுதுபவரோடு ஸம்பாஷிப்பது போலாகும். ஆதலின், அதுவே நல்ல ஸஹவாஸமென்போம். ஒரு அறை நிறையப் புத்தகங்களை அடுக்கிவைத்து நினைத்தபோது அவைகளை எடுத்துப் படிப்பது ஸத் காலக்ஷேபமாகும். நம்முடைய காலத்தை வியர்த்தமாக்குவதே பாபகரம். மனது ஒரு நிமிஷ நேரமும் சும்மாவிராது. கட்டுத்தறியிலுள்ள மாட்டை யவிழ்த்துவிட்டால் அது பிறருடைய வயலிற் புகுந்து பயிர்களை மேயும். அதுபோல் சலனமுடைய மனதும் பலவித பாப கர்மங்களிற் சென்றுழலும். ஒவ்வொரு முறையும் உண்டாகும் ஸந்தேகத்தை நிவர்த்தி செய்ய இரண்டே வழிகளுண்டு. ஒன்று புத்தகங்களைப் பார்ப்பது; மற்றொன்று பெரியோர்களைக் கேட்பது. எப்போதும் பெரியோர்களின் ஸகவாஸம் கிடைக்குமா? அவர்களை நாம் தேடிச் செல்ல வேண்டும். புத்தகங்களோ அவ்விதமல்ல; நம்மிடமே இருக்கின்றன. எனவே அவற்றைப் பன்முறையும் வாசித்து அறிவில் தேறலாம். ஆதலின் ஒவ்வொருவரும் பலவித புத்தகங்களை வாங்கிச் சேகரித்து வைத்து நற்பயன் அடையக் கடவர்.

---